REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK


2023 ஒக்டோபர் 3 செவ்வாய்க்கிழமை

# தினகரன்
THINAKARAN

வரு. 91 இல. 234 | Tuesday 03, October, 2023 | 16பக்கங்கள் | 50/-




## சிரேஷ்ட பத்திரிகையாளரான
# எட்மண்ட் ரணசிங்க விருது வழங்கல் விழா இன்று
### ஜனாதிபதி தலைமையில் இடம்பெறும்



நாட்டின் சிரேஷ்ட பத்திரிகை கலைஞரான "திவயின" பத்திரிகை ஆசிரியர் பீடத்தின் முதலாவது இணை ஆசிரியரும் பணிப்பாளருமான எட்மண்ட் ரணசிங்கவை கௌரவிக்கும் நிகழ்வு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் இன்று (03) மாலை 3.00 மணிக்கு ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. பத்திரிகை துறையில் விலைமதிப்பற்ற பணிகளை 06

# வீட்டிலிருந்தவாறே வாகன வருமான வரி அனுமதிப்பத்திரம்
### ஒக்டோபர் 07 முதல், புதிய கட்டமைப்பு



வாகன வருமான வரி அனுமதிப்பத்திரங்களை விநியோகிக்கும் புதிய கட்டமைப்பை (eRL 2.0) இம் மாதம் 07ஆம் திகதி முதல் அறிமுகப்படுத்தவுள்ளதாக தொழினுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தெரிவித்தார்.

மேல் மாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணங்களிலும் இந்த வேலைத் திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளதாக குறிப்பிட்ட இராஜாங்க அமைச்சர், இந்தப் பொறிமுறையின் ஊடாக வீட்டிலிருந்தவாறே வாகன வருமான வரி அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளும் 06

## ஸ்ரீலங்கன் விமானங்களின் தாமதம்
# 06 மில்லியன், டொலர் அரசுக்கு நஷ்டம் பயணிகளுக்கு ஏற்பட்ட அசௌகரியம்
### அமைச்சர் நிமல் தலைமையில் அவசர கலந்துரையாடல்

(லோரன்ஸ் செல்வநாயகம்)



ஸ்ரீலங்கன் விமான சேவையில் எட்டு விமான சேவைகள் தாமதமாகியதால், பயணிகளுக்கு ஏற்பட்ட அசௌகரியங்கள் தொடர்பில் முக்கிய பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது. அமைச்சர் நிமல் சிறீபாலடிசில்வா 06

## அவசர மருந்துக் கொள்வனவுகள் உடன் நிறுத்தப்பட்டபோதும்
# தட்டுப்பாடின்றி மருந்துகள் விநியோகிக்க ஏற்பாடு
### நோயாளர்களை அரசு ஒருபோதும் கைவிடாது என்கிறார் அமைச்சர் கெஹெலிய

**கொவிட் காலத்திலும் பொருளாதார நெருக்கடியான காலத்திலும் அவசர தேவைக்காக முறையான கேள்விகள் இல்லாது இறக்குமதி செய்யப்பட்ட நடைமுறையை உடனடியாக அமுலுக்கு வரும்வகையில் நிறுத்த அரசு தீர்மானித்துள்ளது**

(லோரன்ஸ் செல்வநாயகம்)

அவசர மருந்துகள் கொள்வனவை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் முற்றாக நிறுத்துவதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளதாக அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார். தட்டுப்பாடின்றி நோயாளர்களுக்குத் தேவையான மருந்துகளை பெற்றுக் கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமென்றும் அதேவேளை சுயாதீன சுகாதார சேவையைப் பாதுகாப்பதற்கும் அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

சுகாதார அமைச்சில் நேற்றைய தினம் இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பின்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அதுதொடர்பில் மேலும் விளக்கமளித்த அமைச்சர், மருந்து முகாமைத்துவம், மீளாய்வு மற்றும் மூலோபாய நிபுணத்துவக் குழுவின் பரிந்துரைக் கிணங்க தமது பணிப்புரையின் பேரில் 06



## போட்டியில் வெற்றியீட்டிய மாணவிக்கு கௌரவம்



தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் ஏற்பாட்டில் 2023 ஆண்டின் உலக குடியிருப்பு தினத்தை முன்னிட்டு வரைதல் மற்றும் கட்டுரைப்போட்டி நடத்தப்பட்டது. இதில் 03 – 05 பிரிவில் முதலாமிடத்தைப் பெற்ற கண்டி, மகாமாயா மகளிர் கல்லூரியின் மாணவி எச்.எம். இஸூம் கெஹன்ஸா ஹேரத்திற்கு பிரதமர் தினேஷ் குணவர்தன விருது, சான்றிதழ் மற்றும் பணப்பரிசிலை வழங்கிய போது பிடிக்கப்பட்ட படம்.



03
## டீசல் விலை அதிகரித்தாலும் பஸ் கட்டணங்கள் அதிகரிக்காது

# மஹாத்மா காந்தியின் 154 ஆவது ஜனன தின நினைவேந்தல் யாழில்
### யாழ் இந்திய துணைத்தூதரகம் ஏற்பாடு




யாழ்ப்பாணம் இந்திய உதவித் துணைத் தூதரகம், மற்றும் காந்தி சேவா சங்கத்தின் இணைந்த ஏற்பாட்டில், மகாத்மா காந்தியின் 154 ஆவது ஜனன தினம், அனுஷ்டிக்கப்பட்டது.

இது தொடர்பான நிகழ்வுகள் நேற்று (02) 06

# பாடசாலைகளில் நாளை தேசிய மீலாத் நபி விழா

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)




நாடு முழுவதிலுமுள்ள முஸ்லிம் பாடசாலைகளிலும், முஸ்லிம் மாணவர்கள் கல்வி பயிலும் பாடசாலைகளிலும் நாளை (04) மீலாத் நபி விழா கொண்டாடப்படவுள்ளது. சமய விழுமியங்களை மேம்படுத்தும் வகையில் நாளை (04) புதன்கிழமை மீலாத் நபி விழாவை கொண்டாடுமாறு வலியுறுத்துவதாக, கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் என்.என். மலவிஆராச்சி தெரிவித்துள்ளார்.

அவர், வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

மீலாத் விழாவைக் கொண்டாடுவதனூடாக நாட்டுக்கும் 06

# சகல நிலையங்களிலும் ஒரே விலையில் எரிபொருட்கள்
### இல்லாவிடின் கடும் நடவடிக்கை

லோரன்ஸ் செல்வநாயகம்



நாட்டிற்குள் எரிபொருட்களை விற்பனை செய்யும் அனைத்து நிறுவனங்களையும் எரிபொருட்களின் விலைகளை ஒரே விதத்தில் முன்னெடுத்துச் செல்லாவிட்டால் அதுதொடர்பில் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமென எரிபொருள் பகிர்ந்தளிப்பாளர்கள் சங்கம் அமைச்சின் செயலாளருக்கு எழுத்துமூலம் அறிவித்துள்ளது.

அடுத்துவரும் எரிபொருள் 06

# தோலில் எழுதப்பட்ட 1400 ஆண்டுகள் பழமையான புனித குர்ஆன் பிரதி



புனித குர்ஆனின் 1,400 ஆண்டுகள் பழமையான கையெழுத்துப் பிரதி, எகிப்தின் கெய்ரோவில் உள்ள புக் ஹவுஸ் 06

03
## மதுபானசாலைகள் இன்று மூடப்படும்

# நளீம் ஹாஜியார் நினைவுச் சொற்பொழிவு இன்று கொழும்பில்

(அஜ்வாத் பாஸி)



பேருவளை ஜாமிஆ நளீமிய்யா கலாபீட பொன் விழாவின் பிரதான நிகழ்வுகளில் மற்றுமொரு நிகழ்வாக 'நளீம் ஹாஜியார் நினைவுச் சொற்பொழிவு' இன்று (03) செவ்வாய்க்கிழமை மாலை 6.30 மணிக்கு கொழும்பு 07, சுதந்திர சதுக்கத்தில் அமைந்துள்ள இலங்கை மன்றக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நளீம் ஹாஜியார் நினைவுப் பேருரை மன்றத்தின் தலைவர் சட்டத்தரணி ரிப்கி காஸிம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் 'கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி வாழ்வும் பணியும்' என்ற தலைப்பில் ஜாமிஆ நளீமிய்யா கலாபீட முதல்வர் அஷ்ஷெய்க் ஏ.சி. அகார் முஹம்மத் (நளீமி) பிரதான உரை நிகழ்த்துவார். முதல்வரின் பிரதான உரையைத் 06

# உச்சத்தை தொட்ட தேசிக்காய் விலை



தேசிக்காய் ஒரு கிலோவின் விலை 2100 ரூபாவை எட்டியுள்ளதாக வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

இதன்படி மலையகத்தின் பல பகுதிகளில் தேசிக்காய் ஒன்றின் விலை சுமார் 50 ரூபாவுக்கு விற்கப்படுவதாக அப்பகுதி வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர். இவ் விலைக்கு தேசிக்காய் 06

## சீரற்ற காலநிலையால்
# 15, 469 பேர் பாதிப்பு; 376 வீடுகள் சேதம்!

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக 15,469 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக, அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. கம்பஹா மாவட்டமே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக அந்த நிலையம் குறிப்பிட்டுள்ளது. இம்மாவட்டத்தில் பெய்த கடும் மழையால் 9,506 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும், 376 வீடுகள் பகுதியளவில் சேதம் அடைந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

# பயணச்சீட்டின்றி பயணித்தால் மூவாயிரம் ரூபா அபராதம்
### திருத்தம் மேற்கொள்ள SLTB தீர்மானம்



இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் வண்டிகளில், பயணச்சீட்டின்றி பயணிப்பதற்கான அபராதத்தை அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இத்தீர்மானத்துக்கிணங்க அபராதம் மூவாயிரம் ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது. பயணச்சீட்டின்றி பயணிப்போர் மூவாயிரம் ரூபா அபராதத்துடன், இரு மடங்கு கட்டணத்தை செலுத்த 06

# ஜனாதிபதி தேர்தலில் தமிழர் ஒருவரை களமிறக்க திட்டம்
### புளட் தலைவர் சித்தார்த்தன் தெரிவிப்பு



நாட்டில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் சகல தமிழ் கட்சிகளும் ஒன்றிணைந்து தமிழர் ஒருவரை வேட்பாளராக களமிறக்க, திட்டமிட்டுள்ளதாக புளொட் கட்சியின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார். மட்டக்களப்பில் நேற்று முன்னதிம் (01) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, அவர் இவ்விடயத்தை தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், 06

# கிழக்குப் பல்கலையின் 26ஆவது பட்டமளிப்பு விழா ஒக். 07 இல்
### இரு தினங்களாக நல்லையா ஞாபகார்த்த மண்டபத்தில்




கிழக்குப் பல்கலைக் கழகத்தின் (2022) வருடத்திற்கான 26 ஆவது பொதுப்பட்டமளிப்பு விழா, இம்மாதம் 07, 08ஆம் திகதிகளில் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் கனகசிங்கம் வல்லிபுரமின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது. கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நல்லையா 06

# நகர்வலம்



### சீரற்ற காலநிலை காரணமாக

## தென்பகுதியின் பல பகுதிகளில் வெள்ளம்; வீடுகள், பாடசாலைகள் நீரில் மூழ்கின



சீரற்ற காலநிலை காரணமாக தென் மாகாணத்தின் சில பகுதிகளில் வெள்ளம் ஏற்பட்டுள்ளதோடு வீடுகள் மற்றும் பாடசாலைகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாக காலநிலை அவதான நிலையம் தெரிவித்தது. இதனால் பல பகுதிகளிலும் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டதோடு சில பாடசாலைகளும் மூடப்பட்டதாக அறிய வருகிறது. சீரற்ற காலநிலையினால் காலி, மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களில் மண்சரிவு அபாயம் விடுக்கப்பட்டுள்ளதோடு தொடர்ந்தும் மழை பெய்யும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜின்கங்கை பெருக்கெடுத்ததால் காலி ,பத்தேகம,உணன்விடிய,அகலிய ஆகிய பகுதிகளில் வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளது. தங்கல்ல பகுதியில் வீசிய கடும் காற்றினால் பாரிய மரம் விழுந்ததில் தங்கல்லமாத்தறை பிரதான வீதியில் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது.

சீரற்ற காலநிலையினால் அகுறஸ்ஸ, அதுதரலிய, தவலம, கம்புருபிடிய, ஹம்பாந்தொட்டை,திக்குவல்லை ஆகிய பாகுதிகளில் வெள்ள நிலைமை ஏற்பட்டுள்ளது. பல வீதிகளில் போக்குவரத்து தடைப்பட்டுள்ளதாகவும் அறிய வருகிறது.

திக்குவல்லை மின்ஹாத் தேசிய பாடசாலை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதோடு பாடசாலை வளாகம் நீரில் மூழ்கியதால் நேற்று கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன. நேற்று பாடசாலை நடைபெறாததோடு வெள்ளம் வற்றினால் இன்று பாடசாலை நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வகுப்பறைகள், அலுவலகங்கள், என்பவற்றினுள் நீர் புகுந்ததினால் தளபாடங்களுக்கும் பொருட்களுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது. அருகில் உள்ள வீடுகளிலும் வெள்ள நீர் உட்புகுந்துள்ளதோடு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க பிரதேச நலன்புரி அமைப்புகள் நடவடிக்கை எடுத்துள்ளன.

1969 ஆம் ஆண்டின் பின்னர் இவ்வாறான வெள்ள நிலை ஏற்பட்டதாக தென்மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.ஏ. மசாயிர் தினகரனுக்கு தெரிவித்தார். இது தவிர தங்கல்ல பொலம்மராவ கனிஷ்ட வித்தியாலயமும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதோடு நேற்று கல்வி நடவடிக்கைகள் இடம்பெறவில்லை என அறிவிக்கப்படுகிறது.

தற்போதைய சீரற்ற காலநிலை காரணமாக நாடு முழுவதும் 3,672 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதோடு பல வீடுகளும் சேதமடைந்துள்ளன.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க கடற்படைக் குழுக்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதோடு கடற்படைப் படகுகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் அறிய வருகிறது. (பா)

## 150ஆவது திருவள்ளுவர் சிலை திறந்துவைப்பு



விஜிபி உலகத் தமிழ்ச் சங்கத்தின் 150ஆவது திருவள்ளுவர்சிலையை சென்னை சாய்ராம் கல்லூரி வளாகத்தில் தமிழக அரசின் தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவை அமைச்சர் டாக்டர் பி.டி. ஆர். பழனிவேல் தியாகராஜன் அண்மையில் திறந்து வைத்தார். இவ்விழாவில் விஜிபி உலகத் தமிழ்ச் சங்கத்தின் நிறுவனரும் தலைவருமான டாக்டர் வி.ஜி.சந்தோசம், சாய்ராம் கல்விக் குழுமத் தலைவர் மற்றும் நிர்வாக செயல் அதிகாரி சாய் பிரகாஷ் லியோ முத்து விஜிபி உலகத் தமிழ்ச் சங்கத்தின் இணைச் செயலாளர் விஜிபி ராஜாதாஸ் மற்றும் பலர் உடன் உள்ளதை படத்தில் காணலாம்.

### தென் மாகாண தமிழ்த் தினப்போட்டியில்

## வெலிகம அறபா மாணவர்கள் 13 போட்டிகளில் வெற்றி

**வெலிகம தினகரன் நிருபர்**

அகில இலங்கை தமிழ் மொழித் தின தென் மாகாணப் போட்டிகள் கடந்த வாரம் வெலிகம அறபா தேசிய பாடசாலையில் வெகுவிமர்சையாக நடந்தேறியது.

தென் மாகாண தமிழ் மொழி மூல பாடசாலைகளுக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம்.ஏ.எம் மஷாஹிர் (நளீமி) தலைமையில் இடம்பெற்ற இப்போட்டிகளில்வெலிகமஅறபாதேசிய பாடசாலை 5 முதலிடங்களையும், 6 இரண்டாம் இடங்களையும், 2 மூன்றாம் இடங்களுமாக மொத்தம் 13 போட்டிகளில் வெற்றியீட்டியுள்ளது.

மேலும் வெலிகம மதுராபுர அஸ்ஸபா மகா வித்தியாலயம் 2 முதலிடங்களையும், 2 இரண்டாம் இடங்களையும், 1மூன்றாம் இடங்களுமாக 5 போட்டிகளில் வெற்றியீட்டியும் வெலிகம வெலிப்பிட்டிய ஸாஹிரா மகா வித்தியாலயம் 2 முதலாம் இடங்களையும் வெலிகம முஸ்லிம் ஆரம்ப பாடசாலை 1 முதலாம் இடத்தையும் 2 இரண்டாம் இடங்களாக மூன்று போட்டிகளில் வெற்றியீட்டியுள்ளது. கப்புவத்தை அந்நூர் மகா வித்தியாலயம் 1 மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டது.

முதலாம் இடங்களை சுவீகரித்த போட்டியாளர்கள் அகில இலங்கை ரீதியில் நடைபெறும் தமிழ் தின போட்டிகளுக்கு தகுதி பெற்றுள்ளதாக தமிழ் தின போட்டிகளின் செயலாளர் அஷ்ஷேக் எம்.எம்.எம் முன்திர் (நளீமி) தெரிவித்தார்.



33 வது வருட மீலாதுன் நபி விழாவும் மவ்லூத் தமாம் வைபவமும் எஸ்.எம்.ஏ. முத்தலீப் தலைமை ஏற்பாட்டில் கடந்த வியாழக்கிழமை காலை கொழும்பு12, மத்திய வீதி 139ஆம் தோட்டத்தில் நடைபெற்றது. இதில் மார்க்க சொற்பொழிவாளர் (விரிவுரையாளர்) அல் உஸ்தாத் மபாஸ் நூழாரி பயான் நிகழ்த்துவதையும் மவ்லூத் தமாம் வைபவத்தையும் படங்களில் காணலாம்.

## வென்னப்புவ பாடசாலையில் குளவி தாக்கி பலர் காயம்

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

வென்னப்புவ மார்ட்டின் வனக் கல்லூரியின் அதிபர் உட்பட 26 பேர் நேற்று (02) பிற்பகல் குளவி கொட்டுக்கு இலக்காகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.


குளவிக் கொட்டுக்கு இலக்கான அதிபர் உட்பட ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் லுணுவில பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குளவிக் கொட்டுக்கு இலக்காகி காயமடைந்தவர்களில் அதிபர், நான்கு ஆசிரியர்கள் மற்றும் 21 மாணவர்கள் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், அதிபர், இரண்டு ஆசிரியர்கள் மற்றும் நான்கு மாணவர்கள் மேலதிக சிகிச்சைக்காக லுணுவில வைத்தியசாலையிலிருந்து, மாரவில தள வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

### "மீலாத் கீத்ராத் 59"

## சிங்கை பிரபல பாடகர் ப.ஃ.ரீஹுல்லாஹ் பங்கேற்பு



கொழும்பு 07, ஜே.ஆர். ஜெயவர்தன மண்டபத்தில் எதிர்வரும் 07ஆம் திகதி மாலை 7 மணிக்கு நடைபெறவிருக்கும் ஜனரஞ்சக பாடகர் கலைஞர் கலைக்கமலின் "மீலாத் கீத்ராத் 59" நிகழ்வில் முதல் முறையாக சிங்கப்பூர் பிரபல பாடகர் ஹாஜி பஃரீஹுல்லாஹ் இசைமுரச நாகூர் ஹனிபா பாடல்களைப் பாடி மகிழ்விக்கவிருப்பது குறிப்பிடத்தக்கது.

பெரும் வர்த்தக குடும்பத்தில் பிறந்த ஹாஜி பஃரீஹுல்லாஹ், சிங்கையில் பல இசை நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறார்.

இலங்கை வானொலி முன்னாள் முஸ்லிம் சேவைப் பணிப்பாளர் எம்.இஸட். அஹ்மத் முனவ்வர், கலைஞர் கலைக்கமல் அழைப்பை ஏற்று நிகழ்ச்சியில் பாடவிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## வெலிகமவில் மீலாதுன் நபி விழாவும் நூல்கள் வெளியீடும்



வெலிகம பைத்துல் பரக்கா வளாகத்தில் மீலாதுன் நபி விழாவும், உமர் ரலி புராணம் மற்றும் மிஷ்காதுல் 'அவ்லியா ஷரஹ யலானிஉ அஸ்மாருந் நிவுமாஉ' ஆகிய நூல்களின் வெளியீட்டு விழாவும் ஷைகு நாயகம் அஸ்ஸய்யிது ஜமாலிய்யா சைய்யது கலீல் அவுன் மவுலானா தலைமையில் கடந்த 27 ஆம் திகதி முதல் 29 ஆம் திகதி வரை நடைபெற்றது.

அஸ்ஸய்யிது ஜமாலிய்யா சைய்யது கலீல் அவுன் மவுலானாவினால் எழுதப்பட்ட இலக்கியசோலையில் சீறா புராணத்தின் மரபாக காப்பிய இலக்கணம், காவிய அலங்காரங்களுடன் 21 படலங்களில் 682 பாடல்கள், பொழிப்புரையுடன் அஸ்ஸய்யிது சாஜித் அலி மவுலானா அவர்கள் வெளியிட அஸ்ஸய்யிது யாஸீன் அலி மௌலானா பெற்றுக் கொண்டார்.

இலங்கையில் பிறந்த சூபிஞானி யாஸீன் மௌலானா நாயகம் யவானிஉ எனும் இந்நூலுக்கு ஷரஹு செய்ய விரும்பி மொரோக்கோ நாட்டைப் பூர்வீகமாகக் கொண்டு தற்போது எகிப்தில் வசித்துவரும் ஆத்மீக ஞானத்துறையில் விளக்கமுடைய அறிஞரான ஷேய்க் அஹ்மத் அல் மஸீதி, 'மிஷ்காத்துல் அவ்லியா பீ ஷரஹி யலானிஉ அஸ்மாருந்ந அமா' எனும் பெயரில் எழுதப்பட்டு இந்நூல் எகிப்தில் இஸ்லாமிய கலாச்சார நிறுவனத்தால் முறையாக பதிவுசெய்யப்பட்டு, எகிப்து நாட்டிலேயே 690 பக்கங்களில் புத்தகமாக எழுதப்பட்ட நூலை பேராசிரியர் சையது வாரிது அலி மௌலானா வெளியிட கலாநிதி அன்வர் பாதுஷா உலவி, டொக்டர் அப்துல்லா ஜமாலி பெற்று கொண்டனர்.



மௌலவி ஹாபிழ் வி.எம். முஹம்மது ஹசன் யாஸீனிய்யா ஹக்கியுல் காதிரிய்யா எழுதிய 'அஹ்லுல் பைத் நபிகள் நாயகத்தினரின் திருகுடும்பத்தார்' என்ற நூலை அஸ்ஸய்யிது யாஸீன் அலி மௌலானா வெளியிட, சையது ஜாஹித் அலி மௌலானா, மௌலவி ஹூசைன் முஹம்மது மன்பஈ, என்ஜினியர் சஹாபுதீன், சைய்யது இர்ஃபான் மௌலானா ஆகியோர் பெற்று கொண்டனர்.

இவ்விழாவில் இலங்கை, இந்தியா, சிங்கப்பூர், டுபாய், கட்டார் உட்பட பல நாடுகளில் இருந்தும் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## தர்காநகர் 'ஏஸியம்' கல்வியகத்தில் சிறுவர் தின நிகழ்வு

"எல்லாவற்றையும் விட பிள்ளைகள் பெறுமதியானவர்கள்" எனும் தொனிப்பொருளில், தர்காநகர் ஏஸியம் கல்வியகத்தில் மத்துகம அன்னாசிகல தமிழ் வித்தியாலய அதிபர் ஏ.ஸீ.எம். றிப்கான் தலைமையில் இடம்பெற்ற சிறுவர் தின விழாவில் இம்முறை தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான விசேட வினா, விடைப்போட்டியொன்றும் இடம்பெற்றது. மாணவர் கலை நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து போட்டிப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகள் பெற்ற மாணவர்கள் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வில் விசேட அதிதிகளாக தர்காநகர் தேசிய கல்லூரியின் ஆசிரியை ஜனாபா பாயிக்கா பஸ்லிம், மத்துகம பிரதேச செயலக பெருந்தோட்ட சமூக இணைப்பாளர் எம்.பீ.எப்.நுளாரா, சமூக சேவகர்களான எம். எஸ்.எம்.இஹ்ஸான், மொஹமட் ஹஸன்,எம்.எம்.எம். பிர்தௌஸ்,எம்.எஸ்.எம்.றிப்கான்,ஸபர் மொஹமட், பாத்திமா நஸீமா ஆகியோரும் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.





கொழும்பு 13, அகில இலங்கை பரத சங்கம் சிறுவர் தினத்தை முன்னிட்டு ஒழுங்கு செய்த நிகழ்வில் முன்னாள் நகர சபை உறுப்பினர் ஜோசப் பெர்னாண்டோ 100 பாடசாலை சிறார்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்குவதை படத்தில் காணலாம்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 ஒக்டோபர் 3 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN




**தொழுகை நேரம்**

10 முதல் 13 வரை

| | |
|---|---|
| சுபஹ் - | 05.04 |
| லுஹர் - | 12.22 |
| அஸர் - | 03.38 |
| மஃரிப் - | 06.22 |
| இஷா - | 07.32 |

**இன்றைய சுபதினம்**

சுபகிருது வருடம் சித்திரை 5

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி

**அமைச்சர் பந்துல குணவர்தனவின் எண்ணக்கருவில் உருவான**

# மின்சார வாகனங்களை பிரபலப்படுத்த ஹோமாகமவில் இரு நாள் கண்காட்சி



போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் பந்துல குணவர்தனவின் எண்ணக்கருவை நடைமுறைப் படுத்தப்படும் பொருட்டு மின்சார வாகனங்கள் அறிமுகஞ் செய்யப்படவுள்ளன. இதற்கிணங்க இவ்வாகனங்களை மக்கள் மத்தியில் பிரபலப்படுத்தும் வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இது குறித்து விழிப்பூட்டும் கண்காட்சி ஹோமாகம பிட்டிபனவில் இம்மாதம் 14 மற்றும் 15 ம் திகதிகளில நடத்தப்படவுள்ளது. இதுபற்றிய கலந்துரையாடல் அமைச்சின் கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது. இக் கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர், போக்குவரத்து அமைச்சின் கீழ் தெரிவு செய்யப்பட்ட ஒரு கிராமத்தை பசுமைக் கிராமமாக அபிவிருத்தி செய்யும் கருத்தின் கீழ், ஹோமாகம பிடிபன பிரதேசம் பொருத்தமானதாக இனங்காணப்பட்டுள்ளது. இதற்கான பசுமைப் பல்கலைக்கழகம் (NSBM) இப்பகுதியில்தான்

06

## பாடசாலை மாணவர்களின் வான் கட்டணங்களில் மாற்றமில்லை

**அதிகரிக்கவில்லை என்கிறது சங்கம்**

எரிபொருள் விலை மாதாந்தம் அதிகரித்து வருவதால், கடும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளதாக அகில இலங்கை மாகாண பொதுப் பாடசாலை சிறுவர் போக்குவரத்து சேவை சங்கம் தெரிவித்துள்ளது. எனினும், எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டாலும் பாடசாலை மாணவர்களின் போக்குவரத்து சேவைக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட மாட்டாதென, சங்கத்தின் தலைவர் ருவன் பிரசாத் தெரிவித்துள்ளார். நேற்று (01) நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் எரிபொருள்கள் விலை அதிகரிக்கப்பட்டமை தொடர்பிலே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

## டீசல் விலை அதிகரித்தாலும் பஸ் கட்டணங்கள் அதிகரிக்காது

(லோரன்ஸ் செல்வநாயகம்)

டீசல் ஒரு லீற்றர் 10 ரூபாவால் அதிகரிக்கப்பட்ட போதும், பஸ் கட்டணத்தில் திருத்தங்களை மேற்கொள்ளப் போவதில்லை என, தனியார் பஸ் உரிமையாளர்களின் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார். பஸ் கட்டணத்தை அதிகரிக்க வேண்டுமானால் டீசலின் விலை 4 வீதத்தால் அதிகரிக்கப்பட வேண்டுமெனக் குறிப்பிட்டுள்ள அவர், தற்போது டீசலின் விலை 2 வீதத்தால் மாத்திரமே அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். இது, பஸ் கட்டணத்தை அதிகரிப்பதற்கு அது போதுமானதல்ல என்றும் அவர் தெரிவித்துள்ளார். விரைவில் டீசலின் விலை அதிகரிக்கலாம் என குறிப்பிட்டுள்ள அவர், அவ்வாறு அதிகரிக்குமானால் பஸ் கட்டணத்தை அதிகரிப்பதற்கான சந்தர்ப்பம் ஏற்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## மதுபானசாலைகள் இன்று மூடப்படும்

சர்வதேச மது ஒழிப்பு தினத்தை முன்னிட்டு இன்று (செவ்வாய்கிழமை) சகல மதுபானசாலைகளும் மூடப்படுமென கலால்வரி திணைக்களம் தெரிவிக்கின்றது. சர்வதேச மது ஒழிப்பு தினத்தை முன்னிட்டு இத்தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாக கலால்வரி திணைக்களம் தெரிவித்துள்ளது. எனவே, குறித்த காலப்பகுதியில் சட்டவிரோத விற்பனை நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் தண்டனைக்குரிய குற்றமாகும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பாராளுமன்றம் இன்று 03 முதல் 06 வரை கூடுகிறது

பொருளாதார நெருக்கடியால் தொழில் வல்லுநர்கள் நாட்டை விட்டு வெளியேறும் நிலைமை தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதம் எதிர்வரும் 06 இல், இடம்பெறும்.

பாராளுமன்றத்தை இன்று 03 முதல் 06 ஆம் திகதி வரை கூட்டுவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹனதீர தெரிவித்தார். சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கடந்த (22) நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய பாராளுமன்றம் கூடும் சகல நாட்களிலும் மு.ப 9.30 மணி முதல் 10.30 மணிவரையான நேரம் வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இன்று (03) செவ்வாய்க்கிழமை மு.ப 10.30 மணி முதல் பி.ப 5.00 மணிவரை குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் (இரண்டாம் மதிப்பீடு) தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் (இரண்டாவது மதிப்பீடு), மத்தியஸ்த (விசேட பகுதிளைச் சார்ந்த பிணக்குகள்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் மற்றும் நீதித்துறைச் சட்டத்தின் கீழ் கட்டளை என்பன விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.









**நாணய மாற்று**

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 238.54 | 249.41 |
| கனடியன் டொலர் | 256.80 | 267.07 |
| யூரோ | 340.83 | 352.42 |
| ஜப்பான் யென் | 2.5659 | 2.6696 |
| சிங்கப்பூர் டொலர் | 239.52 | 248.06 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 423.68 | 438.67 |
| சுவிஸ் பிராங்க் | 344.01 | 357.45 |
| அமெரிக்க டொலர் | 322.72 | 334.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 831.93 | கட்டார் ரியால் | 85.92 |
| குவைத் டினார் | 1,028.76 | சவூதி ரியால் | 83.64 |
| ஓமான் ரியால் | 814.75 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 85.39 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

சோபகிருது வருடம் புரட்டாதி மாதம் 17ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ரபீஉனில் அவ்வல் பிறை 17

**குறள் தரும் சிந்தனை**



பொருளானாம் எல்லாம்என்று ஈயாது இவறும்
மருளானா மாணாப் பிறப்பு

யாருக்கும் எதுவும் கொடுக்காமல், தன்னிடமுள்ள பொருளால் எல்லாம் ஆகுமென்று, அதனைவிடாமல் பற்றிக் கொண்டிருப்பவன் எந்தச் சிறப்புமில்லாத இழி பிறவியாவான்.

## அபிவிருத்தியடைந்த மாகாணமாக வடமாகாணம் திகழ வேண்டும்

யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடமாகாணம் வாள்வெட்டு, வீடுகளில் திருட்டு மற்றும் வன்முறைச் சம்பவங்கள் அண்மைக் காலமாக அடிக்கடி இடம்பெறக் கூடிய இடமாக உள்ளது. அதேநேரம் கேரளா கஞ்சா உள்ளிட்ட சில வகைப் போதைப் பொருட்கள் கைப்பற்றப்படும் முக்கிய பிரதேசங்களும் இம்மாகாணத்தில்தான் காணப்படுகின்றன.

இந்த சம்பவங்களால் வடமாகாண மக்கள் மத்தியில் அச்சம் பீதியும் நிலவே செய்கின்றன. வாள்வெட்டு மற்றும் வன்முறைச் சம்பவங்களால் பலர் காயமடைந்துள்ளனர். சில வாள் வெட்டுக்கள் குரூரமான முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நாட்டில் சுமார் மூன்று தசாப்த காலம் நிலவிய யுத்தம் யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடமாகாணத்தை அடிப்படையாகக் கொண்டு இடம்பெற்றது. இதன் விளைவாக வடமாகாண மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள். இந்த யுத்தம் காரணமாக முழுநாடுமே பாரிய இழப்புக்களைச் சந்தித்தது.

இந்நிலையில் வடமாகாண மக்கள் உட்பட முழு நாட்டு மக்களுமே யுத்தம் முடிவுக்கு வரதா? அச்சம் பீதியில்லாத அமைதி, சமாதான சூழல் எப்போது உருவாகும் என ஏங்கிக் கொண்டிருந்தனர். இவ்வாறான சூழலில் 2009 இல் யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. அதனைத் தொடர்ந்து வட பகுதி மக்கள் உட்பட முழுநாட்டிலும் புதிய நம்பிக்கைகளும் எதிர்பார்ப்புகளும் தோற்றம் பெற்றன. இவ்வாறான அச்சம் பீதிமிக்க சூழல் மீண்டும் ஒரு போதுமே தோற்றம் பெற்று விடக்கூடாது. அமைதி, சமாதானமே நாட்டில் தழைத்தோங்க வேண்டும் என்பதே வடபகுதி உள்ளிட்ட முழு நாட்டு மக்களினதும் எதிர்பார்ப்பாக இருந்தது.

அதற்கு ஏற்ப யுத்தம் முடிவுக்கு வந்த பின்னரான சில வருடங்கள் வடக்கு உட்பட முழு நாட்டிலும் அச்சம் பீதியற்ற சூழல் நிலவியது. ஆனால் மக்களின் எதிர்பார்ப்புக்கு அமைய யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடமாகாணத்தில் அமைதி, சமாதானம் நிலவுவதை சில தரப்பினர் விரும்புவதாகத் தெரியவில்லை. அதன் வெளிப்பாடாகவே வாள்வெட்டு சம்பவங்களும், வன்முறைகளும் அடிக்கடி இடம் பெறக்கூடிய சூழல் உருவானது.

அதன் ஊடாக அந்த சக்திகளின் எதிர்பார்ப்புக்கு அமைய வடக்கு மக்கள் மத்தியில் அச்சம் பீதி தலைதூக்கியது. இப்பின்புலத்தில் யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் வாள்வெட்டு சம்பவங்கள் குறித்து தேசிய மட்டத்தில் கவனம் செலுத்தப்படும் நிலை உருவானது. அதன் விளைவாக யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடமாகாணம் அச்சம் சூழ்ந்த பிரதேசமாக பரவலாக நோக்கப்படலாயிற்று.

இந்த வாள் வெட்டு சம்பவங்களும் வன்முறைகளும் சில சக்திகளின் நலன்களை முன்னிறுத்தி முன்னெடுக்கப்படுவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இவ்வாறான சம்பவங்களைக் கட்டுப்படுத்துவதில் சட்டத்தை அமுல்படுத்தும் தரப்பினர் கூடுதல் கவனம் செலுத்தி நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். அதனால் வாள்வெட்டு மற்றும் வன்முறைகளில் ஈடுபட்ட பலர் கைது செய்யப்பட்டு சட்டத்தின் கொண்டு வரப்பட்டுள்ளனர். அப்படியிருந்தும் ஆங்காகங்கே இவ்விதமான சம்பவங்கள் இடம்பெறவே செய்கின்றன.

இதன் விளைவாக மக்கள் எதிர்பார்த்த அச்சமற்ற சூழலை இந்த வாள்வெட்டு மற்றும் வன்முறைச் சம்பவங்கள் இல்லாமலாக்கியுள்ளன.

ஆனால் அச்சமற்ற சூழல்தான் வடக்கு உள்ளிட்ட அனைத்து மக்களதும் வேணவா. இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடமாகாணமானது வாள்வெட்டு உள்ளிட்ட வன்முறைச் சம்பவங்களைக் கொண்ட பிரதேசமாக முன்னொரு போதுமே இருந்ததில்லை.

இலங்கையில் மிகவும் வளமான மண்வளத்தைக் கொண்டுள்ள வட மாகாணம், கல்வியில் முன்னேற்றமடைந்த சமூகத்தை கொண்டதொரு பூமியும் கூட. குறிப்பாக சுதந்திரத்திற்கு முன்பே இந்நாட்டில் கல்வியில் முன்னேற்றமடைந்த சமூகத்தை கொண்ட பிரதேசங்களில் ஒன்றாக வட மாகாணத்தின் யாழ்ப்பாணம் விளங்கியது.

இதன் பயனாக இந்நாட்டின் ஏனைய தமிழ் பேசும் பிரதேச மக்களின் கல்வி மற்றும் அறிவியல் முன்னேற்றத்திற்கு யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடமாகாணம் அளப்பரிய பங்களிப்பை நல்கியுள்ளது. அவ்வாறான ஒரு பிரதேசத்தில் தற்போது உருவாகியுள்ள சூழல் அமைதி, சமாதானத்தை விரும்பும் அனைத்து தரப்பினரையுமே கவலை கொள்ளச் செய்துள்ளது.

அதேநேரம் கல்வியில் முன்பு போன்று முன்னேறிய நிலையை அடைந்து கொள்ளவும் வடமாகாணம் முயற்சிகளை முன்னெடுக்கவே செய்கிறது. அந்த முயற்சிகள் வெற்றிபெற வேண்டும். அதற்காக ஆக்கமும் ஊக்கமும் அளிக்க வேண்டும். அதன் ஊடாக வாள்வெட்டு, வன்முறைகள் அற்ற பிரதேசமாக வட மாகாண உருவாகும். அதுவே அமைதி, சமாதானத்தை விரும்பும் அனைத்து தரப்பினரதும் எதிர்பார்ப்பாகும்.

editor.tkn@lakehouse.lk

# இதழியல் துறையில் இலங்கையில் முன்னுதாரண புருஷராக போற்றப்படுபவர் எட்மன்ட் ரணசிங்க



ஏழு தசாப்தங்களாக இந்நாட்டின் ஊடகவியல்துறையில் அளப்பரிய பங்காற்றி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இன்று தேசத்தின் முன்னுதாரண புருஷராக கௌரவிக்கப்பட்டுள்ள முன்னாள் மூத்த பத்திரிகை ஆசிரியர் எட்மன்ட் ரணசிங்க பற்றி எழுதப்பட்ட குறிப்பு இது.

வருடம் 1952. ஜனவரி மாதம் தொடங்கி விட்டது. வாழ்க்கையில் முதல் தடவையாக லேக்ஹவுஸ் படிகளில் இளைஞன் ஒருவன் ஏறி வருகின்றான். வயது 21. டெய்லி நியூஸ் பத்திரிகைக்கு புதிய பத்திரிகையாளர்களை இணைத்துக் கொள்ளும் நேர்காணலில் கலந்து கொள்ளவே அந்த இளைஞன் வருகிறான்.

அழைப்புக் கடிதத்தை வரவேற்பறையில் காட்டிய பின்னர் லேக் ஹவுஸ் முகாமைத்துவப் பணிப்பாளரின் அறைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றான். அறையில் மிகவும் கம்பீரமான தோற்றத்துடன் அமர்ந்திருக்கின்றார் எஸ்மன்ட் விக்கிரமசிங்க. அவர் வேறு யாரும் அல்ல, தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தந்தையார் ஆவார்.



தம் முன்னால் நிற்கும் இளைஞனை அமரச் சொல்கின்றார்.


'பெயர் என்ன?'

'நான் எட்மன்ட் விக்ரமரத்ன ரணசிங்க.'

'ஊர் எங்கே? தொழில் செய்கின்றீரா?'

'அவிசாவளைக்கு அருகில் பெலன புவாக்பிட்டிய'. ஆம், நான் வக, இரிதா பொல கனிஷ்ட வித்தியாலயத்தின் ஆங்கில ஆசிரியர்'

ஆரம்ப அறிமுக வினாக்களுக்குப் பின்னர் விக்ரமசிங்க அவர் வந்த விடயம் தொடர்பாக வினவத் தொடங்கினார்



'பத்திரிகைத் தொழிலுக்கு ஏன் வர எண்ணினீர்கள்?'

'நான் நல்ல வாசகன். அதனால் எழுதவும் முடியும் என நினைக்கின்றேன்.'

தன் முன்னால் நிற்கும் அழகான இளைஞனின் பதில் எஸ்மன்டின் மனதைக் கவர்ந்தது. தான் தேடும் இளைஞன் அவன் என அவரது மனம் கூறியது. சிறிது நேரம் உரையாடிய பின்னர், அந்த இளைஞனுக்கு இரண்டாவது நேர்காணலுக்கான அழைப்பு வரும் எனக் கூறி விடை கொடுத்தார்.

ஒரு வாரத்தின் பின்னர் இரண்டாவது நேர்காணலுக்கான அழைப்புக் கடிதத்தை நிறுவனத்திடம் இருந்து எட்மன்ட் ரணசிங்க பெற்றான்.

அவன் அதில் கலந்து கொள்வதற்காக இரண்டாவது தடவையாகவும் லேக் ஹவுஸ் படிகளில் ஏறினான். அவன் இரண்டாவது தடவையாகவும் எஸ்மன்ட் விக்ரமசிங்க முன்னால் தோன்றினான். அன்று நேர்காணல் குழுவில் இன்னொருவரும் இணைந்து இருந்தார். அவர் லேக் ஹவுஸின் ஆலோசகரான எம்.ஏ.த சில்வா. அவர் விக்கிரமசிங்கவின் பல்கலைக்கழக நண்பனும் ஆவார்.

இரண்டாவது நேர்காணல் மிகவும் நட்புபூர்வமாக அமைந்திருந்தது. தனக்கு நிச்சயமாக லேக்ஹவுஸில் வேலை கிடைக்கும் என ரணசிங்கவுக்குத் தோன்றியது.

அதன்படி 1952 மார்ச் 21 ஆம் திகதி அவர் டெய்லி நியூஸ் பத்திரிகையின் துணை ஆசிரியராக பதவியேற்றார். அன்று தொடக்கம் விக்கிரமசிங்க இந்த புதிய புதிய பத்திரிகையாளன் பற்றி அவதானத்துடன் இருந்தார். இந்த இளைஞன் லேக் ஹவுஸின் ஆபரணமாக திகழ்வார் என அவர் ஆரம்பத்தில் உணர்ந்ததால் ஆகும்.

துணை ஆசிரியராக பதவியைத் தொடங்கி விரைவில் பாராளுமன்ற நிருபரானார். அவர் சிங்களம் மற்றும் ஆங்கில மொழியை சரளமாகக் கையாளக் கூடியவர் என்பதால் எல்லாப் பிரிவுகள் பற்றியும் கற்று முன்னேறினார். 70 களின் ஆரம்பத்தில் அவர் தினமின பத்திரிகையின் துணை ஆசிரியர். அதைத் தவிர அதன் செய்தி ஆசிரியராகவும் பணி புரிந்தார்.

1973 ஆம் ஆண்டு லேக் ஹவுஸ் இன் விதியைத் தீர்மானிக்கும் தருணமான ஆண்டாக இருந்தது. ஐக்கிய முன்னணி அரசால் லேக் ஹவுஸை அரசுடைமையாக்க முடிவு செய்யப்பட்டது. அரசாங்கத்தின் அந்த முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து எட்மன்ட் ராஜினாமா செய்துவிட்டு வீட்டிற்குச் சென்றார். அவர் முதுகெலும்பு உள்ள மனிதர் என்பதை அன்றுதான் நாடு கண்டுகொண்டது.

1977 ஆம் ஆண்டு ஆட்சி கவிழ்ந்த பின்னர் மீண்டும் லேக் ஹவுஸின் அழைப்புக்கிணங்க அவர் தினமின பத்திரிகை ஆசிரியர் பதவியை ஏற்றுக் கொண்டார். மீண்டும் அவருக்கு லேக் ஹவுஸுக்கு வர விருப்பம் இல்லை என்றாலும பிரபாத் மானவசிங்க உள்ளிட்ட அவரது நண்பர்களின் வற்புறுத்தலை அவரால் மீற முடியவில்லை . தினமின பத்திரிகை புதிய தோற்றத்தில் வாசகர் கையில் கிடைத்த போது அதன் விற்பனையும் மெல்ல மெல்ல அதிகரித்தது. இதேவேளை திடீரென எட்மன்ட் ரணசிங்கவுக்கு சிலுமினவுக்கு மாற்றல் கிடைத்தது. அவரது பெயர் சிலுமின ஆசிரியர் பதவிக்கு எழுதப்பட்டது.

சிலுமினவுக்கு சென்ற அவர் தனது நண்பர்களுடன் இணைந்து அதற்கு பிரகாசத்தை கொண்டு வந்தார். அப்போது பிரபல நாவல் எழுத்தாளரான ஐக்கிய முன்னணி அரசின் முன்னாள் வர்த்தக அமைச்சர் டி.பி. இலங்கரத்தினவின் நாவல் ஒன்றை பத்திரிகையில் பிரசுரிக்க நடவடிக்கை எடுத்தார். அதன் காரணமாக நிர்வாகக் குழுவினால் அவருக்கு பிரச்சினை ஏற்பட்டாலும், அக்காலப் பகுதியில் சிலுமின பத்திரிகையின் விற்பனை மூன்று இலட்சத்தையும் தாண்டியது. அந்தச் சாதனை இன்னுமே முறியடிக்கப்படவில்லை.

இவ்வாறு காலம் கடந்து சென்ற வேளையில், 1981ஆரம்பத்தில் ஒரு நாள் லேக் ஹவுஸ் நண்பரான நந்தசேன சூரியாரச்சி புதிய செய்தி ஒன்றை அவருக்குத் தெரிவித்தார். அச்செய்தி நாட்டின் பிரபல வர்த்தகரான உபாலி விஜயவர்த்தன பத்திரிகை ஒன்றை ஆரம்பிக்க உள்ளதாகவும், அதற்காக ரணசிங்கவை சந்திக்க ஆவலுடன் இருப்பதாகவும் தெரிவித்தார். அவ்வேளையில் உபாலி விஜயவர்த்தன கொழும்பு பொருளாதார ஆணைக் குழுவின் தலைவர் ஆவார். அவர் விஜயவர்த்தனவை காரியாலயத்துக்கு சென்று சந்தித்தார்.

தனது சுதந்திரத்தில் தலையிடாவிட்டால் அந்த அழைப்பை ஏற்றுக் கொள்ள சம்மதிப்பதாக அவர் விஜயவர்த்தனவுக்குத் தெரிவித்தார். அந்த சந்திப்பின் பின்னர் லேக் ஹவுஸை சேர்ந்த சில நண்பர்களை அழைத்துக்கொண்டு 'திவயின' பத்திரிகையை ஆரம்பிப்பதற்கு சுகததாச விளையாட்டரங்குக்கு அருகிலுள்ள ப்ளூ மண்டல் வீதியில் அமைந்துள்ள காரியாலயத்துக்கு நந்தசேன சூர்யாரச்சி, தயாரத்ன ரணசிங்க, உபாலிதென்னக்கோன், காமினி சுமனசேகர, சுனில் மாதவ பிரேமத்திலக்க, தர்மரத்தின விஜயசுந்தர, விமல் வீரசேகர ஆகியோருடன் சென்றார். 'தவச' இலிருந்து மெரில் பெரேராவும் இணைந்து கொண்டார்.

பத்திரிகை ஆசிரியர் எட்மன்ட் ரணசிங்க தலைமையில் 'திவயின' ஞாயிறு பத்திரிகை 1981 ஒக்டோபர் 4 ஆம் திகதி ஆரம்பமானது. அவர் கேட்ட சுதந்திரத்தை நிர்வாகிகள் முழுமையாக வழங்கினார்கள். நாட்டில் நடைபெறும் அனைத்தையும் அவ்வாறே சரியாக அறிக்கையிடுவதே ரணசிங்கவின் அபிப்பிராயமாக இருந்தது. அந்தச் செய்தி அரசுக்கு சார்பானதா? சார்பானதில்லையா? என ஒருபோதும் சிந்திக்கவில்லை. அவரது ஒரே நோக்கம் மக்களுக்கு சரியான செய்தியை வழங்குவதாகும்.

இவ்வாறு மெல்ல மெல்ல 'திவயின' நாட்டின் பொது மக்களின் குரலாக ஒலித்தது. அதில் 30 ஆயிரம் வேலை இழந்த ஜூலை வேலைநிறுத்தக்காரர்களும் அடங்குவார்கள்.

1983 அளவில் வடக்கில் பிரபாகரனின் பயங்கரவாதம் தலைதூக்கியது. அதற்குப் பதில் அளிக்க வேண்டியது பயங்கரவாதிகளுக்கு புரியக்கூடிய மொழியில் என்று ரணசிங்க தெரிவித்தார். 2009 ஆம் ஆண்டு இந்நாட்டில் பயங்கரவாதத்தை முற்றிலும் ஒழித்த மனிதாபிமான யுத்த கருத்து புரட்சியை இந்நாட்டு மக்கள் மனதிற்கு முதலில் வழங்கியவர் எட்மன்ட் ரணசிங்க.

அதற்காக தன்னால் முடிந்த எவ்வேளையிலும் தனது பேனாவை உபயோகித்தார்.

அவ்வேளையில் எதிர்க்கட்சியாக தமிழ் ஐக்கிய விடுதலை முன்னணியே காணப்பட்டது. 77 ஆம் ஆண்டு தேர்தலில் 14 ஆசனங்களை பெற்றுக் கொண்ட அக்கட்சி எதிர்க்கட்சியாக தெரிவானது. அதேவேளை ஐக்கிய முன்னணி அரசின் முதுகெலும்பான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கு எட்டு ஆசனங்கள் கிடைத்திருந்தன.

இந்நிலைமையில் நாட்டின் பெரும்பான்மையான சிங்கள மக்களின் மாற்றுக் கருத்துக்கள், எதிரான கொள்கைகள் வெளிவந்தது 'திவயின' ஊடாகவே.

அது அன்றைய அரசாங்கத்தின் நலத்திற்கு அவ்வளவு நல்லது இல்லை என்பதால் சரியான அதிகாரியை திவயின பத்திரிகைக்கு நியமித்தார்கள். அவர் கலாநிதி சரத் அமுனுகம.

இந்த அனைத்து அழுத்தங்களையும் தனது தலை மேல் கொண்டு 'திவயின' ஆசிரியர் குழுவை அமைத்து சுதந்திரமாக நடவடிக்கையில் ஈடுபட அவர் இடம் ஏற்படுத்திக் கொடுத்தார்.

எண்பதுகளின் மத்தியில் தடை செய்யப்பட்டிருந்த மக்கள் விடுதலை முன்னணியின் கொள்கைகளை பிரதிநிதித்துவப்படுத்தி இளைஞர் நடவடிக்கைகள் காரணமாக நாடு பூராகவும் கலவர நிலைமை தோன்றியது. அதற்கு ஆதரவு தெரிவிக்காமல் நாட்டில் நடைபெறும் அனைத்தையும் சரியாக அறிக்கையிடவும் அவர் நடவடிக்கை எடுத்தார். அது தொடர்பாக அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகளையும் அவ்வாறே திவயின ஊடாக அறிக்கையிட்டார்.

இதற்குப் பின்னால் பல கண்ணுக்குத் தெரியாத சக்திகள் செயல்பட தொடங்கிய காலமது. ஒருமுறை ஞாயிற்றுக்கிழமை திவயின பத்திரிகையின் துணை ஆசிரியரான தயாசேன குணசிங்க கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டார். 'கினிகத் தக்குனட கியெமி' (நெருப்பெரியும் தெற்கிற்கு சென்றேன்) என்ற தலைப்பில் ஞாயிற்றுக்கிழமை திவயினவுக்கு கட்டுரையொன்று எழுதிய தற்போதைய சிலுமின ஆசிரியர் தர்மன் விக்கிரமரத்ன வீட்டிற்கு செல்ல நேரிட்டது.

**சிசிர பரணதந்திரி...**

1988 நவம்பர் 30ஆம் திகதி ரணசிங்கவின் வீட்டில் நடந்த குண்டுத் தாக்குதலில் அவர் உயிர் பிழைத்தார் .அவர் இத்தனை அழுத்தங்களையும் சகித்துக் கொண்டு ஒரு மலைபோல் அசையாமல் இருந்தார். அவர் 10 நிமிடங்களுக்கு முன்னர் வீட்டிற்கு சென்றிருந்தால் என்ன நடந்திருக்கும் என நீங்களே சிந்தித்துப் பாருங்கள். அதனால் அவர் கலங்கவில்லை. அடுத்த நாள் வழக்கம் போல் மீண்டும் திவயின காரியாலயத்திற்குச் சென்றார். எந்த ஒரு அச்சுறுத்தலாலும் தன்னைப் பயமுறுத்த முடியாது என அவர் கூறினார். வீட்டின் மீது மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதல் பற்றிய வாக்குமூலத்தை பொலிஸார் திவயின காரியாலயத்துக்குச் சென்றே பெற்றார்கள். அது தன் வீட்டின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை விட தேசிய பொறுப்பே முக்கியமானது என அவர் புரிந்து கொண்டதனாலாகும்.



ஜே.ஆர்.ஜயவர்தனவின் ஆட்சிக் காலத்தின் பின்னர் இந்நாட்டில் ஆட்சிக்கு ஜனாதிபதி பிரேமதாச வந்தார். நாட்டில் நடைபெறும் சில சம்பவங்களை அவ்வாறே செய்தியாக வெளியிடுவதை ஜனாதிபதி பிரேமதாச தமக்கு எதிரானது என எண்ணினார். அதனால் தன்னுடைய பழைய நண்பரான ரணசிங்கவின் தைரியத்தை பொறுக்கவில்லை. அதன் பலனாக 1991 கடுவெல, கொரதோட்டவில் நடைபெற்ற ஊடகவியலாளர்களுக்கான காணி வழங்கும் நிகழ்வில் ஜனாதிபதி பிரேமதாச பகிரங்கமாகவே அவருக்கு ஏசினார். ஒரு தடவை "எட்மன்ட் நீ தெரிந்து கொள்" என கர்ச்சித்தார். அதே மேடையில் அவர் 'விஜய' பத்திரிகை நிறுவனத்தின் தலைவர் ரஞ்சித் விஜயவர்த்தன மீதும் வார்த்தைப் பிரயோகம் செய்தார்.

இவை எதுவும் எட்மன்ட் ரணசிங்கவை பின்னடையச் செய்யவில்லை. எதுவும் முடியாத போது அன்றைய அரசின் பிரபலமான அமைச்சர் சிறிசேன குரேயை உபாலி பத்திரிகை நிறுவனத்தின் தலைவியான லக்மினி ஆர். விஜயவர்த்தனவை சந்திக்க ஜனாதிபதியின் விசேட செய்தியுடன் அனுப்பினார். எட்மன்டை பதவி நீக்கினால் குறிப்பிட்ட வங்கிக்கு செலுத்த வேண்டிய கோடிக்கணக்கான கடனை அடைக்கத் தயார்" என்பதே அந்தச் செய்தியாகும்.

"எட்மன் எனக்கு அதைவிட பெறுமதி மிக்கவர். அதனால் அந்தக் கடனை நான் எவ்வாறாவது அடைக்கிறேன்".

உபாலி பத்திரிகை நிறுவனத்தின் தலைவி அளித்த பதிலால் எதிர்பார்ப்பு வீணாகிய அமைச்சர் குரே திரும்பிச் சென்றார்

அக்காலத்தில்'திவயின' ஒரு பள்ளிக்கூடம். அதன் தலைமை ஆசிரியர் எட்மன்ட். அன்று அவரின் நிழலில் ஒரே ஆசிரிய பீடத்தில் ஒன்றாகப் பணிபுரிந்த ஒரு டசினுக்கும் மேற்பட்டோர் ஒரே காலத்தில் இந்நாட்டின் அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடக நிறுவனங்களில் உயர் பதவிகளை வகித்தார்கள். அமைச்சின் செயலாளர்கள், தலைவர்கள் போன்று பதில் துணைவேந்தர்களாகவும் திவயின ஆசிரியர் பீடத்தை சேர்ந்தவர்கள் பதவி வகித்தார்கள்.

அவருக்குப் பின்னர் திவயின பத்திரிகை ஆசிரியர் பதவி உபாலி தென்னுக்கோனுக்குக் கிடைத்தது. பின்னர் அவர் 'ரிவிர'ஆரம்பப் பத்திரிகை ஆசிரியரானர். அதன்பின்னர் மெரில் பெரேரா, காமினி சுமனசேகர, ஜயந்தசந்திரசிறி, நாரத நிசங்க மற்றும் அனுர சொலமன்ஸ் ஆகியோர் திவயின பத்திரிகையின் ஆசிரியர் பதவியை வகித்தார்கள். கயிரிக்க பேருசிங்க மற்றும் அனுரசிறிவர்தன பின்னர் சுயாதீன ரூபாவாஹினியின் தலைவரானார்கள்.

அதன் பின்னர் அனுர கைத்தொழில் அமைச்சின் செயலாளரானதோடு கயிரிக்க ரிவிர மீடியா கார்ப்பரேஷன் தலைமை நிறைவேற்று அதிகாரியானார். எளிமையான த மெல் ஞாயிறு லக்பிம ஆசிரியர் பதவியை வகித்ததோடு, கித்சிறி விமல் சாந்த மற்றும் ஜட்டில வெல்லபட தினசரி லக்பிம ஆசிரியரானார்கள்.

கருணாதாச சூரியாரச்சி சிலுமின ஆசிரியராக இருந்த வேளையில் தினமின ஆசிரியராக மஹிந்த அபேசுந்தர பதவி வகித்தார் . சுனில் மாதவ பிரேமத்திலக்க லக்மின மற்றும் லக்திவ ஆசிரியர்களானார்கள். ஷான் விஜேதுங்க சுவர்ணவாகினியின் அரசியல் பிரிவு தலைவராக இருந்து பின்னர் இலங்கை பாராளுமன்றத்தில் தொலைத்தொடர்பு பிரிவு முதன்மைப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். தற்போதைய சிலுமின பத்திரிகை ஆசிரியர் தர்மன் விக்கிரமரத்ன. தினமின பத்திரிகை ஆசிரியர் மனோஜ் அபேதீர.

அதற்கு முன்னர் லக்ஷ்மன் பியசேன மற்றும் சாமிந்த வாரியகொட சிலுமின பத்திரிகை ஆசிரியர் பதவியை வகித்தார்கள். தற்போது சாமிந்த ஞாயிறு மற்றும் தினசரி மவ்பிம ஆசிரியராவார். சிரச டி.வி மற்றும் எம். டி.வி பணிப்பாளராக அசோக டயஸ், தற்போதைய செலசினே தலைவர் ஹரித் குணவர்தன, சிறிது காலம் பத்திரிகை நிறுவனத்தின் பணிப்பாளரான தீப்தி அதிகாரி (தற்போது ஜனாதிபதி ஊடகப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர்) போன்று இவர்கள் அனைவரையும் விட மாறுபட்ட பயணத்தை மேற்கொண்டு திவயின ஞாயிறு பத்திரிகையின் துணை ஆசிரியரான திஸ்ஸ வீரசேகர ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் பதில் உபவேந்தரானார்.

இந்நாட்டின் தேசிய ஊடக வலையமைப்பை வழிநடத்தும் வரம்பெற்ற அனைவரும் எட்மன்ட் ரணசிங்கவின் நிழலில் பத்திரிகை கலையை பயின்றவர்கள் ஆவார்கள். அதனால் அவரை இந்நாட்டின் பத்திரிகை கலையின் முன்னுதாரண புருஷர் எனக் கூறுவதை விட வேறு எப்பெயரால் அழைக்க முடியும்?

இக்கட்டுரை வாழ்க்கைப் பயணத்தில் 93 ஆவது மைல் கல்லை கடக்கும் எட்மன்ட் ரணசிங்கவுக்கு சமர்ப்பணம்.

தமிழில்: **வீ.ஆர்.வயலட்...**

# சமனலவெவ நீர்த்தேக்கத்தில் இரத்தினக்கல் அகழ்வுக்கு இடமளிக்க வேண்டாம்

## வெடிப்புகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம்

### சிரேஷ்ட பொறியியலாளர் எச்சரிக்கை

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

சமனலவெவ நீர்த்தேக்கத்தில் இரத்தினக்கல் அகழ்வுக்கு இடமளிக்க வேண்டாம் எனவும் அவ்வாறு இடமளித்தால் வெடிப்புகள் ஏற்பட்டு நீர்க்கசிவுகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் காணப்படுவதாகவும் நீர்த்தேக்கத்தின் சிரேஷ்ட பொறியியலாளர் கபில அபேவர்த்தன நேற்று எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தற்போது நீர்மட்டம் குறைவடைந்துள்ள சூழ்நிலையில் நிலப்பரப்பில் புதைந்துள்ள இரத்தினக்கல் கனியத்தை அகழ்ந்து எடுப்பதற்கு பொது மக்களுக்கு வாய்ப்பளிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அவ்வாறு சமனலவெவ நீர்த்தேக்கத்தில் இரத்தினக்கல் அகழ்வுக்கு இடமளித்தால் அங்கு மேலும் வெடிப்புகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன.



சமனலவெவ நீர்த்தேக்கத்தின் மேற்பகுதியில் சுமார் ஒரு அடியளவில் மண்படை காணப்படுகின்றது. அத்துடன் பிரதேச தரையமைப்பில் இயற்கையான சிதைவுகள் காணப்படுகின்றன. எனவே இவ்வாறான ஒரு தரையமைப்பில் இரத்தினக்கல் அகழ்வுக்காக நிலத்தை தோண்டுவது நீர்த்தேக்கத்தில் தற்போது ஏற்பட்டுள்ள வெடிப்புகளுக்கு மேலதிகமாக மேலும் புதிய வெடிப்புகள், ஓட்டைகள் ஏற்பட வாய்ப்புகள் காணப்படுவதாக அவர் தெரிவித்தார்.

# பாவோதல் போட்டியில் கிறேட்வெஸ்டன் பாடசாலை மாணவன் முதலிடம்

**(தலவாக்கலை குறூப் நிருபர்)**

மத்திய மாகாண தமிழ் மொழித்தினப் போட்டியில் பாவோதல் பிரிவில் முதலிடத்தைப் பெற்று தேசிய மட்டத்திற்கு கிறேட்வெஸ்டன் பாடசாலை மாணவன் எஸ். தனுபிரசாந் தெரிவாகியுள்ளார். இவரை பாராட்டும் முகமாக பாடசாலை அதிபர் எம்.ஐ.எம். பாரிஸ் மாணவனுக்கு பதக்கம் அணிவித்து கௌரவித்தார். மாகாண மட்ட தமிழ் மொழித்தின பாவோதல் பிரிவு 3 போட்டியில் 15 கல்வி வலயங்களுடன் போட்டியிட்டு மாணவன் முதலிடத்தை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. அதேவேளை நுவரெலியா கல்வி வலயத்தின் கீழ் இயங்கும் மிகவும் கஷ்ட பிரதேச பாடசாலையான கிறேட்வெஸ்டன் பாடசாலை மாகாண மட்டத்தில் நடைபெற்ற ஆங்கில மொழி தின போட்டிகள் மற்றும்



தமிழ் மொழித் தின போட்டிகளில் வெற்றி பெற்று தேசிய மட்டத்துக்கு தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# திடீரென தீப் பிடித்து எரிந்த முச்சக்கரவண்டி



**(கம்பளை நிருபர்)**

கம்பளை நகரில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கரவண்டியொன்று திடீரென தீப் பிடித்து எரிந்துள்ளது.

கம்பளையிலிருந்து நாவலப்பிட்டி சென்று கொண்டிருந்த முச்சக்கரவண்டி, கம்பளை நாவலப்பிட்டி பிரதான வீதியில் அமைந்துள்ள கம்பளை ஆதார வைத்தியசாலைக்கு அருகில் வைத்து திடீரென தீப் பிடித்து எரிய ஆரம்பித்துள்ளது.

இதனால் பிரதேச மக்கள் இணைந்து உடனடியாக தீயை கட்டுப்படுத்துவதற்கு முயற்சி செய்தனர்.

தீயினால் முச்சக்கரவண்டிக்கு பகுதியளவில் சேதம் ஏற்பட்டுள்ளது. விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. மேலதிக விசாரணைகளை கம்பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இந்திய உதவித் தூதுவராலயத்தின் அனுசரணையில் சுற்றுலா கண்காட்சி

**(அக்குறணை குறூப் நிருபர்)**

மத்திய மாகாண சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்ய மாகாண சபை மற்றும் இந்திய தூதுவராலயம் நடவடிக்கை எடுத்துள்ளது. அதில் ஓரங்கமாக கண்டி, இந்திய உதவி உயர் ஸ்தானிகராலயம் மற்றும் மத்திய மாகாண வர்த்தகம், வாணிப, சுற்றுலாத் திணைக்களம் என்பன இணைந்து கண்டியில் கல்வி, வர்த்தக கண்காட்சியொன்றை அண்மையில் ஏற்பாடு செய்திருந்தது.

இதில் பாரம்பரிய உணவுகளை எடுத்துக்காட்டும் உணவுத் திருவிழாவும் நடைபெற்றது. இந்நிகழ்வில் மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே மற்றும் இந்திய உதவி உயர்ஸ்தானிகர் டாக்டர் எஸ். ஆதிரா ஆகியோர் இணைந்து ஆரம்பித்து வைத்தனர். சுற்றுலாத்துறையுடன் தொடர்புடைய பலரும் இதன்போது கௌரவிக்கப்பட்டனர்.



# இலங்கை பரீட்சை திணைக்களம்

**பாடசாலைகளுக்கு மாணவர்களை தெரிவு செய்வதற்கும் புலமைப்பரிசில் வழங்குவதற்கான தரம் 5 மாணவர்களுக்காக நடாத்தப்படும் பரீட்சை - 2023**

**நேர அட்டவணை**

| திகதி | பாடம் | நேரம் |
|---|---|---|
| 2023 ஒக்டோபர் 15 ஞாயிறு | **வினாப்பத்திரம் - II** (பல்தேர்வு சுருக்க விடைகள் வழங்கும் 60 வினாக்கள்) | **9.30-10.45 மணி** காலம் - ஒரு மணி 15 நிமி |
| | **வினாப்பத்திரம் - I** (மூன்று தெரிவுகள் கொண்ட பல்தேர்வு-கள் கொண்ட பல்தேர்வு வினாக்கள் 40) | **11.15 - 12.15** காலம் - ஒரு மணத்தியாலம் |

மேற்படி பரீட்சை 2023 ஒக்டோபர் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நாடளாவிய ரீதியில் 2888 பரீட்சை நிலையங்களில் நடைபெறும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

இப்பரீட்சைக்காக விண்ணப்பித்த சகல பரீட்சாத்திகளினதும் வரவு இடாப்பு உரிய பாடசாலை அதிபர்களுக்குத் தபாலில் தற்போது அனுப்பப்பட்டுள்ளன. இதுவரையில் வரவு இடாப்பு கிடைக்கப்பெறாத பாடசாலை அதிபர்கள் http://onlineexams.gov.lk/eic இணைப்பினூடாக பெற்றுக்கொள்ள முடியும்.

**விசாரணைகள் :-**
**தொலைபேசி இலக்கங்கள் : 011-2784208, 2784537, 2786616**
**துரித அழைப்பு இலக்கம் : 1911**
**தொலைநகல் இலக்கம் : 011-2784422**

தபால் முகவரி : பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,
(பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை)
இலங்கை பரீட்சைகள் திணைக்களம்,
பெலவத்தை பத்தரமுல்ல.

**எச்.ஜே.எம்.சீ அமித் ஜயசுந்தர**
**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்**

**6/5/புலமைப்பரிசில்/2023**
**இலங்கை பரீட்சைகள் திணைக்களம்**
**பெலவத்தை பத்தரமுல்ல.**
2023.10.03

# விலைமனுக்களின் இறுதித் திகதியை நீடித்தல்

## விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (பிறைவெட்) லிமிடெட்

பின்வரும் விலைமனுக்கள் தொடர்பில் 2023 செப்டெம்பர் 08 ஆம் திகதி "டெய்லி நியுஸ்", "தினமின" மற்றும் "தினகரன்" பத்திரிகைகளில் வெளியான பத்திரிகை விளம்பரங்கள் தொடர்பிலானது.

| விலைமனு இல | விபரம் |
|---|---|
| 076/T/2023 | மத்தல, மத்தல ராஜபக்ஷ சர்வதேச விமானநிலையத்திற்கு 02 புத்தம் புதிய Tow Tug, 06 Baggage Tractor மற்றும் 02 Passenger Steps இன் வழங்கல் |
| 079/T/2023 | மத்தல, மத்தல ராஜபக்ஷ சர்வதேச விமானநிலையத்திற்கு 01 புத்தம் புதிய தண்ணீர் வண்டி மற்றும் 01 கழிவறை வண்டியின் வழங்கல் |
| 081/T/2023 | மத்தல, மத்தல ராஜபக்ஷ சர்வதேச விமானநிலையத்திற்கு 02 புத்தம் புதிய Container Pallet Loader மற்றும் 03 Baggage Loader இன் வழங்கல் |
| 082/T/2023 | மத்தல, மத்தல ராஜபக்ஷ சர்வதேச விமானநிலையத்திற்கு 02 புத்தம் புதிய Passenger Coach இன் வழங்கல் |
| 083/T/2023 | மத்தல, மத்தல ரஜபக்ஷ சர்வதேச விமானநிலையத்திற்கு 04 புத்தம் புதிய தரை மின் அலகுகாள், 02 Air Starter Units மற்றும் 01 வளிச் சீராக்கி அலகின் வழங்கல் |
| 084/T/2023 | மத்தல, மத்தல ராஜபக்ஷ சர்வதேச விமானநிலையத்திற்கு 05 புத்தம் புதிய Tow Bar களின் வழங்கல் |
| 085/T/2023 | மத்தல, மத்தல ராஜபக்ஷ சர்வதேச விமானநிலையத்திற்கு 13 புத்தம் புதிய பொதி தள்ளுவண்டிகள், 07 Pallet Trollies மற்றும் 10 Container Dollies இன் வழங்கல் |

**மேலுள்ள விலைமனுக்களின் இறுதித் திகதி 2023 ஒக்டோபர் 25 ஆம் திகதி புதன்கிழமை பி.ப. 2.00 வரை நீடிக்கப்பட்டுள்ளது.**

ஒவ்வொரு விலைமனுவின் விலைமனுவுக்கு முந்திய சந்திப்புகளில் ஏனைய மாற்றங்கள் அறிவுறுத்தப்படும்.

**தலைவர்,**
**விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (பிறைவெட்) லிமிடெட்,**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்,**
**கட்டுநாயக்க.**

## மஹாத்மா காந்தியின்...

திங்கட்கிழமை யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்கு முன் னாலுள்ள மகாத்மா காந்தி சிலைக்கு முன்பாக இடம்பெற்றது.

இந்திய நாட்டிற்கு சுதந்திரத்தினை பெற்றுக்கொடுத்த மகாத்மா காந்தி அவர்களின் 154ஆவது ஜனனதின நினைவேந்தலான அஞ்சலி இன்று திங்கட்கிழமை (02) இந்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்ப் பாணம் இந்திய உதவித்துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ் கர் கலந்துகொண்டார்.

காந்தியின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்த அவர்,அங்கு நடைபெற்ற நிகழ்வுகளிலும் பங் கேற்றார்.

காந்தி சேவா சங்கம் வருடாந்தம் வெளியிடும் காந்தியம் சஞ்சிகை யும் இங்கு வெளியிடப்பட்டது. வடமாகாண சபையின் முன்னாள் அவைத்தலைவர் சி சிவஞானம், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் பற்றிக் டிரஞ்சன், யாழ்ப் பாண மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரம், யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை பணிப் பாளர் கலாநிதி த.சத்தியமூர்த்தி, யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் ஸ்ரீசற்குணராஜா, மதத் தலைவர்கள், யாழ்ப்பாண பல் கலைக்கழக சிரேஸ்ட துணைநிலை பேராசிரியர்கள், கலைத்துறையி னர்கள், மற்றும் ஊடகவியாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண் டனர்.

## பாடசாலைகளில்...

நாட்டு மக்களுக்கும் சுபீட்சம் மற்றும் செளபாக்கியம் கிடைக்க பிரார்த்திக்குமாறு கேட்டுக்கொள் கிறேன்.

அதிபர்கள் இவ்விடயம் பற்றி சகல ஆசிரியர்களுக்கும் கல்வி சாரா உத்தியோகத்தர்களுக்கும் முன்கூட் டியே தெரியப்படுத்துவது அவசி யம்.பாடசாலையில் மீலாத் விழா நடத்தப்படும் விதம் தொடர்பாகத் தீர்மானித்து மாணவ, மாணவி களுக்கு அறிவித்தல் அவசியம். இவ்விழாவில் மதகுருமார், அதி பர்கள், ஆசிரியர்கள், கல்வி சாரா உத்தியோகத்தர்கள், மாணவர்கள் மற்றும் பாடசாலை சமூகம் சார்ந் தவர்களைப் பங்குபற்றச் செய்ய வேண்டும். கல்வி நடவடிக்கை கள் பாதிக்கப்படாமல் இவ்விழா நடத்தப்படுவது அவசியம். இவ்வா ரத்தில் பாடசாலை, பாடசாலைச் சூழல் சுத்தம் செய்யப்பட்டு, இஸ் லாமிய கலை அம்சங்களுடன் நேர்த்தியான முறையில் அலங்கரிக் கப்படுதல் சாலச் சிறந்ததாகும்.

தேசிய ரீதியில் ஒரே நாளில், மீலாத் விழாவை வெற்றிகரமாக நடத்துவ தற்கு தேவையான ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித் துள்ளார்.

## சகல நிலையங்களிலும்...

விலை விருத்தங்களின் போது, அனைத்து நிறுவனங்களும் ஒரே விலையின் கீழ் அல்லது போட் டித்தன்மைக்கிணங்க சிறு வித்தி யாசங்களின் கீழ் எரிபொருட்களை விற்பனை செய்வதற்கான சூழல் உருவாக்கப்பட வேண்டுமென்றும் அவ்வாறு இடம்பெறாவிட்டால் சங்கம் என்ற வகையில் கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென் றும் அந்த சங்கத்தின் தலைவர் ஷெல்டன் பெர்னாண்டோ அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

பெட்ரோலியக் கூட்டுத்தாபனத் தின் பகிர்ந்தளிப்பு நிறுவனத்தை ஒழுங்குபடுத்தல் மேற்கொள்வ தற்கு ஒழுங்குபடுத்தல் நிறுவன மொன்றை உருவாக்கவேண்டு மென எரிசக்தி மின்சக்திஅமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித் துள்ள நிலையில், மிக விரைவில் அந்த நிறுவனத்தை ஸ்தாபிக்க வேண்டுமென்றும் அவர் வலியு றுத்தியுள்ளார்.

## தோலில் எழுதப்பட்ட..

மற்றும் தேசிய ஆவணங்கள் ஆணையத்தில் காட்சிக்கு வைக்கப் பட்டுள்ளது. தோலில் எழுதப்பட்ட 32 பக்கங்களைக் கொண்ட இந்த கையெழுத்துப் பிரதி, இறை தூதர் முஹம்மது நபியின் தோழர்களான (ஸஹாபாக்கள்) காலத்தில் எழுதப் பட்டதாகக் கருதப்படுகிறது.

## நளீம் ஹாஜியார்...

தொடர்ந்து 'கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி; அறிவுத்துறைப் பங்களிப் பும் ஆய்வுப் பணிகளும்' எனும் தலைப்பில் ஆய்வு நூல் ஒன்றும் வெளியிடப்படவுள்ளது.

நூல் வெளியீட்டினைத் தொடர்ந்து 'கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி – அறிவுப் பங்களிப்பு' எனும் தலைப்பில் ஜாமிஆ நளீமிய்யா வின் அரபு மொழி கற்கைத் துறைத் தலைவர் கலாநிதி அஷ்ஷெய்க் ஏ.பீ.எம் அப்பாஸ் (நளீமி) விசேட உரை நிகழ்த்துவார்.

மேற்படி வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இந்நிகழ்வில் ஜாமிஆ நளீ மிய்யா பரிபாலன சபைத் தலைவர் அல்ஹாஜ் யாகூத் நளீம் விசேட அதிதியாக கலந்துகொள்வதுடன், கௌரவ அதிதியாக ராபிதாவின் தலைவர் அஷ்ஷெய்க் எம்.ரீ.எம். லாபிர் மதனியும் கலந்து சிறப்பிப் பர்.

இந்நிகழ்வில், உலமாக்கள், கல்விமான்கள், சட்டத்தரணிகள், வைத்தியர்கள், ஊடகவியலா ளர்கள், அரசியல் தலைவர்கள், தொழிலதிபர்கள், நளீமிய்யா வின் விரிவுரையாளர்கள், நளீமிய் யாவின் பழைய மாணவர்கள் மற்றும் சமூகத்தின் பல்துறைசார் ஆளுமைகள் கலந்து சிறப்பிக் கவுள்ளதாக நளீம் ஹாஜியார் நினைவுப் பேருரை மன்றத்தின் செயலாளர் சட்டத்தரணி அஷ் ஷெய்க் டி. ஷாகிர் (நளீமி) தெரி வித்துள்ளார்.

## உச்சத்தை தொட்ட...

களை கொள்வனவு செய்து, நுகர்வோருக்கு விற்பனை செய்ய முடியாதுள்ளதாக வர்த்தகர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

தேசிக்காய் அறுவடை குறைந் துள்ளமையே, விலை அதிகரித்த மைக்கான காரணம் என தெரிவிக் கப்பட்டுள்ளது.

ஊவா மற்றும் வரட்சியுடனான பகுதிகளிலேயே தேசிக்காய்ச் செய்கை அதிகளவில் முன்னெடுக் கப்படுகின்றன.

## பயணச்சீட்டின்றி...

செலுத்த நேரிடும் என அறிவிக் கப்பட்டுள்ளது.

பேருந்துகளில் பயணச்சீட்டின்றி பயணிப்பதால் நாளாந்தம் சுமார் 70 இலட்சம் ரூபா நட்டம் ஏற்படு கிறது.

இதையடுத்தே இலங்கை போக் குவரத்து சபை இத்தீர்மானத்தை எடுத்துள்ளது.

இது தொடர்பிலான சட்ட நடவ டிக்கைகள், தற்போது மேற்கொள் ளப்பட்டு வருகின்றன.

அடுத்த வருடம் இச்சட்டம் முழுமையாக நடைமுறைப்ப டுத்தப்படும் எனவும் இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் லலித் டி. அல்விஸ் கூறியுள்ளார்.

## ஜனாதிபதி..

"தமிழர்களின் பிரச்சனைகளுக்கு தீர்வு வழங்குவதாக கூறி பதவிக்கு வரும் ஜனாதிபதிகள், பின்பு தமது நிலைப்பாட்டிலிருந்து மாறி விடு கின்றனர்.

தற்போது ஜனாதிபதியாக உள்ள ரணில் விக்ரமசிங்க கூட 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமை யாக நடைமுறைப்படுத்துவதாக கூறினார்.

பின்னர், அந்நிலைப்பாட் டை அவர் கைவிட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் நடைபெ றப்போகும், வரை தீர்வு கிடைக் கப்போவதில்லை என்பது எங் களுக்கு தெளிவாக தெரிகிறது. எனவே,அடுத்து வரும் அதிபர் தேர்தலில் தமிழ் மக்கள் ஒன்று பட்டு தமிழர் ஒருவரை வேட்பாள ராக நிறுத்தவேண்டும் என்றார்.

## மின்சார... (03 ஆம் பக்கத் தொடர்)

அமைந்துள்ளது. இப்பல்கலைக் கழகத்தை பயன்படுத்துவோர் இந்த மின்சார வாகனங்களை அறி முகப்படுத்த முடியும்.

இலங்கையில் பல நிறுவனங் களால் தயாரிக்கப்படும் மின்சார சைக்கிள்கள் உட்பட ஏராளமான வாகனங்கள் உள்ளன. இந்தப் பகுதியில் உள்ள நிறுவனங்களின் ஊழியர்களுக்கு இந்த வாகனங் களை அறிமுகப்படுத்த வாய்ப்பு உள்ளது. இலங்கையில் இருப துக்கும் மேற்பட்ட நிறுவனங்கள் மின்சார வாகன உற்பத்தியில் ஈடு பட்டுள்ள போதிலும், நாட்டில் உள்ள பெரும்பான்மையான மக் களுக்கு இது குறித்த நடைமுறை புரிதல் இல்லாதுள்ளது. குறைந்த செலவில் இயக்கக்கூடிய மின்சார வாகனங்கள் இலங்கையில் தயா ரிக்கப்பட்டுள்ளன.

நாட்டிற்கு முன்னுதாரணமாக போக்குவரத்து அமைச்சை பசுமை யாக்கும் கொள்கையின் கீழ், இந்த வாகனங்களின் பயன்பாட்டை அதிகாரிகளுக்கு அறிமுகப்படுத்த அமைச்சு தயாராகி வருகிறது.

இதற்காக பசுமைப் பல்கலைக் கழகம், நெனோ தொழினுட்ப நிறுவனம், மோட்டார் போக்குவ ரத்து ஆணையாளர் திணைக்களம், மஹிந்த ராஜபக்ஷ கல்லூரி உள் ளிட்ட உள்ளூராட்சி நிறுவனங்களி னதும் பங்களிப்பைப் பெற தீர்மா னிக்கப்பட்டுள்ளது.

இக்கண்காட்சியின் முக்கிய நோக்கம் மின்சார சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் பிற வாகன உற்பத்தியா ளர்கள் மீது அரசு நிறுவனங்களின் தலைவர்களின் கவனத்தை ஈர்ப் பது மற்றும் அதிகரித்து வரும் எரிபொருள் பிரச்சினைக்கு ஒரே மாற்றாக மின்சார வாகனங்களின் பயன்பாட்டை ஊக்குவிப்பதுமா கும்.



புறக்கோட்டை லயன்ஸ் கழகமும் புறக்கோட்டை பொலிஸ் நிலையமும் இணைந்து ஏற்பாடு செய்த இரத்ததான முகாம் புறக்கோட்டை ஐந்துலாம்பு சந்தி பழைய நகர மண்டபத்தில் லயன் சுரேஷ், லயன் நாதன், உப பொலிஸ் அதிகாரி கிரேசியன் ஆகியோரின் ஏற்பாட்டில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (01.10.2023) நடைபெற்றது. சர்வதேச லயன்ஸ் கழக 306 பி1 மாவட்ட ஆளுநர் பிளஸிடஸ் பீட்டர், உதவி பொலிஸ் அத்தியட்சகர் கே. ஜி. கே. கிரியல்ல மற்றும் புறக்கோட்டைபொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சிலோகம, ஆகியோரின் பங் குபற்றுதலுடன் இரத்ததானம் வழங்கும் புண்ணிய நிகழ்வு நடைபெற்றது. படத்தில் இரத்ததானம் வழங்கும் நிகழ்வையும் அவர்களுக்கான சான்றிதழ் வழங்கப்படுவதையும் கலந்து கொண்ட புறக்கோட்டை லயன்ஸ் கழக உறுப்பினர்களையும் காணலாம்.

# தேர்தல் ஆணைக்குழுவின் புதிய தலைவர் உட்பட உறுப்பினர்களுக்கு மீண்டும் அழைப்பாணை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

தேர்தல் ஆணைக்குழுவின் புதிய தலைவர் உட்பட உறுப் பினர்களுக்கு மீண்டும் அழைப் பாணை விடுப்பதற்கு நடவ டிக்கை எடுக்குமாறு உச்ச நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப் பித்துள்ளது.

கடந்த மார்ச் மாதம் 09 ஆம் திகதி நடத்துவதற்கு தீர்மானிக் கப்பட்டிருந்த உள்ளூராட்சி சபை தேர்தல் பின்போடப்பட்டதால், அடிப்படை மனித உரிமை மீறப் பட்டுள்ளதாக தீர்ப்பளிக்குமாறு தெரிவித்தும் அந்த தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் உத்தரவு பிறப்பிக் குமாறு கோரி தாக்கல்செய்யப் பட்டுள்ள அடிப்படை உரிமை மனுவில் பிரதிவாதியாக இவர் கள் பெயரிடப்பட்டுள்ளனர்.

உள்ளூராட்சி சபை தேர்தலை ஒத்திப்போடுவதற்கு எதிராக தேசிய மக்கள் சக்தி ஐக்கிய மக்கள் சக்தி மாற்று கொள் கைகளுக்கான கேந்திர மத்திய நிலையம் மற்றும் பெப்ரல் அமைப்பு ஆகியன தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனு மீதான விசாரணையையடுத்து நீதிபதி உள்ளிட்ட ஐவர் கொண்ட உச்சநீதிமன்ற குழு இந்த உத்த ரவை பிறப்பித்துள்ளது.

மேற்படி மனு பிரதம நீதியர சர் ஜயந்த ஜயசூரிய, பிரியந்த ஜயவர்தன, விஜித் மலல்கொட, முர்து பெர்னாண்டோ மற்றும் காமினி அமரசேகர ஆகியோர் அடங்கிய ஐவர் கொண்ட உச்சநீ திமன்ற நீதிபதிகள் குழாம் முன் னிலையிலேயே விசாரணைக்கு எடுத்துக்கப்பட்டது. இதன் போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.

# குளவி கொட்டுக்கு இலக்காகி அதிபர் உட்பட 26 பேர் காயம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

குளவி கொட்டுக்கு இலக்காகி வென னப்புவ மாட்டின் டீ பொரஸ்ட் வித்தியால யத்தின் அதிபர் உள்ளிட்ட 26 பேர் ஆஸ்பத் திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்த அனைவரும் லுணுவில பிரதேச ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டு சிகிச்சை பெற்று வருவதாக தெரி விக்கப்படுகிறது.

நேற்று நண்பகல் இவர்கள் அனைவரும் குளவிகொட்டுக்கு இலக்காகியதாகவும் அவர்களுள் பாடசாலை அதிபர், ஆசிரியர் நால்வர் மற்றும் 21 மாணவர்களும் உள் ளடங்குவதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அவர்களுள் பாடசாலை அதிபர், ஆசிரி யர்கள் இருவர் மற்றும் நான்கு மாணவர் களும் மேலதிக சிகிச்சைக்காக மாரவில வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக வும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

பாடசாலைக்கு அருகாமையில் அமைந் துள்ள தோட்டத்தில் பம்பர வகைக் குள விக்கூடு திடீரென கலைந்தது. இதனாலே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளனர்.

# பாணந்துறை ரயில் நிலையத்தில் மோதல்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

பாணந்துறை ரயில் நிலையத்தில் ரயில்வே ஊழியர்கள், மற்றொரு குழுவினருக்குமி டையில் நேற்று இடம்பெற்றுள்ள தாக்குதல் சம்பவத்தில், ரயில் நிலைய அதிபர் ரயில்வே ஊழியர் உட்பட சிலர் காயமடைந்து ஆஸ் பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ரயில்வே ஊழியர்கள் மீது தாக்குதல் நடத் தப்பட்டுள்ளமை தொடர்பில் ஒரு தந்தையும் மகனும் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் பாதுகாப்புடன் ஆஸ்பத்திரியில் மகன் சிகிச்சை பெற்று வருவதாகவும் பாணந் துறை தெற்கு பொலிஸார் தெரிவித்தனர். பாணந்துறை சாகர மாவத்தையைச் சேர்ந்த 50 வயது நபரும் மற்றும் 23 வயது நபரொரு வரும் இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதா கவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## எட்மண்ட் ரணசிங்க...

மேற்கொண்டுள்ள சிரேஷ்ட ஊடகவியலாளர் களை கௌரவிக்கும் ஆரம்ப நிகழ்வாக இந்நி கழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் எண்ணக்கருவுக்கமைய இவ்விழா இடம்பெறுகிறது.

அகவை 93 ஐ,எட்டியுள்ள ரணசிங்கவின் 07 தசாப்த ஊடக பணியை பாராட்டும் வகையில் எழுதப்பட்ட எட்மண்ட் பத்திரிகைப் புரட்சி ("எட் மண்ட் பத்தர விப்லவய") எனும் நூல் இவ்விழா வில் வெளியிடப்படவுள்ளது.

திவயின மற்றும் ரிவிர பத்திரிகைகளின் முன்னாள் ஆசிரியரான அமெரிக்காவில் வசிக் கும், உபாலி தென்னகோன் இந்நிகழ்வில் ஆரம்ப உரை நிகழ்த்தவுள்ளார். 1952 இல், லேக்ஹவுஸ் நிறுவனத்தில் 'டெயிலிநியுஸ்' பத்திரிகையின் ஊடகவியலாளராக ஊடக வாழ்க்கையை ஆரம்பித்த எட்மண்ட ரண சிங்க, தினமின பத்திரிகையின் பிரதிப் பணிப் பாளராக பணியாற்றிய 1973 காலப்பகுதியில், ஹேக் ஹவுஸ் நிறுவனம் அரசுடமையாக்கப் பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து பதவி வில கினார்.

1977 ஆம் ஆண்டுகளில் மீண்டும் லேக் ஹவுஸின் வேண்டுகோளுக்கிணங்க 'தினமின' பத்திரிகையின் ஆசிரியராக பதவியேற்ற ரணசிங்க பின்னர் சிலுமின பத்திரிகையின் ஆசிரியராகவும் பதவி வகித்தார்.

1981 ஆம் ஆண்டில் 'திவயின' பத்திரிகையின் இணை ஆசிரியராக நியமனம் பெற்ற ரணசிங்க, குறுகிய காலத்தில் நாட்டின் பத்திரிகை துறையை புதிய பாதைக்கு இட்டுச் சென்று பிரசித்தப்ப டுத்தினார்.

திவயினவின் முதலாவது ஆசிரியர் பீட பணிப் பாளரான ரணசிங்க, தனது 86 ஆவது வயதில் 2016 ஆண்டில் மீண்டும் 'சிலுமின' ஆசிரியராக பதவி வகித்தமை குறிப்பிடத்தக்கது.

## வீட்டிலிருந்தவாறே....

வசதிகள் கிடைக்கும் என்றும் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (02) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக் கும்போதே, இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் இதனைத் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத்,

நாட்டில் அரச சேவையின் வினைத்திறனை மேம்படுத்தவும் முறைகேடுகளைகத் தடுக்கவும் அரச சேவையை முழுமையாக டிஜிட்டல் மய மாக்க வேண்டும். எனவே, இது தொடர்பில் அவ தானம் செலுத்திய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, 2023ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட அறிக்கையின்போது அனைத்து அரச நிறுவனங்க ளும் டிஜிட்டல் மயமாக்கப்பட வேண்டுமெனக் குறிப்பிட்டார்.

பிரதேச செயலகங்கள், பிரதேச சபைகள், மாநகர சபைகள், மாவட்டச் செயலகங்கள் உள்ளிட்ட ஒன்பது வகையான அரச நிறுவனங்களைத் தெரிவு செய்து, அரச சேவையை டிஜிட்டல் மயமாக்கும் வகையில் ஒன்பது முன்னோடி வேலைத் திட்டங் கள் தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

மேலும், எதிர்வரும் 07 ஆம் திகதியிலிருந்து ஒன்லைன் முறையில் (eRL 2.0) வாகன வருமான வரி அனுமதிப்பத்திரம் பெறும் வசதிகள் ஏற்படுத் தப்படவுள்ளன.

தொழினுட்ப இராஜாங்க அமைச்சும் இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்ப சங்க மும் இணைந்து இந்த வேலைத்திட்டத்தை நடை முறைப்படுத்துகின்றன.

மேல் மாகாணம் தவிர்ந்த ஏனைய 08 மாகா ணங்களையும் உள்ளடக்கிய வகையில், வாகன வருமான வரி அனுமதிப்பத்திரம் வழங்கும் புதிய செயல்முறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இத் திட்டத்தை அனைத்து அரச நிறுவனங்களுக் கும் விரிவுபடுத்தி அடுத்த மாதம் மார்ச் மாதத்திற் குள் முழுமையாக ஒன்லைனில் கட்டணங்களை செலுத்தத் தேவையான ஏற்பாடுகள் முன்னெடுக்க பட்டு வருகின்றன.

டிஜிட்டல் மயமாக்கல் மூலம் நாடு முழுவதும் அரச சேவையை வலுப்படுத்த முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த வேலைத்திட்டத்தை அடைவதற்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பணிப்புரை யின் பேரில் Digi – Econ 20232030' வேலைத்திட் டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கு இணையாக தொழினுட்பக் கண்காட்சி கள், மாநாடுகள், டிஜிடல் துறையில் திறமைகளை வெளிப்படுத்திய இளைஞர், யுவதிகளை பாராட் டும் நிகழ்வுகள் போன்றன நடத்தப்படவுள்ளன. நாட்டில் புதிய திட்டங்களை ஆரம்பிப்பதற்கான டிஜிட்டல் முதலீட்டு மாநாடு எதிர்வரும் ஒக்டோ பர் 13ஆம் திகதி கொழும்பு ஷங்ரிலா ஹோட்ட லில் நடைபெறவுள்ளது. இதில் நூற்றுக்கணக்கான முதலீட்டாளர்கள் பங்கேற்க உள்ளனர்.

இது, நாட்டின் முதலீடுகளை வலுப்படுத்த உதவும்.

இந்த நாட்டில் டிஜிட்டல் பொருளாதாரத் திட்டத்தை உருவாக்குவதே இந்த Digi – Econ திட்டத்தின் முக்கிய குறிக்கோள் ஆகும். டிஜிட் டல் பொருளாதாரத்தின் மூலம் குறுகிய காலத் தில் அந்நியச் செலாவணியை ஈட்ட முடியும். இதன் மூலம் நாட்டின் பொருளாதாரம் வலுப் பெறும் என எதிர்பார்ப்பதாக தொழினுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் மேலும் தெரிவித்தார்.

## 06 மில்லியன், டொலர்...

தலைமையில் நடைபெற்ற இப்பேச்சுவார்த்தை யில், ஸ்ரீலங்கன் விமான சேவை கட்டுப்பாட்டு அதிகாரிகள் மற்றும் தொழிற்சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். அமைச்சின் கேட்போர் கூடத்தில்,விமானங்கள் தாமதமடைந்தமைக்கான காரணங்களை அமைச்சர் கேட்டறிந்தார்.விமா னங்களில் நிலவிய தொழினுட்பக் கோளாறுகளே இந்தத் தாமதத்திற்குக் காரணமென,அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.இது குறித்து தெரிவித்த விமான சேவை நிர்வாக அதிகாரிகள்,தொழிற்சங்க நடவ டிக்கைகள் காரணமாக சட்டப்படி வேலை மேற் கொண்டதாலே இந்நிலை உருவானதாக தெரிவித் துள்ளனர்.இவர்களின் கருத்துக்களை கேட்டறிந்த அமைச்சர், தற்போது 21 விமானங்கள் சேவையில் உள்ளன. இதற்காக 260 விமானமோட்டிகள் சேவையிலுள்ளனர்.ஒரு விமானத்திற்காக 12 பேர் என்ற அடிப்படையில் இவர்கள் சேவையாற்றுகின் றனர்.

இது, சர்வதேச ரீதியான சட்டங்களுக்கு உட்பட் டதாகும். அதேவேளை, சர்வதேச சட்டங்களின் படி விமானி ஒருவர் மாதத்திற்கு 100 மணித்தியா லம் பறக்க வேண்டும். கடந்த காலங்களில் எமது விமானிகள் 60 மணித்தியாலங்கள் மட்டுமே சேவையில் ஈடுபட்டுள்ளனர். 80 மணித்தியாலமா வது இது அதிகரிக்கப்பட வேண்டும் என்றும்.

இவ்வாறு செயற்பட்டால் இவ்வாறான பிரச் சினைகள் ஏற்படாது. சம்பள முரண்பாடுகள் தொழிற்சங்கங்களின் மத்தியில் காணப்படுகின் றன.ஶ்ரீலங்கன் விமான சேவையானது தற்போது 1.2 பில்லியன் அமெரிக்கடொலர் கடனை செலுத்த வேண்டியுள்ளது.இந்நிலையில் இதற் கான வட்டியையும் செலுத்த வேண்டியுள்ளதாக வும் அமைச்சர் தெரிவித்தார்.

## தட்டுப்பாடின்றி...

கடந்தவாரம் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக வும் அமைச்சர் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் நாட்டில் நிலவிய கொவிட் பரவல் மற்றும் பொருளாதார நெருக்கடி காரண மாக மருந்துப் பொருட்களை அவசரமாக கொள்வ னவு செய்ய நேர்ந்ததாகவும் அந்த சந்தர்ப்பங்களில் அவ்வாறு மருந்துகளை கொள்வனவு செய்யாவி டில் நோயாளிகளுக்கு தேவையான மருந்துகளை வழங்க முடியாமல் போயிருக்கும் என்றும் அமைச் சர் தெரிவித்தார்.

மேலும் குறிப்பிட்ட அமைச்சர்,மருந்துகளின் அவசியத்தைக் கவனத்திற்கொண்டு அவசர மருந் துக் கொள்வனவுகள் இடம்பெற்றுள்ளதே தவிர எவரதும் தனிப்பட்ட தேவைக்கிணங்க அவசர மருந்துக் கொள்வனவு இடம்பெறவில்லை. தொழிற்சங்கங்கள் அவசர மருந்துக் கொள்வ னவிற்கு எதிர்ப்பு தெரிவித்து வந்தன. அந்த வகையில் 307 மருந்துவகைகள் இந்திய கடன் திட்டத்தின் கீழ் கடந்த காலங்களில் கொள்வனவு செய்யப்பட்டதுடன், அதில் இரண்டு மருந்துகள் தரம் குறைந்த மருந்துகளாக கருதப்பட்டன. நாட் டுக்குத் தேவையான மருந்துகளில் நூற்றுக்கு 90 வீதமான மருந்துகள் இந்தியா மற்றும் பங்களா தேஷ் நாடுகளிலிருந்து கொள்வனவு செய்யப்படு கின்றன.

அதனால் அந்த நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு அரசாங்கங்கங்களுக்கிடையில் மருந்துகளை கொள்வனவு செய்வதற்கான வழிமுறை எதிர்காலத்தில் பின்பற்றப்படவுள்ளது.

அரசாங்கம் மற்றுமொரு அரசாங்கத்திடமிருந்து மருந்துகளைக் கொள்வனவு செய்யும் முறைமை யானது முறைக்கேடுகளை வெகுவாகக் குறைத் துக் கொள்ள வழிவகுக்கும்.

எதிர்வரும் 3 மாதங்களுக்குத் தேவையான 64 மருந்து வகைகளில் 54 மருந்து வகைகள் பங்களா தேஷ் அரசாங்கத்திடமிருந்து நாட்டுக்கு நன்கொ டையாக வழங்குவதற்கு இணக்கப்பாடு காணப் பட்டுள்ளது.

அத்துடன் தட்டுப்பாடின்றி நோயாளர்களுக்குத் தேவையான மருந்துகளை பெற்றுக் கொடுப்ப தற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமென்றும் அதேவேளை சுயாதீன சுகாதார சேவையைப் பாது காப்பதற்கும் அரசாங்கம் தேவையான நடவடிக் கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## கிழக்குப் பல்கலையின்....

ஞபாகார்த்த மண்டபத்தில் இந்நிகழ்வு இடம் பெறவுள்ளது.

பல்கலைக்கழக வேந்தர் ஓய்வு பெற்ற பேரா சிரியர் மா. செல்வராஜா தலைமையில் பட்ட தாரிகளுக்கு பட்டங்கள் வழங்கப்படவுள்ளன. இந்நிகழ்வில் இலங்கை, மாலைதீவு மற்றும் தென்ஆசியாவிற்கு உரித்தான உலக வங்கியின் முன்னனி பொருளியியலாளரும், மனித அபிவி ருத்திக்கான தலைவருமான பேராசிரியர் ஹர்ஷ அதுருபான, இலங்கைக்கான குவைத் நாட்டின் தூதுவர் கலாப் எம். எம். பூ. தாயிர் மற்றும் பொது நலவாய கல்விக்கான பிரதம நிறைவேற்றுத் தலை வரான பேராசிரியர் ஆஷா எஸ் கன்வார் ஆகியோர் பிரதம விருந்தினர்களாக கலந்துகொள்ளவுள்ள னர்.

இப்பொதுப் பட்டமளிப்பு விழாவின் போது கலாநிதிப் பட்டம், கல்வியியல், விவசாய விஞ் ஞானப்பட்டம், கலை, வியாபார நிருவாகம், அபி விருத்தி பொருளியல் ஆகிய முதுமாணிப் பட்டங் கள் வழங்கப்படவுள்ளன.மேலும்,முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு டிப்ளோமா பட்டம், வைத் தியமாணி, சத்திரசிகிச்சைமாணி, தாதியியல், விஞ்ஞானமாணி, சித்தமருத்துவ சத்திரசிகிச்சை இளமாணி, சிறப்பு விவசாய விஞ்ஞானமாணி ஆகிய பட்டங்களும் வழங்கப்படவுள்ளன.இப் பட்டமளிப்பு விழாவில் மொத்தமாக 1760 பட் டங்கள் வழங்கப்படவுள்ளன. இளமாணிப் பட் டங்கள் முதலாம் நாள் (07) முதலாவது அமர்வில் வழங்கப்படவுள்ளது.

முதலாம் நாளின் 2 ஆவது மற்றும் 3ஆவது அமர் வுகளில் வர்த்தகத்துறை சார்ந்த 274 பட்டங்களும் நுண்கலை சார்ந்த 318 பட்டங்களும் வழங்கப்ப டும்.

இரண்டாம் நாளில் கல்வியியல் மற்றும் விசேட கலைத் துறைகளில் 501 பட்டங்களும், விஞ்ஞா னம், கணினிசார் கற்கைளில் 88, மொழி, தொடர் பாடல் மற்றும் உயிரியல் முறை, முயற்சியாண்மை ஆகிய துறைகளில் 255, வணிகத் துறையில் வெளி வாரியாக 56 பட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

# இலங்கை முஸ்லிம் ஆய்வியல் துறையில் ஒரு அடையாளம் கலாநிதி எம்.ஏ.எம்.சுக்ரி



(1940 - 2020)

பேராளுமையின் சின்னம், அறிவுப் பண்பாட்டின் அடையாளம் மர்ஹூம் கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி, இலங்கை முஸ்லிம் புலமைத்துவ வரலாற்றில் தனித்துவமான இடத்தை தக்கவைத்துக் கொண்டவர். தென்னிலங்கையில் பிறந்து தேசத்துக்கும் சர்வதேசத்துக்கும் அறிவுத் தொண்டாற்றியவர்.

தேச நலனுக்காக உழைத்த கொடை வள்ளல் நளீம் ஹாஜியார் (1933/2005) அவர்களின் செல்வத்தால் ஸ்தாபிக்கப்பட்ட ஜாமிஆ நளீமிய்யா கலாபீடத்துக்கு தனது அறிவால் பெரும் பங்காற்றியவர். நான்கு தசாப்த காலம் பணிப்பாளராகப் பணியாற்றி அக்கலாநிலையத்தைச் செம்மைப்படுத்தியவர். அவர் இவ்வுலகை விட்டு மறைந்து மூன்று ஆண்டுகள் கழிந்தாலும் பலர் மனங்களில் மறையாது இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

விரிவுரையாளர், ஆய்வாளர், எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர், பேச்சாளர், பரீட்சகர், ஆலோசகர்... என பல்பரிமாணங்களில் பரிணமித்தவர். அவர் நம்மிடையே விட்டுச்சென்ற சிந்தனைகளும் கருத்துக்களும் ஏற்றம் மிகுந்தவை, எண்ணிமாளாதவை. பல தலைப்புக்களில், கோணங்களில் ஆராயப்படத் தகுதியானவர் அவர்.

**பன்மொழித் தேர்ச்சி**

"தாய்ப் பால் போல தாய்மொழிக் கல்வியும், சத்துணவு போல பன்மொழி அறிவும்" என்பது அனுபவ மொழி. பன்மொழிப் புலமை ஒருவருக்கு மேன்மையாக சிந்திக்க, பல வடிவங்களில் விடயங்களை ஆராய உதவி செய்கிறது. ஒருவரின் அறிவுத் திறனை கூடிய காலம் பேண உதவுகிறது. மத, சமூக, கலாசார அடையாளங்களையும் பண்பாடுகளையும் ஆழமாக அறிந்து கொள்ள அது துணை புரிகிறது.

அந்த வகையில், மத்திய கால அறிவியல் துறையின் அபார வளர்ச்சிக்கு பணியாற்றிய முஸ்லிம் மேதைகளும் நவீன மற்றும் சமகால சிந்தனைச் சீர்த்திருத்தங்களை மேற்கொண்ட புத்திஜீவிகளும் தமது அறிவுசார் பங்களிப்புக்களை வெற்றிகரமாக நிறைவு செய்ய பின்புலமாகச் செயற்பட்டது அவர்கள் பெற்றிருந்த பன்மொழித் தேர்ச்சி என்பதில் சந்தேகமில்லை. இந்த அறிவியல் பாரம்பரியத்தில் தன்னையும் வாரிசாக மாற்றிக்கொண்ட கலாநிதி சுக்ரி, தனது புத்திஜீவித்துவத்தை வெவ்வேறு வடிவங்களில் வெற்றிகரமாக வெளிக்காட்டினார். *Islam and Education* (1979), *Mankind in Peril* (1979) மற்றும் *Muslims of Sri Lanka: Avenues to Antiquity* (1986) போன்ற நூல்கள் அவரின் ஆங்கில மொழிப்புலமையின் சான்றுகள்.

செம்மொழியாம் தமிழ் மொழியில் அவரின் எழுத்துக்களும் பேச்சுக்களும் ஏராளம். ஆத்ம ஞானிகளும் அறப்போராட்டங்களும் (1984), நளீம் ஹாஜியார் வாழ்வும் பணியும் (1993), இஸ்லாமும் மனித உரிமைகளும் (1996), இஸ்லாமிய வாழ்வியல் கோட்பாடுகள் (1999) போன்ற நூல்களும் ஏனைய பல எழுத்தாக்கங்களும் முஸ்லிம் தமிழ் இலக்கியத்துக்கு கலாநிதி அவர்கள் ஆற்றிய பங்களிப்பின் அடையாளங்கள்.

இலங்கை வானொலியின் முஸ்லிம் சேவையில் பிரபல நிகழ்ச்சியாக விளங்கிய "தத்துவ வித்துக்கள்" தொடர் பேச்சின் மூலம் பல்லாயிரம் நேயர் நெஞ்சங்களை கவர்ந்து கொண்டவர் கலாநிதி சுக்ரி. இமாம் அபூ தாலிப் அல்மக்கீ ( மரணம் 996) அவர்களின் "கூதுல் குலூப்", இமாம் கஸ்ஸாலி (10581111) அவர்களின் "இஹ்யாஉ உலூமித்தீன்" போன்ற அரபு மூலாதாரங்கள் கலாநிதி அவர்களின் இத்தொடர் பேச்சை அலங்கரிக்கக் காரணமாகின. இது அவரின் அரபு மொழித் தேர்ச்சிக்கு ஓர் எடுத்துக்காட்டு.

அத்துடன், தேசிய பன்னாட்டு அரங்குகளில் பல மொழிகளில் அவர் வழங்கிய சொற்பொழிவுகள், மாநாட்டுப் பேருரைகள், தொடக்க உரைகள், ஆய்வுரைகள், ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பித்தல் போன்றனவும் அவரின் மொழிச் செழுமைக்கு சான்றுகளாகின்றன. தேசிய மொழி சிங்களத்திலும் பல கலந்துரையாடல்களை நடத்தி, உரைகளையும் நிகழ்த்த அவர் தவறவில்லை.

**பல்கலை நிபுணத்துவம்**

"நூல் பல கல், பலன் பல பெறுவாய்" எனும் முன்னோர் வாக்கிற்கு முத்தாப்புக் கொடுத்தவர் கலாநிதி சுக்ரி. விசால அறிவு மீது கொண்ட ஆர்வம், அவரின் அன்புக்குரிய பேராசான்களின் அறிவாளுமைத் தாக்கம் என்பதுடன் இடைக்கால மற்றும் நவீனத்துவ முஸ்லிம் அறிஞர்கள் பலர் பெற்றிருந்த கலைப் பன்மைத்துவ குணாதிசயங்களும் கலாநிதி அவர்களின் கல்வி ஆளுமையில் பெரும் செல்வாக்குச் செலுத்தியிருந்தன.

இதன் விளைவாக, நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட வாசிப்பு, தொடரான அறிவுத் தேடல், துறைசார் நிபுணர்களுடனான சந்திப்புகள் மூலம் பரந்த அறிவையும் விரிந்த புரிதலையும் பெற்றுக் கொண்ட கலாநிதி அவர்கள், தஸவ்வுப் எனும் தனது துறைசார் கல்விக்கு அப்பால் பல கலைகளிலும் கால் பதிக்கலானார்.

அல்குர்ஆன், ஹதீஸ், பிக்ஹ், தமிழ் இலக்கியம், அரபு மொழி, மெய்யியல், மதங்கள், வரலாறு, சமூகவியல், ஆய்வு முறைமை போன்ற இன்னோரன்ன துறைகளில் பாண்டித்தியத்தை அவர் வெளிப்படுத்தினார்.

**ஒருங்கிணைந்த அறிவு *(Integrated Knowledge)***

தன்மையில் முரண்பட்ட, கொள்கையில் வேறுபட்ட இரு அறிவுத் துறைகளை ஒன்றுசேர்த்து நோக்கும் ஓர் அறிவார்ந்த செயல் அல்லது முயற்சியை ஒன்றிணைந்த அறிவு எனலாம். மானுடக் கலைகளை (Human Sciences) இஸ்லாமியப் பார்வையுடன் அணுகி, அறிவுகளை நெறிப்படுத்துவதன் மூலம் சிறந்த கற்றல் கற்பித்தல் மரபை எவ்வாறு தோற்றுவிக்க முடியும் என்பதில் இஸ்லாமிய அறிஞர்கள் பல கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். அதன் சாத்தியப்பாடுகளையும் நிரூபித்துள்ளனர்.

இந்த கருத்தாடல் நீரோட்டத்தில் இணைந்து கொண்ட கலாநிதி சுக்ரி, இலங்கையில் இச்சிந்தனையை ஒழுங்கமைக்கப்பட்ட விதத்தில் அறிவியல்பூர்வமாக அறிமுகம் செய்தவர் எனக் குறிப்பிட முடியும்.

"இஸ்லாமிய அறிவுப் பாரம்பரியம்" எனும் (2016) ஆய்வுக் கட்டுரை யில் அறிவு, அதன் வகைகள், அவற்றின் ஒருங்கிணைப்பு தொடர்பாக அவர் முன்வைத்திருக்கும் கருத்துக்கள் மிகப் பிரதானமானவை. "இஸ்லாமிய நோக்கில் அறிவு அல்லது கலைகள் இரண்டு வகைப்படும். ஒன்று 'அல்உலூமுல் நக்லிய்யா' எனும் இறை வஹி (Revelation) வழிகாட்டல் அடிப்படையில் எழுப்பப்பட்ட கலைகள். குர்ஆன், ஹதீஸ், அகீதா, பிக்ஹு போன்ற சன்மார்க்கக் கலைகள் இவற்றுள் அடங்கும். இரண்டாவது, பகுத்தறிவின் (Reason) அடிப்படையில் வடிவமைக்கப்பட்ட கலைகளான பொறியியல், தத்துவம், மருத்துவம், பொருளியல், வானவியல் போன்ற மானுடக் கலைகள். இவை 'அல்உலூமுல் அக்லிய்யா' பகுத்தறிவு ரீதியான கலைகள் என அழைக்கப்படும்.

கல்வி, இலக்கியம், வரலாறு, உளவியல், ஒழுக்கவியல், தொல்பொருளியல், சூழலியல், ஆய்வியல், அழகியல் என பல ஆய்வுத் தலைப்புக்களில் நூல்கள், சஞ்சிகை ஆக்கங்களை வெளியிட்டுள்ளமை கலாநிதி சுக்ரி அவர்களின் வரலாற்றுச் சாதனைக்கான சான்று. இன்னும் மேலாக, அறிவுகளுக்கிடையில் மாத்திரமல்ல, அறிஞர்களுக்கிடையிலும் ஒப்பு நோக்குதல்களை மேற்கொள்வதன் மூலம், இஸ்லாமிய சிந்தனையை மேலும் ஆழப்படுத்த முடியும் என்பதற்கு அவர் உதாரண புருஷராக விளங்கியுள்ளார்.

பாரதி, இக்பால், இமாம் கஸ்ஸாலி, டேகார்ட், இப்னு கல்தூன், ஆகஸ்ட் காம்ட் போன்ற ஆளுமைகளுக்கிடையிலான ஒப்பீட்டாய்வுகள் அவற்றுள் சில.

ஆழ்ந்த வாசிப்பு, இடைவிடாத தேடல், விசால ஆய்வுப் பார்வை, வாசிகசாலை தரிசனம், பகுப்பாய்வுத் திறன் (Analytical Ability), நேர முகாமைத்துவம், கருத்துக்களை தொகுத்து அவற்றை அழகாக முன்வைக்கும் வல்லமை என பல வற்றைக் கூறலாம். இவை தவிர, எளிமைச் சுபாவம், நடுநிலைச் சிந்தனை, ஆரவாரமற்ற போக்கு, அறிவுசார் மாற்றுக் கருத்துக்களை மதித்தல் போன்றவை அவர்களின் பேராளுமைக் குணங்களை அலங்கரிக்கும் மேலதிக நற்பண்புகள். முடிவாக, ஆராய்ச்சி வெளியீடுகள், அறிவியல் பங்களிப்புகள் மூலம் இலங்கை முஸ்லிம் புலமைத்துவ நெறியில் வசந்தமாக காட்சியளிப்பவர் மர்ஹூம் கலாநிதி சுக்ரி அவர்கள் என்பதில் ஐயமில்லை. அவர் விட்டுச் சென்ற அறிவுசார் மரபு சமூகத்தில் விசாலப்படுத்தப்பட வேண்டும். அவரின் இஸ்லாமிய சிந்தனைப் பணி புதுமை வளர்க்கும் பெருநெறி என்பதால், அவரின் கருத்துக்களும் சிந்தனைகளும் ஆழப்படுத்தப்பட வேண்டும். அவர் முன்மொழிந்துள்ள ஆராய்ச்சிப் பரிந்துரைகள் சமூகத்தில் முன்னெடுக்கப்பட வேண்டும்.

களம், காலம் அறிந்து சமூகத்துக்கு அவர் சேவை ஆற்றினார் என்ற வகையில், சமூகத்தை அவர் புரிந்து கொண்டார். சமூகம் அவரை நன்கு புரிந்து கொண்டதா? எனும் வினாவுக்கு விடை காண வேண்டிய பொறுப்பு எம்மிடத்தில் இன்னும் வெற்றிடமாகவே உள்ளது.

"வல்லோன் அல்லாஹ் அன்னாரின் நற்செயல்களையும் சமூகப் பணிகளையும் பொருந்திக் கொண்டு மேலான ஜென்னத்துல் பிர்தௌஸில் அவரை நுழைவிப்பானாக"!

ஆமீன்.


கலாநிதி அஷ்ஷெய்க் ஏ.எம்.எம். மிஹ்ளார் (நளீமி),

(இணைப்பேராசிரியர், அகீதா மத ஆய்வுத்துறை, தலைமைத்துவம் மற்றும் முகாமைத்துவ பீடம், மலேஷிய இஸ்லாமிய அறிவியல் பல்கலைக்கழகம் (USIM), மலேஷியா.)


**இலங்கை வானொலியின் முஸ்லிம் சேவையில் பிரபல நிகழ்ச்சியாக விளங்கிய "தத்துவ வித்துக்கள்" தொடர் பேச்சின் மூலம் பல்லாயிரம் நேயர் நெஞ்சங்களை கவர்ந்து கொண்டவர் கலாநிதி சுக்ரி. இமாம் அபூ தாலிப் அல்மக்கீ ( மரணம் 996) அவர்களின் "கூதுல் குலூப்", இமாம் கஸ்ஸாலி (1058–1111) அவர்களின் "இஹ்யாஉ உலூமித்தீன்" போன்ற அரபு மூலாதாரங்கள் கலாநிதி அவர்களின் இத்தொடர் பேச்சை அலங்கரிக்கக் காரணமாகின. இது அவரின் அரபு மொழித் தேர்ச்சிக்கு ஓர் எடுத்துக்காட்டு.**


**PMF FINANCE PLC**

PUBLIIC AUCTION

**உறுதிமொழி வழங்கப்பட்டு அடகு மீட்கப்படாத தங்க ஆபரணங்களின் விற்பனை**

தங்க கடன் திட்டத்தில் 2023 மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் உறுதிமொழி வழங்கப்பட்டு அடகு வைக்கப்பட்டு அவற்றின் காலம் முடிவடைந்ததினால் 2023 ஒக்டோபர் 18 ஆம் திகதியன்று மு.ப. 9.30 மணியிலிருந்து மதியம் 12 மணி வரையும் கொழும்பு-03 இலுள்ள பிஎம்எவ் பினான்ஸ் பிஎல்சி இன் கிளையில் ஏலத்தில் விற்கப்படும்.

| கிளைகள் மற்றும் தங்க கடன் நிலையங்கள் | ஏலத்திற்கான இடம் மற்றும் திகதி |
|---|---|
| திருகோணமலை, எல்பிட்டிய, வெள்ளவத்தை, கண்டி, மாத்தறை, அநுராதபுரம், மத்துகம, கம்பஹா, நீர்கொழும்பு, மாத்தளை, ஹோமாகம மற்றும் குருநாகல். | இல. 47, தர்மபால மாவத்தை, கொழும்பு-03. 18.10.2023 |

- எவ்வித மேலதிக அறிவித்தலுமின்றி விற்பனையை இரத்துச் செய்தல், ஒன்றிணைத்தல் அல்லது பிற்போடுதல் ஆகியவற்றிற்கான உரிமையை கம்பனியானது கொண்டுள்ளது.
- ஏலவிற்பனைக்கு முன்னராக அனைத்து பங்குபெறுனர்களும் அவர்களின் அடையாள அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும்.
- விற்பனையின் போது அனுமதிக் கட்டணமொன்று அறவிடப்படும்.

முகாமையாளர் - தங்க கடன்கள்
பிஎம்எவ் பினான்ஸ் பிஎல்சி
இல. 47, தர்மபால மாவத்தை, கொழும்பு-03.
தொலைபேசி: 011-7 733 600 அலைபேசி: 0719 342 413



ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
ஞாயிறு 2023.10.01
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5254 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 30,225,432.00
ஆங்கில எழுத்து S — வெற்றி இலக்கங்கள் 8 3 2 0 0 7

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3496 — சீட்டிழுப்பு திகதி 2023.10.01 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 62,513,804.80
ஆங்கில எழுத்து T — வெற்றி இலக்கங்கள் 48 49 64 77 — விசேட எழுத்து T — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 56066

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1602 — 2023.10.01 — 72860 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 409,329,068.00
ஆங்கில எழுத்து M — சுப்பர் இலக்கம் 26 — வெற்றி இலக்கங்கள் 03 04 11 21
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

Lucky 7 லக்கி — திகதி 2023.10.01 — சீட்டிழுப்பு இலக்கம் 0080
வெற்றி இலக்கினம் ரிஷபம் — வெற்றி இலக்கங்கள் 5 9 3 4 9 9 — L7 இலக்கம் 2 1
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 11,268,221.36

திகதி 2023.10.01 — சீட்டிழுப்பு இலக்கம் 563 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,048,440.80
வெற்றி இலக்கினம் மேஷம் — வெற்றி இலக்கங்கள் 22 26 34 41 — விசேட இலக்கினம் மேஷம்

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1284 — 2023.10.01 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 113,275,239.20
ஆங்கில எழுத்து W — வெற்றி இலக்கங்கள் 12 58 78 79 — விசேட எழுத்து W — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 12918



SRI LANKA CONVENTION BUREAU

**சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு**
**இலங்கை மாநாட்டுப் பணியகம் (SLCB)**

**இலங்கை MICE Expo - யாழ்ப்பாணம் 2023**
**நிகழ்ச்சி அமைப்பாளர் நியமனத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கொள்முதல் அறிவிப்பு**

இலங்கை மாநாட்டுப் பணியகத்தில் திணைக்கள கொள்முதல் குழுவின் தலைவரினால் 2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் யாழ்ப்பாணத்தில் நடாத்துவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இலங்கை MICE Expo நிகழ்ச்சி அமைப்பாளர் நியமனத்திற்காக தகைமை மற்றும் அனுபவம் வாய்ந்த நிகழ்வு முகாமைத்துவம் / ஒழுங்குபடுத்தும் நிறுவனங்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட முன்மொழிவுகளை கோரப்படுகின்றன..

முத்திரையிடப்பட்ட மனுக்கள் **2023.10.16** ஆம் திகதி **மு.ப.10.00** மணிக்கு திறக்கப்படும். மேலும் அதற்கு மனு ஆவணங்களை இலங்கை மாநாட்டு பணியகத்திடம் ஒப்படைக்கும் போது மீள்ப்பெறமுடியாத வைப்புத்தொகையாக **ரூ.5,000/-** கட்டணமாக செலுத்தப்பட வேண்டும்

பூரணப்படுத்திய மனு ஆவணத்தினை எமது உத்தியோகபூர்வ இணையதளத்தில் **www.meetinsrilanka.com** பெற்றுக்கொள்ளலாம்.

முன்மனுக் கூட்டம் **2023.10.09** ஆம் திகதி **மு.ப.11.00** மணிக்கு இலங்கை மாநாட்டு பணியகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள மனுதாரர்கள் மனுமுன் கூட்டத்தில் நேரடியாக பங்கேற்கலாம்.

பின்வரும் இலக்கங்களினூடாக மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள 0114865050 / 51 அல்லது 0112440002

தலைவர்,
திணைக்களத்தின் கொள்முதல் குழு,
இலங்கை மாநாட்டுப் பணியகம்
இல-78, காலி வீதி, கொழும்பு 03.



**இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு**

(2002ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு சட்டத்தின் 17வது பிரிவின் கீழான பொது அறிவிப்பு)

**2023ஆம் ஆண்டு உத்தேச 03வது மின்சாரக் கட்டண திருத்தத்திற்கான பொதுஆலோசனை கேட்டல்**

2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 30 ஆவது பிரிவின் கீழ், உரிமதாரரால் (இலங்கை மின்சாரசபை) 2023 ஆம் ஆண்டிற்கான உத்தேசிக்கப்பட்ட மின்சாரக் கட்டணத்தைப் பற்றிய பொது ஆலோசனை கேட்டலை நடத்துவதற்கான முடிவை இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு இதன் மூலம் அறிவிக்கிறது.

2023ஆம் ஆண்டுக்கான உத்தேசிக்கப்பட்டுள்ள 03வது மின்சாரக் கட்டண திருத்தமானது, இலங்கை மின்சார சபையால் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பித்த மின்சாரக் கட்டணத் திருத்த முன்மொழிவு மற்றும் அது தொடர்பான ஆலோசனை அறிக்கையை **www.pucsl.gov.lk** என்ற இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

2023ஆம் ஆண்டுக்கான உத்தேசிக்கப்பட்டுள்ள 03வது மின்சாரக் கட்டண திருத்தம் தொடர்பாக பொதுமக்களின் **எழுத்துப்பூர்வ கருத்துகள் மற்றும் ஆலோசனைகள் 2023 ஒக்டோபர் மாதம் 18ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.** இந்தக் கட்டணத் திருத்தம் தொடர்பான **வாய்மூலக் கருத்துக்களை தெரிவிப்பதற்கான வாய்ப்பு 2023 ஒக்டோபர் மாதம் 18ஆம் அன்று கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.**

வாய்மூல ஆலோசனை கேட்டலில் பங்கேற்பதற்காக பதிவு செய்ய **071 8622 800** என்ற இலக்கத்திற்கு அழைக்கவும்.

2002 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு சட்டத்தின் 17 வது பிரிவின் கீழ் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் இந்த பொது ஆலோசனை கேட்டல் நடத்தப்படுகிறது.

முன்மொழியப்பட்ட கட்டணத் திருத்தம் தொடர்பான எழுத்துப்பூர்வ கருத்துகள் மற்றும் பரிந்துரைகளை பின்வரும் முகவரிக்கு அல்லது கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய முறைகள் மூலம் சமர்ப்பிக்கலாம்.

**"2023ஆம் ஆண்டுக்கான உத்தேச 03வது மின்சாரக் கட்டண திருத்தம் பொது ஆலோகனை கேட்டல்"**
இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு,
6 வது மாடி, இலங்கை வங்கி வர்த்தகக் கோபுரம்,
இல.28, புனித மைக்கல் வீதி,
கொழும்பு 03.

பெக்ஸ்: (011) 2392641
மின்னஞ்சல் : consultation@pucsl.gov.lk
இணையதளம் : www.pucsl.gov.lk
முகநூல் : www.facebook.com/pucsl

மேலதிக விபரங்களுக்கு திரு.காஞ்சன சிறிவர்தன அவர்களை (011) 2392607/8 தொடர்பு கொள்ளவும்.

பேராசிரியர் மஞ்சுள பெர்னாண்டோ
தலைவர்
இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு

# விசுவாசிகளின் வல்லமைமிகு ஆயுதம் திருச்செபமாலை




## திருச்சபை ஒக்டோபர் 7இல் செபமாலை மாதாவின் திருவிழாவை சிறப்பிக்கின்றது

கத்தோலிக்கத் திருச்சபை அன்னை மரியாளுக்கு பல திருவிழாக்களை எடுத்து மகிழ்கிறது. அந்த வகையில் ஐப்பசி மாதம் முழுவதும் திருச்செபமாலை அன்னையின் பக்தியை சிறப்பிக்கும் மாதமாக அனுஷ்டிக்கப்படுகிறது. இந்த மாதத்தின் 7ஆம் ஜெபமாலை அன்னையின் திருவிழா கொண்டாடப்படுகின்றது.

செபமாலை என்பது வல்லமையுள்ள ஓர் ஆன்மீக ஆயுதம். செபமாலையைச் செபித்து, அன்னை மரியாளோடு இணைந்து நாம் கடவுளை மகிமைப்படுத்துகின்றபோது அளவில்லா நன்மைகளை நாம் நிச்சயம் பெற்றுக்கொள்ள முடியும்.

இது திரும்ப திரும்பச் சொல்லுவதாக அமைந்திருந்தாலும் கூட அதையே ஒரு மனவலிமை செபமாக மாற்றிச் செபிக்கலாம். ஒரே வாக்கியங்களை திரும்ப திரும்ப சொல்லி செபிக்கும்போது, தந்தையோடு நம்மையே இணைப்பதற்கு அது பேருதவியாக இருக்கின்றது. ”செபமாலை நம்மைக் கடவுளோடு இணைக்கும் ஒரு சங்கிலி” என்ற முத்திப்பேறு பெற்ற பாட்லோ லோங்கோவின் வார்த்தைகள் இங்கு நினைவு கூரத்தக்கது:

இறைவனால் கொடுக்கப்பட்ட மிகப்பெரிய கொடையாக மட்டுமல்ல, அனைத்து வேளைகளிலும் பேருதவியாக இருக்கக்கூடிய அன்னை மரியாளோடு இணைந்து நாமும் கடவுளைப் போற்றுவோம். அவரது பரிந்துரையின் மூலமாக ஏராளமான உதவிகளைப் பெற்று கடவுளை மகிமைப்படுத்துவோம்.

இயேசுவின் பிறப்பைப்பற்றிய பல கேள்விகள் இன்று நம் முன்னால் வைக்கப்படுகிறது. இயேசு மனிதராகப் பிறந்



தாரா? கடவுளாகப் பிறந்தாரா? இயேசுவின் தந்தை யார்? இயேசு எப்படி மாதாவிடமிருந்து பிறந்தார்? அன்னை மரியாள் எப்படி கன்னியாகக் கருவுற முடியும்? எப்படி குழந்தையைப் பெற்றெடுத்த பிறகும் கன்னியாக இருக்க முடியும்? அப்படியென்றால், இந்த மண்ணகத்தில் பிறக்கிற குழந்தைகள் பாவத்தின் விளைவாகத்தான் தோன்ற முடியுமா? கணவன், மனைவிக்கு இடையேயான உறவு புனிதம் இல்லையா? இதில் நாம் எந்தக் கேள்விக்கும் மற்றவர்கள் நிறைவு கொள்கிற பதிலைக் கொடுத்துவிட முடியாது.

இந்தக்கேள்விகள் கேட்கப்பட்ட தொடக்கமுதல் இன்று வரை இந்தக் கேள்விகளுக்கான பதிலை நாம் யாரும் சொல்ல முடியாது. ஆனால், விசுவாசம் என்கிற அளவுகோலை வைத்துக் கொண்டு, அனைத்துக்கேள்விகளுக்கும் ஒரு வினாடியில், ஒரு வரியில் பதில் சொல்லி விடலாம்.

அந்த விசுவாச அளவுகோல்: கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை”. ஒரு சிலவற்றை நம்மால், நமது மனித அறிவு கொண்டு புரிந்து கொள்ள முடியாது. அல்லது, அதைப்புரிந்து கொள்வதற்கு இன்னும் நமது அறிவு வளர்ச்சி பெற வேண்டும்.

தொடக்க காலத்தில் விடைகாண முடியாத பலவற்றிற்கு நாம் இன்று விடை கண்டிருக்கிறோம். இன்னும் பலவற்றிற்கு முயன்று கொண்டிருக்கிறோம். இதற்கு இடைப்பட்ட காலக்கட்டத்தில் இந்த விசுவாச அளவுகோல் தான் நமக்குத்துணை. இதன் வழியாகத்தான் நமது மூதாதையர் வாழ்வு பெற்றனர்.

நமது விசுவாசம் எப்படி இருக்கிறது? அறிவுபூர்வமாக இருக்கின்றதா? ஆழமானதாக இருக்கிறதா? பொறுமையாக இருக்கக்கூடியதாக இருக்கிறதா? அல்லது மறுக்கக்கூடியதாக இருக்கிறதா? சிந்திப்போம். ஆண்டவரில் நமது முழு நம்பிக்கையை வைப்போம்.

கி.பி 1571 இல் நடந்த கடற்போரில் கிறிஸ்தவர்கள் துருக்கியர்களை வென்றபோது அவர்களுக்கு கிடைத்த வெற்றி செபமாலையின் மகத்துவத்தால் விளைந்தது என்று கருதப்பட்டது. அதன் விளைவாக திருத்தந்தை ஐந்தாம் பயஸ் இந்த நாளை வெற்றி அன்னையின் திருவிழாவாக அறிவித்தார்.

பின்பு திருத்தந்தை பதின்மூன்றாம் கிரகோரி காலத்தில் இந்த நாள் செபமாலை அன்னையின் திருவிழாவாக அக்டோபர் முதல் ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்பட்டது. துருக்கியர் இரண்டாம் முறையாக தோல்வியுற்றபோது, திருத்தந்தை ஆறாம் கிளமண்ட் இத்திருவிழாவை வழிபாட்டு அட்டவணையில் சேர்த்தார். ஆனால், திருத்தந்தை பத்தாம் பயஸ் இந்த விழாவானது ஏற்கெனவே கொண்டாடப்பட்ட அக்டோபர் 7 ம் நாளன்று கொண்டாடுவதே, சிறந்தது எனக்கருதி அதற்கான மாற்றங்களைக் கொண்டு வந்தார். அதன்படி தற்பொழுது இவ்விழாவானது அக்டோபர் 7 ம் திகதியில் கொண்டாடப்படுகின்றது.

–அருட்பணி.
ஜெ. தோமஸ் ரோஜர்

# வெளிவேடமான வாழ்க்கை

பாவிகளும் அநீதி செய்தவர்களும் மனம் மாறி இறைவனை ஏற்றுக் கொண்டதால் விண்ணரசில் இடம்பெற பரிசேயர்களோ இறைவனின் விருப்பத்தை நிறைவேற்றுவதாக எண்ணி இறுமாந்து செயலில் முரண்பட நடந்ததால் விண்ணரசை இழக்கின்றனர்.

இயேசு கிறிஸ்துவின் உவமை ஒன்று கற்பிக்கின்ற பாடம் இது.

ஓவியன் ஒருவன் தான் தீட்டிய அருமையான ஓவியம் ஒன்றை மக்கள் கூடும் ஒரு பொது இடத்திலே வைத்து அதன் கீழே “இதில் குறை காண்பவர்கள் இந்தப் படத்தின் மேலே தங்கள் கையெழுத்திட்டுச் செல்லவும்” என்ற குறிப்பை எழுதிவிட்டுச் சென்றான்.

மறுநாள் அதைப்பார்த்த அவனுக்குத் தூக்கி வாரிப்போட்டது. ஓவியம் முழுவதும் இடைவெளியின்றி ஒரே கையொப்ப மயம். அவன் மீண்டும் மற்றொரு ஓவியத்தை வரைந்து முன்பு போல் அதே இடத்தில் வைத்து அதன் கீழே, “இந்த ஓவியத்தில் குறை காண்பவர்கள் திருத்தம் செய்துவிட்டுப் : போகவும்” என்ற குறிப்பை விட்டுச் சென்றான்.



என்ன வியப்பு!

மறுநாள் அந்த ஓவியம் எவருடைய கையும் படாமல் அப்படியே இருந்தது. அதன் பொருள் என்ன? சொல்வது எளிது செயல்படுவது கடினம். “சொல்லுதல் யார்க்கும் எளிய, அரியவாம் சொல்லிய வண்ணம் செயல்” என்பது திருக்குறள்.

“தப்புத்தாளங்கள்” என்று ஒரு தமிழ்த்திரைப்படம். அதில் ஒரு காட்சி. மேடையில் ஒருவன் முழங்குகிறான், விபச்சாரத்தை ஒழிப்பேன். சாதிப் பாகுபாட்டை வேரறுப்பேன், வறுமையை விரட்டியடிப்பேன்... என்ற போக்கில். அந்தத் தெருவின் முனையில் அமர்ந்திருக்கும் ஒரு விலைமகள் தனக்குள்ளே முணங்குகிறாள்: “மேடையில் தேன் சொட்டப் பேசும் இந்த அரசியல்வாதி பேசிவிட்டுக் கூட்டம் கலைந்ததும் நேரே இங்கே ... என்னிடம்தான் வருவான்”

அன்பையும் பண்பையும், பண்பாட்டையும் பற்றி மேடை தோறும் வாய்கிழிய முழங்கிவிட்டு, கீழே இறங்கியதும் அவற்றின் விலையென்ன என்று கேட்கும் வாய்ச்சொல்: வீரர்களுக்குக் குறைவில்லை.

இதுபோன்ற போக்கும் தன்மையும் கொண்ட பரிசேயர்களுக்கும் பூதத் தலைவர்களுக்கும் நல்லதொரு பாடம் கற்பிக்க விரும்புகிறார் கிறிஸ்து. அவர்களின் மனநிலையை எடுத்துரைக்கின்ற இடித்துரைக்கின்ற இயேசுவின் உவமைகள் மூன்று: 1. புதல்வர்கள் இருவர், 2. கொடிய குத்தகைக்காரர், 3. திருமண விருந்து.

முதன்மையாக வரும் உவமையில் மக்கள் இருவரைக் குறிப்பிட்டு, “இவ்விருவருள் எவர் தந்தையின் விருப்பப்படி செயல்பட்டவர்?” என்று இயேசு கேட்க, மூத்தவரே என்று விடையளித்தனர் (மத். 21:31).

பாவிகளும் அநீதி செய்தவர்களும் மனம் மாறி இறைவனை ஏற்றுக் கொண்டதால், விண்ணரசில் இடம்பெற, பரிசேயர்களோ இறைவனின் விருப்பத்தை நிறைவேற்றுவதாக எண்ணி இறுமாந்து செயலில் முரண்பட நடந்ததால் விண்ணரசை இழக்கின்றனர்.

இந்த உவமை கற்றுத் தரும் பாடம் என்ன?

அன்பு சொல்லில் அன்று, மாறாகச் செயலில் எண்பிக்கப்பட வேண்டும்.

. இருவரில் எவன் சிறந்தவன் என்பதன்று. மாறாக இருவரில் யார் செயலில் இறைவிருப்பத்தை நிறைவேற்றுவது என்பதே கேள்வி.

இரண்டு பேருமே தந்தைக்கு முழுமையான மகிழ்ச்சியை அளித்தவர்கள் அல்ல. ஏதோ ஒரு கட்டத்தில் இருவருமே தந்தையைப் புண்படுத்தியவர்களே. பரவாயில்லை என்னும் அளவுக்கு ஒருவன் செயலால் உயர்ந்து நிற்கிறான். சிறந்த மகன் (14081 801) யார்? தந்தையின் விருப்பத்துக்குச் சரி: என்று சொல்லி செயலில் இறங்குபவனே!

அந்த மூன்றாவது மகன் சிறந்த மகன் இயேசுவே! “நாங்கள் அறிவித்த இறைமகன் இயேசு கிறிஸ்து ஒரே நேரத்தில் 'ஆம்' என உண்மையையே பேசுபவர்” (2. கொரி. 1:19). திருத்தூதர் பவுல் குறிப்பிடும் அந்த இயேசுவே என்ன சொன்னார்? “நீங்கள் பேசும்போது ஆம் என்றால் ஆம் எனவும் இல்லை என்றால் இல்லை எனவும் சொல்லுங்கள். இதைவிட மிகுதியாகச் சொல்வது எதுவும் தீயோனிடமிருந்தே வருகிறது” (மத். 5:37). “என்னை நோக்கி “ஆண்டவரே ஆண்டவரே” எனச். சொல்பவரெல்லாம் விண்ணரசுக்குள் செல்வதில்லை. மாறாக விண்ணுலகில் உள்ள என் தந்தையின் திருவுளத்தின்படி செயல்படுபவரே செல்வர்” (மத். 7:21) தலைமைக் குருக்களும் மறைநூல் அறிஞர்களும் எப்பொழுதும் கடவுள் பெயரைச் சொல்லியே பிழைப்பு நடத்தினார்கள். ஆனால் கடவுளின் விருப்பத்தைத் தங்கள் வாழ்வில் அவர்கள் செயல்படுத்தினார்களா என்றால் இல்லை. அவர்களின் வெளி வேடத்தைத் தான் இந்த இரு புதல்வர்கள் உவமையில் இயேசு தோலுரித்துக் காட்டுகிறார்.

அதனால்தான் “அவர்கள் என்னென்ன செய்யும்படி கூறுகிறார்களோ அவற்றையெல்லாம் கடைப்பிடித்து நடந்து வாருங்கள். ஆனால் அவர்கள் செய்வது போல நீங்கள் செய்யாதீர்கள். ஏனெனில் அவர்கள் சொல்வார்கள். செயலில் காட்டமாட்டார்கள்” (மத். 23:3) என்று மக்களை எச்சரிக்கிறார். ( யாக். 1:22 25).

ஜோன் பவுல் என்ற அறிஞர் சொல்வது போல் நாம் ஒவ்வொருவரும் ஒரு முகமூடி அணிந்து அதற்குள் ஒளிந்து கொள்கிறோம். நமது சுயத்தைப் பார்க்கிற திறன் நமக்கில்லை. நமது உண்மை நிலையை அறியும் துணிவு இல்லை. அதற்கான ஆர்வம் இல்லை. அதனால் முயற்சியும் எடுப்பதில்லை.

நமது வாழ்க்கையிலும் நாம் நல்லவர்களாகத் தோன்ற வேண்டும் என்பதில்தான் கவனம் எசலுத்துகீறோமே தவிர நல்லவர்களாக ஒருப்பதில் அல்ல. பொய்முகங்கள் எவ்வளவு நாட்களுக்கு: நிலைக்கும்? இதில் அதிசயம் என்னவென்றால், கடவுளையும் தோற்றத்தால் ஏமாற்றி விடலாம் என்று நாம் நம்புவதுதான்.

பாவிகளாக இருக்கலாம். நாம் போலிகளாக இருக்கலாமா?

நம்மில் பெரும்பாலானவர்கள் நற்செய்தியில் வரும் இருவித மக்களாக இருக்கிறோம். ஒரு சிறிய ஊர். அங்கே ஓர் ஏரி. நிறைய மீன்கள். நீர் வற்றியதும் ஊரார் மின் பிடித்துக் கொள்ள நாட்டாண்மை பணிக்கிறார்.

அந்த நாள் ஞாயிறு. ஞாயிறு திருப்பலிக்குச் செல்ல வேண்டுமே என்ற எண்ணம் சிலருக்கு. மீன் பிடிக்க வேண்டும் என்ற விருப்பம் வேறு சிலருக்கு. திருப்பலிக்குச் சென்றவர்கள் “★இந்நேரம் எவ்வளவோ மின் பிடித்திருக்கலாமே”” என்று ★ அவர்கள் எண்ணமெல்லாம் எரியில் இருந்தது.

மீன் பிடித்துக் கொண்டிருந்தவர்கள் “இந்நேரம் திருப்பலி தொடங்கியிருக்கும், மறையுரை நடக்கும்” என்று அவர்கள் எண்ணமெல்லாம் கோவிலைச் சுற்றிச் சுழன்றது. இவர்களில் யார் கடன்பூசையை நிறைவேற்றினார்?

அருட் தந்தை
இ.லூர்துராஜ்

# அமிர்தகழி புனித கப்பலேந்தி மாதா ஆலய திருவிழா









மட்டக்களப்பு மறை மாவட்டத்தின் வரலாற்றுப் புகழ் மிக்க கத்தோலிக்க ஆலயமான அமிர்தகழி புனித கப்பலேந்தி மாதா ஆலயத்தின் வருடாந்த திருவிழா

மறை மாவட்ட ஆயர் பேரருட்திரு ஜோசப் பொன்னையா ஆண்டகையின் தலைமையில் நடைபெற்றது.

கடந்த 15 ஆம் திகதி பங்குத் தந்தை இன்னாசி ஜோசப் அடிகளாரின் தலைமையில் கொடியேற்றம் நடைபெற்றதுடன் அதனைத் தொடர்ந்து நவ நாள் ஆராதனை மற்றும் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்பட்டன.

கடந்த சனிக்கிழமை மாலை நற்கருணை ஆராதனை வழிபாட்டுடன் திருச்சொரூப பவனியும் இடம்பெற்றது.

விசேட திருவிழா கூட்டுத் திருப்பலியை, மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் பேரருட் திரு ஜோசப் பொன்னையா ஆண்டகையின் தலைமையில் அருட்தந்தையர்கள் இணைத்து ஒப்புகொடுத்திருந்தனர்.

திருப்பலியினைத் தொடர்ந்து ஆலய முன்றலில் இடம்பெற்ற அன்னையின் திருச்சொரூப ஆசீருடன் கொடியிறக்கம் இடம் பெற்றது. கப்பலேந்தி அன்னையின் திருச் சொரூபம் வாவியில் கொண்டு செல்லப்பட்டு வாவி ஆசீர்வதிக்கப்பட்டது.

திருவிழா திருப்பலியில் மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் பல பகுதிகளில் இருந்தும் பெருமளவான விசுவாசிகள் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தகவல், படங்கள்:
கல்லடி குறூப் நிருபர்

# பல்கலைக்கழகம் செல்லாதோருக்கு தொழில் கல்லூரிகளில் பயில வாய்ப்பு

(தலைமன்னார் விஷேட நிருபர் )

பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாக முடியாத மாணவர்கள் சுகாதார அமைச்சினால் நடத்தப்படும் 17 வகையான அடிப்படை தொழில் தகைமை கல்லூரிகளில் அலவன்ஸுடன் தாதியம், நிறைவு காண் தொழில் வல்லுனர் மற்றும் துணைமருத்துவ பாடநெறிகளைக் கற்பதுடன் கற்று முடிந்தவுடன் உடனடியாக அரச , தனியார் மருத்துவத் துறைகளில் நல்ல சம்பளத்ததுடன் தொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளும் சூழ்நிலையும் உண்டு என மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.வினோதன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வட மாகாணத்தில் உயர் தரத்தில் உயிரியல், கணிதத் துறைகளைத் தெரிவு செய்து கற்கும் மாணவர்கள் குறைவு இதனால் வடக்கில் அரச தனியார் சுகாதார, மருத்துவ சேவை நிறுவனங்களுக்குரிய மனித வளங்களுக்கு ஏனைய மாகாணங்களில் தங்கியிருக்க வேண்டிய நிலைமை உருவாகியுள்ளதாக மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.வினோதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.வினோதன் மேலும் தெரிவித்திருப்பதாவது

வடக்கில் அரச தனியார் சுகாதார, மருத்துவ சேவை நிறுவனங்களுக்குரிய மனித வளங்களுக்கு பற்றாக் குறை காணப்படுகின்றது.

தொழில்களுக்கு தகைமையானவர்கள் இல்லாமையால் வேறு மாகாணங்களில் தங்கியிருக்கும் நிலைமையும் மறுபுறம் தொழில் வாய்ப்புகள் அற்ற துறைகளில் உயர் கல்வியைக் கற்ற பின்னர் வேலைவாய்ப்பின்மை, கடன் சுமைகளால் தற்கொலை செய்து கொள்ளும் இளையோரின் எண்ணிக்கையும் வடக்கில் அதிகரித்தும் வருகின்றது.

வடக்கில் உள்ள மாணவர்கள் உயிரியல், கணிதத் துறைகள் சித்தியடைவதற்கும் பல்கலைக்கழகம் செல்வதற்கும் கடினமான துறைகள் அல்ல என்பதனை



மீண்டும் ஒருமுறை 2022/23 உயர் தர பெறுபேறுகள் நிரூபித்துள்ளன.

பாடசாலை மாணவர்களில் உயிரியல் துறையில் வடமாகாணம் அதிகூடிய சித்தி வீதத்தையும் கணிதத் துறையில் இரண்டாவது அதிகூடிய சித்திவீதத்தையும் 2022/2023 உயர் தரப் பெறுபேறுகளில் நிலைநாட்டியுள்ளது.

உயிரியல் துறையில் உயர்தரம் கற்று உயர்தரத்தில் 3s பெறுபேறுகளைப் பெற்றுக்கொண்ட மாணவர்கள் பல்கலைக் கழகங்களில் 35 வகையான பாடநெறிகளை கற்கக் கூடிய நிலைமை 2021/2022 இருந்தது. இது இந்த 2022/2023 இல் மேலும் அதிகரிக்கும்.

ஒருவேளை பல்கலைக் கழகங்களுக்கு தெரிவாக முடியாத மாணவர்கள் சுகாதார அமைச்சினால் நடத்தப்படும் 17 வகையான அடிப்படை தொழில்தகைமை கல்லூரிகளில் அலவன்ஸுடன் தாதியம், நிறைவு காண் தொழில் வல்லுனர் மற்றும் துணைமருத்துவ பாடநெறிகளைக் கற்பதுடன் கற்று முடிந்தவுடன் உடனடியாக அரச தனியார் மருத்துவத் துறைகளில் நல்ல சம்பளத்ததுடன் தொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளும் சூழ்நிலையும் உண்டு.

எனவே இது தொடர்பில் பெற்றோர்கள் மற்றும் கல்விச் சமூகத்தினர் சிந்தித்து மாணவர்களின் எதிர்காலத்தை ஒளிமயமாக வைத்திருக்கவல்ல பாடநெறிகளை உயர்தரத்தில் தெரிவு செய்து மாணவர்கள் கற்பதனை ஊக்குவிக்க முன்வரவேண்டும் என அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## வடக்கின் உதயம்

# மன்னாரில் அம்புலன்ஸில் போதைப்பொருள் கடத்தல்



மன்னார் குறூப் நிருபர்

மன்னார் முருங்கன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பள்ளக்கமம் பகுதியில் ஐஸ் போதைப்பொருள் விற்பனைக்கென மாதிரியுடன் வருகை தந்த வவுனியா வைத்தியசாலையில் பணிபுரியும் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். பிரதான சந்தேக நபரான முருங்கன் வைத்தியசாலையின் அம்புலன்ஸ் சாரதி தப்பியோடி உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# யாழில். வாள் வெட்டு இளைஞன் படுகாயம்

யாழ். விசேட நிருபர்

யாழ்ப்பாணம் புத்தூர் பகுதியில் இளைஞன் ஒருவரை வன்முறை கும்பல் ஒன்று வீதியில் துரத்தி துரத்தி வெட்டி காயப்படுத்தி விட்டு தப்பி சென்றுள்ளனர்.

சம்பவத்தில் நாயன்மார்கட்டு பகுதியை சேர்ந்த லக்சன் என்ற இளைஞனே படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் பருத்தித்துறை பிரதான வீதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற குறித்த சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

வீதியில் முச்சக்கர வண்டியில் பயணித்துக்கொண்டிருந்த இளைஞனை பட்டா ரக வாகனத்தில் வந்த வன்முறை கும்பல் ஒன்று வழி மறித்து வாள் வெட்டு தாக்குதலை மேற்கொண்டுள்ளது. தாக்குதலில் இருந்து தப்பிக்க இளைஞன் முச்சக்கர வண்டியை கைவிட்டு வீதியில் ஓடிய போதிலும், துரத்தி துரத்தி வாள் வெட்டு தாக்குதலை நடாத்தி விட்டு கும்பல் அங்கிருந்து தப்பி சென்றுள்ளது.

வீதியில் படுகாயமடைந்த நிலையில் காணப்பட்ட இளைஞனை வீதியில் சென்றவர்கள் மீட்டடை, யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.





யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரி பழைய மாணவர்களின் ஒன்றுகூடலின் போது ஜே.ஒ.75 குழுவினரால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒஸ்மானியா கல்லூரி வாசிகசாலையை கல்லூரி அதிபர் என்.எம்.ஷாபி ரிபன் வெட்டி திறப்பதை படத்தில் காணலாம். அருகில் கலாபூஷணம் பரீட் இக்பால், விரிவுரையாளர் எஸ்.எச்.எம்.ஸல்மான், எஸ்.எச்.நியாஸ் ஹாஜியார், எம்.பி. எம்.றினோஸ் ஆகியோரையும் காணலாம்.

# புனித ரபீவுனில் அன்னல் மாதத்தை முன்னிட்டு எருக்கலம்பிட்டி ஸயீதிய்யா அரபுக் கல்லூரியில் பரிசளிப்பு விழா





(தலைமன்னார் விஷேட நிருபர் )

புனித ரபீவுனில் அன்னல் மாதத்தை முன்னிட்டு மன்னார் தீவுப் பகுதியில் கடந்த 28.09.2023 அன்று இஸ்லாமிய மாணவர்களுக்கு நடைபெற்ற மார்க்கம் சம்பந்தமான பேச்சு , கவிதை , பாடல் மற்றும் குர்ஆன் மனனம் போன்ற போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.

ஞாயிற்றுக் கிழமை (01.10.2023) மாலை 3.30 தொடக்கம் 7 மணி வரை மன்னார் எருக்கலம்பிட்டி ஸயீதிய்யா அரபுக் கல்லூரி வளாகத்தில் இந்நிகழ்வு நடைபெற்றது.

கொழும்பு அயன் ஸ்டோர்ஸ் உரிமையாளர் அல்ஹாஜ் ஏ.டபிள்யூ. நஜீப் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பிரதம அதிதியாக கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் மற்றும் மன்னார் முல்லைத்தீவு அபிவிருத்தி குழுத்தலைவர் அல்ஹாஜ் கே.மஸ்தான் கலந்து கொண்டார்.

இதன்போது சிறப்பு பேச்சாளராக எருக்கலம்பிட்டி ஸயீதிய்யா அரபுக்கல்லூரி அதிபர் அல்ஹாஜ் அஷ்ஷேஹ் அல் ஆலிம் எம்.கே.நூறுல்லாஹ் அவர்கள் திகழ்ந்தார்.

பாடசாலை மாணவர்களின் இந்நிகழ்வுக்கு மன்னார் தீவிலுள்ள அதிகமான இஸ்லாமிய பெற்றோர்கள் கலந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

# நெடுந்தீவில் சடலம் கரையொதுங்கியுள்ளது

யாழ்.விசேட நிருபர்

யாழ்ப்பாணம் நெடுந்தீவு கடற்பரப்பில் இனம் தெரியாத ஆணின் சடலம் ஒன்று திங்கட்கிழமை கரையொதுங்கியுள்ளது.

சடலம் அடையாளம் காணப்பட முடியாத நிலையில் சிதைவடைந்து காணப்படும் நிலையில் சடலம் தொடர்பில் நெடுந்தீவு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# மன்னாரில் பொலிஸார் ஏற்பாடு சிறுவர் தின நிகழ்வு

(மன்னார் குறூப் நிருபர்)

சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி மன்னார் பொலிஸார் ஏற்பாடு செய்த சர்வதேச சிறுவர் தின நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணியளவில் மன்னார் கறிற்றாஸ் வாழ்வுதய மண்டபத்தில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் விருந்தினர்களாக கறிற்றாஸ் வாழ்வுதய இயக்குனர் அருட்தந்தை எஸ்.அன்ரன் அடிகளார், மன்னார் மெசிடோ நிறுவன தலைவர் ஜாட்சன் பிகிராடோ, மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், மன்னார் பிரதேசச் செயலாளர், உதவி மாவட்டச் செயலாளர் உள்ளடங்களாக அழைக்கப்பட்ட திணைக்கள தலைவர்களும் கலந்து கொண்டனர்.

இதன் போது தெரிவு செய்யப்பட்ட மன்னாரில் உள்ள சிறுவர் இல்லம் ஒன்றைச் சேர்ந்த சிறுவர்கள் கலந்து கொண்டு பல்வேறு விழிப்புணர்வு நிகழ்வுகளை அரங்கேற்றினர்.

பின்னர் வருகை தந்த விருந்தினர்களினால் சிறுவர்களுக்கு பரிசுப்பொதி வழங்கி கௌரவிக்கப்பட்ட மையும் குறிப்பிடத்தக்கது.

# வட மாகணத்தில் வல்வெட்டித்துறை முதலிடம், இரண்டாமிடம் பருத்தித்திறை

கரவெட்டி தினகரன நிருபர்

2022 ம் ஆண்டிற்கான அரச துறைகளில் சிறந்த கணக்கறிக்கை தயாரித்தலில் வல்வெட்டித்துறை நகரசபை முதலாமிடத்தையும், பருத்தித்துறை நகரசபை இரண்டாமிடத்தையும், வவுனியா நகரசபை மூன்றாமிடத்தையும் பெற்று முறையே தங்கம், வெள்ளி, வெண்கலம் விருதுகளை வென்றுள்ளன.

அநுராதபுரத்திலுள்ள வடமத்திய மாகாண வளாகத்தில் இடம்பெற்ற குறித்த விருது வழங்கும் நிகழ்விலேயே இவ்விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

வடமராட்சி பிரதேசத்தில் இருக்கூடிய இரண்டு நகர சபைகளிலும் இலங்கை நிருவாக சேவை பெண் செயலாளர்களே தற்போது கடமையாற்றி வருகின்றனர். இதேவேளை பிரதேச சபைகளில் வவுனியா வடக்கு பிரதேச சபை முதலாமிடத்தையும், துணுக்காய் பிரதேச சபை இரண்டாமிடத்தையும் மூன்றாம் இடத்தை வலிகாமம் மேற்கு பிரதேச சபையும் பெற்றுக் கொண்டுள்ளன.

# யாழ்ப்பாணம் கியூடெக் நிறுவனத்தின் சர்வதேச சிறுவர் தின நிகழ்வு





யாழ்ப்பாணம் கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தின் சுற்றுச்சூழல் செயற்திட்டத்தின் கீழ் சர்வதேச சிறுவர் தின நிகழ்வு சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை மண்டபத்தில் இயக்குனர் அருட்பணி ச.இயூஜின் பிரான்சிஸ் தலைமையில் நடைபெற்றது. சிறுவர் தினத்திற்கான "இயற்கையோடு இணைந்த நம் வாழ்வு" எனும் தலைப்பிலான ஓவியப் போட்டி மூன்று பிரிவுகளில் நடைபெற்றது. இதனை தொடர்ந்து சமாதான நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சிறுவர் களுக்கான மகிழ்வூட்டும் நிகழ்வுகளும் நடைபெற்றன.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யுனிசெப் நிறுவன இணைப்பாளர் திருமதி சர்மினியும், சிறப்பு விருந்தினராக வலயக்கல்வி பணிப்பாளர் P.ரவீந்திரனும் புனித யாகப்பர் ஆலய உதவிப் பங்குத்தந்தை, புனித யாகப்பர் ஆலய மகளிர் பாடசாலை அதிபர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# கிழக்கின் குரல்



## காத்தான்குடியில் நகை உருக்கும் பட்டறையால் சுகாதார சீர்கேடு

### பொதுமக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)



காத்தான்குடி ஆறாம் குறிச்சி அப்துல் லத்தீப் சின்னலெவ்வை மாவத்தையிலுள்ள நகை உருக்கும் பட்டறையினால் அப்பகுதி மக்கள் பல்வேறு சுகாதார அசௌகரியங்களுக்கு முகம்கொடுப்பதாகவும் அதனை உடனடியாக நிறுத்துமாறு கோரியும் நேற்று காத்தான்குடி நகர சபை முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பெண்கள் கைக்குழந்தைகளுடன் பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதை காணக்கூடியதாகவிருந்தது.

இப்பகுதியில் நகை உருக்கும் நடவடிக்கையில் வர்த்தகர் ஒருவர் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருவதால் அதன்மூலம் வெளியாகும் இரசாயனக் கழிவுகள் பெரும் சூழலியல் பிரச்சினைகளை ஏற்படுத்திவருவதாக பிரதேசமக்கள் தெரிவிக்கின்றனர். இதனால் பொதுமக்கள் பல்வேறு நோய்களுக்கு ஆளாகிவருவதுடன் பாரிய அசௌகரியங்களுக்கும் முகம்கொடுத்துவருவதாக தெரிவிக்கின்றனர். இதனையடுத்து காத்தான்குடி நகரசபை செயலாளர் திருமதி றிப்கா ஸபீன் தலைமையில் கலந்துரையாடலொன்று நடைபெற்றது. இதன்போது பொதுமக்களின் கோரிக்கைகளை அவர் கேட்டறிந்ததுடன் பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

காத்தான்குடி நகர சபை செயலாளர் திருமதி றிப்கா ஸபீன் இது தொடர்பில் தெரிவிக்கையில், நகை உருக்கும் தொழிற்சாலைக்கு காத்தான்குடி நகரசபை அனுமதி வழங்கவில்லையெனவும் உடனடியாக சுற்றுச்சூழல் அதிகார சபை, உள்ளூராட்சித் திணைக்களம், காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி ஆகியோருக்கு இதுதொடர்பில் அறிவித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் அவர் தெரிவித்தார். இதனையடுத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் கலைந்து சென்றனர்.

## கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளராக சுஜாதா

(காரைதீவு குறூப் நிருபர்)



கிழக்கு மாகாணபதில் கல்விப் பணிப்பாளராக மட்டக்களப்பு வலய கல்விப் பணிப்பாளர் திருமதி. சுஜாதா குலேந்திரகுமார் நேற்று திங்கட்கிழமை (02) கடமையேற்றார்.

கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளர் செல்வி அகிலா கனகசூரியம் தனது 60 வது வயதில் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து இவர் நியமிக்கப்பட்டுள்ளார். 2005 ஆம் ஆண்டு இலங்கை கல்வி நிர்வாக சேவைக்குள் உள்நுழைந்த இவர், 2017 இல் இலங்கை கல்வி நிர்வாக சேவையின் முதலாம் தர உத்தியோகத்தராக பதவி உயர்த்தப்பட்டார். இள வயதில் மட்டு. வின்சென்ட் மகளிர் தேசிய பாடசாலை அதிபராகவும் கடந்த நான்கு வருடங்களாக மட்டு. வலயக் கல்விப் பணிப்பாளராகவும் கடமையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



கிழக்கில் வரலாற்று பிரசித்திப் பெற்ற பாண்டிருப்பு அருள்மிகு திரௌபதை அம்மன் ஆலய வருடாந்த உற்சவத்தில் தீ மிதிக்கும் வைபவம் நேற்று நடைபெற்றது. மகா பாரத இதிகாசத்தை பிரதிபலிக்கும் வகையில் வருடாவருடம் இவ்வாலயத்தில் இந்நிகழ்வுகள் நடைபெற்றுவருவது வழமை. இம்முறை அதிகளவான பக்தர்கள் ஆலய உற்சவத்தில் கலந்து கொண்டமை குறிப்பிடதக்கது. (படம் : பாண்டிருப்பு தினகரன் நிருபர்)

## தம்பலகாமம் வைத்தியசாலை தீ சம்பவம்; பொலிஸார் விசாரணை



(தம்பலகாமம் குறூப் நிருபர்)

தம்பலகாமம் பிரதேச வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தீ சம்பவம் தொடர்பில் விரிவான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் திருகோணமலை தம்பலகாமம் பிரதேச வைத்தியசாலையில் ஏற்பட்ட திடீர் மின் ஒழுக்கு காரணமாக வைத்தியசாலையிலிருந்த மருத்துவ உபகரணங்கள் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளன. இதில் பல தரப்பட்ட மருந்துப் பொருட்கள்,ஆய்வுக் கூட உபகரணங்கள் என்பன தீக்கிரையாகியுள்ளன. திருகோணமலை தீ அணைக்கும் பிரிவு மற்றும் முள்ளிப்பொத்தானை திஸ்ஸபுர இராணுவத்தினர் , பொலிஸார் இணைந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இந்நிலையில் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை தம்பலகாமம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

நேற்று அரச பகுப்பாய்வு திணைக்களம், தடயவியல் பொலிஸார் இணைந்து தம்பலகாமம் பிரதேச வைத்தியசாலைக்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டதுடன் சம்பவ இடத்தில் காணப்பட்ட மாதிரிகளையும் சேகரித்துள்ளனர்.

திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் ஊடாக மருந்துப்பொருட்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள் தொடர்பில் மதிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## த.தே.கூட்டமைப்பிலிருந்த அனைத்து கட்சிகளும் மீண்டும் இணைய வேண்டும்

(பெரிய போரதீவு தினகரன் நிருபர்)



தமிழ் தேசியக் கூட்டமைப்பிலிருந்த அனைத்து கட்சிகளும் மீண்டும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரனின் 60 ஆவது பிறந்த நாள் மணிவிழா மலர் வெளியீட்டு விழா நேற்றுமுன்தினம் மட்டக்களப்பு தேவநாயகம் மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், இந்நிகழ்வில் கலந்து கொண்டிருப்பவர்கள் அனைவரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளாவர். அதனை அவர்கள் யாரும் இல்லை என கூறவும் முடியாது. எனவே அவர்கள் அனைவரும் தொடர்ந்து தமிழ் தேசியக் கூட்டமைப்பாகவே இருக்க வேண்டும் என்பதை நான் விருப்புகின்றேன்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி உதயமான காலம் தொடக்கம், தந்தை செல்வா எல்லோரையும் அரவணைத்துச் சென்றார். பின்னர் தமிழர்களின் உரிமைக்காகப் போராடியவர், பிரிந்து நின்ற அனைத்துக் கட்சிகளையும் ஒன்றிணைத்து தமிழ் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கி அதிலே தமிழ் மக்களின் உரிமைக்காக பிரதிநிதிகளை களமிறங்கச் செய்தார். ஆகவே நாங்கள் பிரிந்து செல்வது நல்ல விடயமாக தெரியவில்லை. கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலிலே தனித்துச் சென்றிருக்கலாம். ஆனால் நாங்கள் எதையும் பேசித் தீர்மானிக்க முடியும். அந்த வீட்டின் கதவு திறந்துதான் இருக்கின்றது. தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராஜா, தமிழ் தேசியக் கூட்டமைப்பு தலைவர் இரா.சம்பந்தன் என அனைவரும் ஒற்றுமையாகச் செல்ல வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றனர்.

எனவே பிரிவினை வேண்டாம், 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என அவர் தெரிவித்தார்.

## மொரவெவ பகுதியில் கடும் வரட்சி

(கந்தளாய் தினகரன் நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தில் மொரவெவ பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதியில் கடும் வரட்சியால் எட்டு குளங்களின் நீர்மட்டம் குறைவடைந்துள்ளதாகவும் இதனால் மீன்பிடி நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது நிலவும் வரட்சியால் பன்குளம், பாண் மதவாச்சி குளம், வேப்பம்குளம், பத்தாம் கட்டைகுளம், கட்கட்குளம், முதலியார் குளம், வெல்வெறி குளம், நொச்சிக்குளம் போன்ற எட்டு குளங்களின் நீர்மட்டம் வெகுவாக குறைவடைந்துள்ளன. இதனால் மீனவர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர். அதுமட்டுமின்றி விவசாய நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட சமுர்த்தி தொகையும் தற்போது நிறுத்தப்பட்டுள்ளதால் மீனவர்கள், விவசாயிகள் பெரும் பொருளாதார சிக்கல்களுக்கு முகம்கொடுத்திருப்பதாகவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதுதொடர்பில் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

## சுனாமி ஒத்திகை பயிற்சிகள்; பொது மக்கள் பீதியடைய வேண்டாம்

### அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலைய மாவட்ட பிரதிப் பணிப்பாளர் எம்.ஏ.சீ.எம். றியாஸ் அறிவுறுத்தல்

(ஒலுவில் விசேட நிருபர்)



அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் ஏற்பாட்டில் நாளை புதன்கிழமை (04) தேசிய ரீதியிலான சுனாமி ஒத்திகை பயிற்சிகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக, அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் அம்பாறை மாவட்ட பிரதிப் பணிப்பாளர் எம்.ஏ.சீ.எம். றியாஸ் தெரிவித்தார்.

அதற்கமைய அம்பாறை மாவட்டத்திலுள்ள சகல பிரதேசங்கள் தோறும் மக்களை விழிப்புணர்வூட்டும் வகையில் பொது அறிவித்தல்கள் விடுக்கப்பட்டுள்ளதாகவும், இதனால் பொது மக்கள் பீதியடைய வேண்டாமெனவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக மாவட்டத்தில் கரையோர பிரதேசங்களிலுள்ள சகல பிரதேச செயலாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துமாறும் அவர் தெரிவித்தார்.

பொது மக்களை விழிப்புணர்வூட்டல், மக்களை பாதுகாப்பான முறையில் வெளியேற்றுவதற்கு பயிற்றுவித்தல், சுனாமி அனர்த்த பாதுகாப்பு திட்டத்தை பரவலாக்கம் செய்தல் மற்றும் குறைபாடுகளை திருத்தியமைத்தல், சுனாமி அனர்த்தத்தினால் ஏற்படும் இழப்புகளை குறைக்க நடவடிக்கை எடுத்தல், சுனாமி அனர்த்தத்தை தாக்குப்பிடிக்கக் கூடிய சமூகத்தை கட்டியெழுப்புதல் போன்ற பயிற்சி நெறிகள் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அனர்த்தம் என்பது அபாயகரமானது. ஆனால் பூரண விழிப்புணர்வு மற்றும் பயிற்சிகள் பொதுமக்கள் மத்தியில் காணப்படுமாயின் உயிர்ச்சேதம் மற்றும் அழிவுகளை குறைத்துக் கொள்ள முடியுமெனவும் அவர் தெரிவித்தார்.

சுனாமி ஒத்திகை செயற்றிட்டம் திருகோணமலை, காலி, மாத்தறை ஆகிய மாவட்டங்களில் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும், இதுதொடர்பாக பொது மக்கள் பீதியடைய வேண்டாமென மக்களை விழிப்புணர்வூட்ட பிரதேச செயலகங்கள் ரீதியாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

## சில்லறை கடையில் தீ பரவல்

றொட்டவெவ குறூப் நிருபர் )



திருகோணமலை நகர பகுதியிலுள்ள சில்லறை கடையொன்றில் நேற்று காலை ஏற்பட்ட தீ பரவல் காரணமாக பெரும் சேதம் ஏற்பட்டுள்ளதாக கடை உரிமையாளர் தெரிவிக்கின்றார்.

திருகோணமலைபிரதான வீதியிலுள்ள கே.எம்.டி.வீரசிங்க என்பவருக்கு சொந்தமான சில்லறை கடையே இவ்வாறு எரிந்து நாசமாகியுள்ளதாக தெரியவருகின்றது. சம்பவ இடத்துக்கு தீயணைப்பு பிரிவினர் வருகை தந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாகவும் மின்சார ஒழுக்கு காரணமாகவே தீ விபத்து இடம்பெற்றுள்ளதாகவும் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

## காத்தான்குடியில் சர்வமதத் தலைவர்கள் பங்கேற்ற இனஐக்கிய மீலாத்விழா

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

காத்தான்குடியில் சர்வமதத் தலைவர்கள் கலந்து கொண்ட இன ஐக்கிய மீலாத்விழா அண்மையில் நடைபெற்றது.

காத்தான்குடி ஆலோசனைக்கும் வழிகாட்டலுக்குமான ஆலீம்கள் அமைப்பின் ஏற்பாட்டில் காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் மண்டபத்தில் இந்நிகழ்வு நடைபெற்றது.

இந்த விழாவின் முதல் நிகழ்வாக சர்வமத தலைவர்கள் கலந்து கொண்ட இன ஐக்கிய மீலாத்விழா ஊர்வலம் காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் மண்டபத்திலிருந்து ஆரம்பமாகி காத்தான்குடி மீரா பாலிகா தேசிய பாடசாலை வரை சென்று மீண்டும் ஹிஸ்புல்லாஹ் மண்டபத்தில் நிறைவடைந்தது.



இந்த மீலாத் விழாவில் இன ஐக்கிய மீலாத் விழாவையொட்டி பாடசாலை மாணணவர்களிடையே நடாத்தப்பட்ட போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்கள், சான்றிதழ்கள் என்பன வழங்கப்பட்டதுடன் காத்தான்குடி ஆதார வைத்தியசாலை அத்தியட்சகர் டாக்டர் எம்.எஸ்.எம்.ஜாபீர் மற்றும் உலமாக்கள் சிலர் நினைவுச்சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். காத்தான்குடி ஆலோசனைக்கும் வழிகாட்டலுக்குமான ஆலீம்கள் அமைப்பின் தலைவர் மௌலவி எச். எம்.ஸாஜஹான் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் காத்தான்குடி ஆதார வைத்தியசாலை அத்தியட்சகர் டாக்டர் எம்.எஸ்.எம்.ஜாபீர் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். சமயத் தலைவர்கள் உலமாக்கள் முக்கியஸ்தர்கள், பிரமுகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்த விழாவின் சிறப்புரையை இலங்கை ஸரீஆ கவுன்சில் உபசெயலாளரும் வத்தளை மஹ்மூதிய்யா அரபுக்கல்லூரியின் அதிபருமான மௌலவி சி.எம்.அஸ்மீர் ஹசனி நிகழ்த்தினார். இதன் போது மாணவர்களின் சிறப்பு நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

## மரத்தில் இருந்து தவறி விழுந்து இளைஞன் பலி

(கல்லடி குறூப்நிருபர்)

கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாவடிமுன்மாதிரி கிராமத்தில் மரத்தின் கிளைகளை வெட்டிக்கொண்டிருந்த இளைஞனொருவன் மரக்கிளையுடன் கீழே விழுந்து ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளதாக கொக்கட்டிச்சோலை பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்தவர் 28 வயதுடைய தர்மலிங்கம் லக்ஷன் என தெரியவருகின்றது.

நேற்று காலை தனது சகோதரனுடன் விவசாய நடவடிக்கைகளுக்காக காணியை துப்புரவு செய்துக் கொண்டிருக்கையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. காணியிலிருந்த புளிய மரக்கிளைகளை மின்வாளினால் வெட்டிக்கொண்டிருந்த போதே கிளையுடன் கீழே விழுந்து இளைஞன் உயிரிழந்துள்ளார்.

மண்டூர் திடீர் மரண விசாரனை அதிகாரி சம்பவ இடத்துக்கு சென்று சடலத்தை பார்வையிட்டதுடன், பிரதே பரிசோதனைகளின் பின்னர் சடலம் நெருங்கிய உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை கொக்கட்டிச்சோலை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

# கல்விச் சமூகத்தின் முன்னிலையில் 'ஆனந்த யாழ்' சஞ்சிகை வெளியீடு

## கண்டி ஜின்னா ஞாபகார்த்த மண்டபத்தில் பிரமாண்ட ஏற்பாடு






எக்லாட் யுனைட்ஸ் நிறுவனத்தின் ஐந்தாவது ஆண்டு நிறைவு விழாவும் 'ஆனந்த யாழ்' என்னும் சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வும் கண்டி ஜின்னா ஞாபகார்த்த மண்டபத்தில் நிறுவனத்தின் தலைவர் இஹ்திஷான் ஹுஸைன்தீனின் வழிகாட்டலுடன் அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் முன்னாள் தேசிய தலைவர் சஹீட் எம் ரிஸ்மி தலைமையில் நடைபெற்றது.





இந்நிகழ்வில் பேராதனை பல்கலைக்கழக நுண்கலைத்துறையின் தலைவர் பேராசிரியர் சுதேஸ் மன்திலக பிரதம அதிதியாக கலந்து கொண்டு சிறப்பித்தார்.

கௌரவ அதிதிகளாக பேராதனை பல்கலைக்கழக பேராசிரியர் துரை மனோகரன் மற்றும் சப்ரகமுவ பல்கலைக்கழக சுற்றுலா மற்றும் முகாமைத்தவப் பேராசிரியர் எம். எஸ். எம். அஸ்லம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீட சிரேஷ்ட விரிவுரையாளர் சாமிலா தாவூத், ஜே.ஜே. பவுண்டேசன் ஸ்தாபகத் தலைவர் கலாநிதி ஐ.வை. எம். ஹனீப், யட்டிநுவர பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் வசீர் முக்தார். கம்பளை அல் ஹக்கீமிய்யா அரபுக் கல்லூரியின் அதிபர் மௌலவி பீ. எம். ஹுஸைன்தீன் உள்ளிட்ட பல முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

★ இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட பேராதனை பல்கலைக்கழக நுண்கலைத்துறையின் தலைவர் **பேராசிரியர் சுதேஸ் மன்திலக உரையாற்றும் போது;** எமது நாடு கலாசாரத்திலும் சமூக கட்டமைப்பிலும் தனித்துவம் வாய்ந்தவை. கலை இலக்கியம் நுண்கலைத் துறையிலும் அதற்கென தனியான பாரம்பரியம் இருக்கின்றது. இந்தக் கலை இலக்கிய அம்சங்கள் யாவும் எமது சமூகத்தை ஒன்றிணைக்கக் கூடியவை. எமது நாட்டில் அருகி வரும் இந்தக் கலை கலாசார இலக்கிய அம்சங்களை மீளவும் அவற்றை உயிர்ப்புடன் கட்டி எழுப்பப்படுதல் வேண்டும். இதன் மூலம் சிறந்த கலாசாரப் பாரம்பரியமிக்க நாடாகவும் எமது நாட்டிலுள்ள எல்லா சமூக மக்களும் சகவாழ்வுடன் வாழ்வதற்கான நாடாகவும் மாற்றியமைக்க முடியும் என்று அவர் தெரிவித்தார்.

எங்கள் மத்தியில் காணப்படும் தனிப்பட்ட ஆளுமைகள் மற்றும் சமூகங்களுக்கிடையே சகவாழ்வு பற்றிய துறைகளில் ஈடுபாடு காட்டி வருகின்றோம். அவை இரண்டும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். இவை இலங்கையின் வரலாற்றில் பேசப்படக் கூடியவை. இவை எமது சமூகத்தில் இருந்து அருகி வருகின்றன.

தற்போது எமது நாட்டிக்குள் நிலவியுள்ள பொருளாதார நெருக்கடியான சூழல் உட்பட கடந்த காலத்தில் நிலவிய விடயங்களை நாம் நோக்கும் போது எமது கலாசார ரீதியாகவும் சமய ரீதியாகவும் ஒரு பக்கத்திற்குச் சாய்ந்து இருக்கிறது. அவை சுபீட்சமான நல் வாழ்வுக்கான வழிகள் அல்ல. இதனால் எமது சமூகங்கள் சவால்களை எதிர்நோக்குகின்றன என்பது மட்டுமல்ல அரசியல் கட்சிகள் தங்களுடைய நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக இளைஞர், யுவதிகளை பயன்படுத்தி வருகிறார்கள். தனிப்பட்ட ரீதியில் நாங்கள் யார்? தலை நிமிர்ந்து அச்சமின்றி எப்படி எழுந்து நிற்பது? இவை மிகவும் முக்கியமானதாகும்.

எங்களுடைய சமூகங்களுக்கிடையே பொதுவாகக் காணப்படும் விடயங்களை மறந்துவிட்டு எங்களுடைய தனிப்பட்ட விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகின்றோம். அவை எமக்கு பயன்படப் போவதில்லை. அவை எமது சமூகத்திற்குப் பயனற்றதாகும். எந்த விடயத்தை பொதுத் தன்மையுடன் நோக்குதல் வேண்டும். இல்லாவிட்டாலும் அவை எமக்கு சவாலாகத்தான் அமையும். பொதுவாக நாட்டின் எதிர்காலம் பற்றிச் சிந்திக்கும் எங்களுடைய எதிர்கால சந்ததியினர்கள் குறித்து பொதுவான நிலையில் சிந்திக்க வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

★ **அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் தேசியத் தலைவர் சஹீட் எம். ரிஸ்மி தனது தலைமையுரையில்,**

எமது தாய் நாடானது சகல வளங்களை கொண்ட நாடாகும். அந்த நாட்டில் சமகாலத்தில் பொருளாதாரம், அரசியல் போன்ற பல்வேறுபட்ட சமூக நெருக்கடிளை நாம் எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றோம். குறிப்பாக புத்திஜீவிகள் நாட்டை விட்டு வெளியேறிக் கொண்டு இருக்கிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் மாணவ, மாணவிகளின் பங்களிப்பு இல்லாமல் இந்த நாட்டில் உள்ள பிரச்சினைக்கு எந்தவொரு தீர்வினையும் காண முடியாது.

சமகாலத்தில் இளைஞர்கள் சமூக சேவை அரசியல் மற்றும் பொருளாதார விவகாரங்களில் இருந்து தூர விலகியிருக்கிறார்கள். இதற்குக் காரணம் சமூகக் சூழலில் முதியவர்கள் வாய்ப்பளிக்காமையே காரணம் என்று நாம் கருத முடியும். சமூகத்தினுடைய மாற்றங்களை இளைய தலைமுறையினர்களின் ஊடாகத்தான் உருவாக்க முடியும். ஏனென்றால் எமது நாட்டை ஒரு சுவிட்சமான நாடாகவோ ஒரு வளமுள்ள நாடாகவோ பல்வேறு துறைகளிலும் அபிவிருத்திமிக்க நாடாகவோ மாற்றுவதாயின் இளைஞர்களின் பங்களிப்பு மிக மிக அவசியம் என தெரிவித்தார். மேலும், இங்கு சிங்கள, தமிழ், முஸ்லிம், கிறிஸ்த சமய எனப் பல்லின சமூகங்களைச் சேர்ந்த இளைஞர் யுவதிகள் ஒற்றுமையுடனும் பரஸ்பர நல்லெண்ணத்துடன் ஒன்று சேர்ந்து கலந்து கொண்டுள்ளமை வரவேற்கத்தக்கது. இது தான் எமது எதிர்கால நாட்டுக்குத் தேவையான முதல் அத்திவாரம் என்றார்.







★ சப்ரகமுவ பல்கலைக்கழக சுற்றுலா மற்றும் முகாமைத்தவப் **பேராசிரியர் எம். எஸ்.எம். அஸ்லம் உரையாற்றுகையில்;**

நாம் பிறப்பதற்கான காரணம் என்ன? வாழ்வதற்கான காரணம் என்ன என்பதை மனிதன் விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். அதன் காரணத்தை விளங்கிக் கொண்ட மனிதன் தத்துவரீதியிலான கொள்கையோடு தனது வாழ்க்கையை அமைத்துக் கொள்வான். அந்த கொள்கை ரீதியிலான வாழ்க்கையோடு கோட்பாட்டோடு வாழ்க்கை அமைத்திருத்தல் வேண்டும். எதைச் செய்தாலும் அந்த கொள்கையோடு செய்தால் எங்களுக்கு எந்தவொரு பிரச்சினையுமில்லை.

நாம் பாதையில் எவ்வாறு செல்ல வேண்டும் என்பது எங்களுக்குத் தெரியும். அந்த ஒழுங்கு முறைகளை மீறிச் சென்றால் பொலிஸாரினால் அதற்குரிய தண்டனை வழங்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதுதான் இலங்கையிலுள்ள மிகப் பெரிய பிரச்சினை.

யப்பான், ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றால் நாங்கள் பொலிஸ் உத்தியோகஸ்தர்களை நாம் எவரையும் அங்கும் காண மாட்டோம். காரணம் என்ன வென்றால் சுய கட்டுப்பாட்டு ஒழுங்குகளைக் கடைப்பிடித்து வாழ்கின்றார்கள். எல்லா மனிதர்களும் ஒரு கொள்கையோடு செயற்படுகிறார்கள். இந்தக் கொள்கை இன்று இன்றியமையாததொரு விடயம்.

இந்தக் கொள்கை இல்லாமையினால் தான் பல்வேறுபட்ட இன்னல்களுக்கும் துயரங்களுக்கும் துன்பங்களுக்கும் நாங்கள் முகம் கொடுத்து வருகின்றோம். இதுதான் உண்மை.

எமது நாட்டில் இன்றைய கால கட்டத்தில் நாம் எதிர் நோக்கியிருக்கும் பொருளாதார பிரச்சினையாக இருக்கலாம், அரசியல் பிரச்சினையாக இருக்கலாம், சமூகப் பிரச்சினையாக இருக்கலாம், சுற்றுச் சூழலிலுள்ள பிரச்சினையாக இருக்கலாம், சமூக வலைத்தளப் பிரச்சினையாக இருக்கலாம். இப்படியான இவ்வளவு பிரச்சினைகளுக்கும் அடிப்படையான காரணம் நாம் கொள்கை கோட்பாட்டில் இருந்து தவறிச் சென்றதாகும்.

பாடசாலைகளிலும் பிரச்சினை என்றால் அதுவும் கோட்பாட்டில் இல்லை. பல்கலைக்கழகத்திலும் பிரச்சினை என்றால் அதிலும் கோட்பாட்டில் இல்லை. இவ்வாறு எல்லா நிறுவனங்களும் கொள்கை கோட்பாட்டில் இருந்து விலகிச் சென்றமையினால் நாம் இப்பொழுது எங்கே சென்று கொண்டிருக்கின்றோம். இதுதான் உண்மை. ஆகவே கொள்கை என்பது ஒவ்வொரு மனிதர்களுக்கும் தேவை. கொள்கைகள் ஒழுங்காகக் கடைப்பிடிக்கப்பட்டால் உலகத்தில் சமாதானம் என்பது எல்லா உள்ளங்களிலும் தானாகவே வளரும். அது வளர்க்கப்பட வேண்டியதல்ல. அது தானாக வளரும்.

உலகில் சமாதானத்தை உருவாக்க வேண்டும் என்ற அடிப்படையில் அன்று முதல் இன்று வரையிலும் பல்வேறு பட்ட சர்வதேச மாநாடுகள், சிவில் சமூக நிறுவனங்கள், அரசியல் கட்சிகள் பங்கு கொண்டு பல்வேறுபட்ட முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். நாம் எங்கேயாவது சமாதானத்தைக் காணுகின்றோமா? இல்லை. காரணம் என்னவென்றால் சமாதானம் என்பது ஒவ்வொரு மனிதனது உள்ளத்தில் இருந்து வர வேண்டிய விடயம்.

உலகத்தில் சமாதானத்தை ஏற்பத்துவது என்றால் அரசியலால் முடியாது. ஏனைய நிறுவனங்களால் முடியாது. எல்லா மனிதர்களும் சமாதானம் வர வேண்டும் என்று நினைத்தால் அன்று தொட்டு சமாதானத்தைக் காணலாம்.

1700 களில் வாழ்ந்த ஆய்வறிஞர் ஒருவரின் கூற்றுப்படி உலகம் பொருளாதாரத்தைக் கொண்டு ஆதிக்கம் செலுத்த முயற்சிக்கின்றது எனில் அன்று முதல் இன்று வரைக்கும் சாதானத்தைக் காண முடியாது என்று குறிப்பிட்டுள்ளார். மனிதன் மனிதனை ஆக்கிரமிக்கின்றானோ ஆட்டிப் படைக்க முனைகின்றானோ அன்று முதல் சமாதானம் இல்லாமற் போய் விட்டது. அந்த வகையில்தான் இன்று உலகத்திற்குத் தேவையான நாட்டுக்குத தேவையான சமாதானம் வருவதாயின் அந்த இடத்திற்குச் செல்ல வேண்டுமாயின் அதற்கு உதாரணமாக நாம் பூட்டான் நாட்டை எடுத்துக் கொள்ளலாம்.

அங்கு வானகங்களில் செல்ல முடியாது . மக்கள் இன்னும் செல்வது அவர்களுடைய பாரம்பரி வாகனங்களிலே ஆகும். இன்னும் மக்கள் பூட்டானில் தான் சந்தோசத்துடன் வாழ்ந்து வருகின்றனர் என்று 2019 இல் நடைபெற்ற சர்வதேச மாநாடொன்றில் தெரிவிக்கப்பட்டது. நகரங்களிலும் கிராமங்களிலும் மிக்க சந்தோசமாக வாழ்ந்து வருகின்றனர் என்று அந்நாட்டின் தலைவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

★ **பேராசிரியர் துரை மனோகரன் இங்கு உரையாற்றும் போது;**

இளைஞர்களுடைய வலிமை இந்த நாட்டுக்கு மிகவும் தேவையானது. இளைஞர்களாகிய நீங்கள நாட்டை மென்மேலும் வளரச் செய்ய வேண்டும். உங்களது பங்களிப்பு அவசியம். நீங்களும் வளர வேண்டும்.

இந்த நிகழ்வின் முக்கிய கட்டமாக அமைவது 'ஆனந்த யாழ்.' என்ற சஞ்சிகை வெளியீடாகும். இந்நூலில் பயனுள்ள கட்டுரைகள், நேர்த்தியான நேர்காணல்கள், நல்ல கவிதைகள் ஆகியன இடம்பெற்றுள்ளன. மூன்று மொழிகளிலும் ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களிடையே இன ஒற்றுமையை கட்டி எழுப்புகின்ற முறையிலே 'ஆனந்த யாழ்' சிறந்த பங்களிப்பைச் செய்து வருகிறது. இந்நூலில் சிங்களம், ஆங்கில, தமிழில் எழுதிய எழுத்தாளர்களுக்கு என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மும்மொழிகளிலும் இப்படியான சஞ்சிகை வெளிவருவது பாராட்டுக்குரியது என்று அவர் தெரிவித்தார்.

★ எக்லாட் யுனைட்ஸ் நிறுவத்தின் ஸ்தாபகத் **தலைவர் இஹ்திஷான் ஹுஸைன்தீன் உரையாற்றும் போது;** எதிர்கால இளம் தலைமைத்துவங்களுக்குரிய களங்கள் அமைத்துக் கொடுக்கப்படுவதில்லை. இளைஞர்களுக்கிடையே சக வாழ்வும் பரஸ்பர நல்லுறவும் ஏற்படுத்தப்பட வேண்டும் எனில், அதற்கான வழிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும். எங்களுடைய அமைப்பினுடைய முக்கியமான நோக்கமும் இளம் தலைமைத்துவங்களுக்கிடையே சக வாழ்வுக்கான வழிகளை ஏற்படுத்திக் கொடுப்பதாகும். நாங்கள் இதனை ஐந்து வருடங்களாக மேற்கொண்டு வருகின்றோம்.

எல்லா இளம் தலைமுறையினர்களுக்கிடையே ஒன்றிணைந்த செயற்பாடு அவசியம். மொழி பரிமாறிக் கொள்வதன் மூலம் கற்றுக் கொண்டு புரிந்துணர்வுடன் செயற்பட வழிவகுக்க வேண்டும். சமூக வலைத்தளங்கள் ஊடாக பல்லின சமூகத்தைச் சேர்ந்த சிங்கள, தமிழ், முஸ்லிம், கிறிஸ்தவ சமூகத்தைச் சார்ந்தவர்கள் எல்லோரும் எம்மோடு இணைந்து இருக்கின்றனர். இவர்களுக்கான வழிகாட்டல்கள் கருத்தரங்குகளையும் ஆளுமை விருத்தி கருத்தரங்குகளையும் நாம் நடத்தி வருகின்றோம். இதன் மூலம் நிறைய இளைஞர் யுவதிகள் நன்மை அடைந்து வருகின்றனர் என அவர் தெரிவித்தார்.







**இக்பால் அலி**

இலங்கை சனநாயக சோசலிஷக் குடியரசு

போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சு

**வீதி அபிவிருத்தி அதிகார சபை**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

| Contract Name |
|---|
| Allowing to rent charges for parking vehicles in the road reservation adjacent to Lake Road No:01 - In Batticaloa City (0+050 - 0+650) RHS - (B0 250) Lloyds Avenue - In Batticaloa City (0+025 - 0+300) LHS (B0 543)- Batticaloa District |
| Allowing to rent charges for parking vehicles in the road reservation adjacent to Thampalagamam- Kinniya road- Batticaloa road Junction, Kuchchaveli on TP Road, Infront of Ekamparam Ground, Kanthalai DS office Hospital, Bank DS Office Area (Echchalapmpattai)- Trincomalee District |

தேசிய போட்டி கேள்வி முறையின் கீழ் மேற்படி வேலைகளுக்கான விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் RDA மற்றும் சுகாதார அமைச்சு இணையதளம் www.rda.gov.lkஜ 2023.10.03 முதல் 2023.10.16 வரை பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## பகிரங்க ஏலவிற்பனை

மல்டி பினான்ஸ் பிஎல்சி நிறுவனத்தில் வைத்து தங்கக் கடன் பெற்று, உரிய காலத்தினுள் மீட்கப்படாத தங்க நகைகள் பின்வரும் இடங்களில் கீழ்க்காணும் திகதிகளில் காலை 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| ஏலவிற்பனைத் திகதி | முகவரி |
|---|---|
| 03/08/15/22 நவம்பர் 2023 | இல. 56, சந்தை இடம், அனுராதபுரம். |
| 03/08/15/22 நவம்பர் 2023 | இல. 16, கோர்ட் ரோடு, கம்பஹா. |
| 02/07/14/21 நவம்பர் 2023 | இல. 134, அநாகரிக தர்மபால மாவத்தை, மாத்தறை. |
| 02/07/14/21 நவம்பர் 2023 | இல. 72, சிமன்ஸ் வீதி, மருதானை, கொழும்பு 10. |
| 04/09/16/23 நவம்பர் 2023 | இல. 74/76, கண்டி வீதி, குருநாகல். |
| 04/09/16/23 நவம்பர் 2023 | இல. 865, ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க மாவத்தை, கண்டி. |
| 01/06/13/20 நவம்பர் 2023 | இல. 207, பிரதான வீதி, இரத்தினபுரி |

மல்டி பினான்ஸ் பிஎல்சி எந்த அறிவிப்பும் இல்லாமல் ஏலத்தை ரத்து செய்வதற்கும் ஒத்திவைப்பதற்கும் உரிமையை கொண்டுள்ளது.

MULTI FINANCE

இல.275/75, பேராசிரியர். ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.

## அறிவித்தல்

**பொல்கஹவெல பிரதேச சபை**

**2024ஆம் வருடத்திற்கான வரவு செலவுத் திட்ட நகல் வரைவு பொதுமக்களின் பரிசீலனைக்காக முன்வைத்தல்**

2024ஆம் வருடத்தின் பொல்கஹவெல பிரதேச சபையின் வரவு செலவுத் திட்டம் நகல் வரைவு பொதுமக்கள் பரீட்சித்துப் பார்ப்பதற்கு ஒக்டோபர் 04ஆம் திகதி முதல் ஒக்டோபர் 18ஆம் திகதி வரை பொல்கஹவெல பிரதேச சபையின் பிரதான அலுவலகத்தில் வேலை நேரங்களில் மு.ப. 8.30 மணி முதல் பி.ப. 4.00 மணி வரையில் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக இத்தால் தயவுடன் அறியத்தருகிறேன்.

**நிமல் ஜயசிங்க,**
**செயலாளர்,**
**பிரதேச சபை,**
**பொல்கஹவெல.**
**தொலைபேசி: 0372243274**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் - கம்பஹா**

கம்பஹா மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவிற்குரித்தான சுகாதார நிறுவனங்களில் உபயோகத்திற்காக பின்வரும் பொருட்களைக் கொள்வனவு செய்யும் பொருட்டு தகுதி வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் கீழ் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விலைக்கோரலை கையளிக்கப்பெறுவதற்கு தகுதியைப் பெறுவதற்கு விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும்.

**செயற்றிட்டத்திற்கு பொருட்கள் வழங்குதல்**

| விலைக்கோரல் குறிப்பீட்டிலக்கம் | விலைக்கோரலின் பெயர் | மீளளிக்கப்படாத விலைக்கோரல் கட்டணம் (ரூபா) | மீளளிக்கப்படும் விலைக்கோரல் பிணை முறிக் கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|
| GA/J/Project-12/2023 | அலுவலக தளபாடங்களைக் கொள்வனவு செய்தல் | ரூபா 2,000.00 | ரூபா 50,000.00 |
| GA/J/Project-13/2023 | தகவல் தொழில்நுட்ப உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் | ரூபா 4,000.00 | ரூபா 130,000.00 |
| GA/J/Project-14/2023 | வளிச்சீராக்கி இயந்திரங்களைக் கொள்வனவு செய்தல் | ரூபா 2,000.00 | ரூபா 70,000.00 |

- 2023-10-04ஆம் திகதி முதல் 2023-10-16ஆம் திகதி வரையான வார நாட்களில் மு.ப. 9.00 மணிக்கும் பி.ப. 2.00 மணிக்கும் இடைப்பட்ட காலத்தில் பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து, மீளளிக்கப்படாத கட்டணத்தை கம்பஹா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்குச் செலுத்தி ஆங்கில மொழியிலான விலைக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியின் பிரதியொன்றைப் பெற்றுக்கொள்ளலாம்.
- ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் பின்வரும் முகவரிக்கு அலுவலக நேரத்தினுள் விலைக்கோரல் ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
- பூரணப்படுத்திய விண்ணப்பப் படிவங்களை ''மூலப் பிரதி'' மற்றும் ''நகல் பிரதி'' எனத் தனித்தனியான உறைகளில் இட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் ''பொருட்களின் வகை''யைக் குறிப்பிட்டு 2023-10-17ம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் இவ்வலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம் அல்லது ''தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், கச்சேரி கட்டிடத்தொகுதி, கொழும்பு வீதி, கம்பஹா'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம்.
- பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட உடனடுத்து பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் கேட்போர்கூடத்தில் அவைகள் திறக்கப்படும்.
- விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.
- இவ்விலைமனுகோரல் தொடர்பில் அனைத்து தீர்மானங்கள் எடுக்கும் உரிமையை கம்பஹா மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலக பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.
- இவ்விலைமனுகோரல் தொடர்பான மேலதிக தகவல்களை வார நாட்களில் அலுவலக நேரத்தினுள் பின்வரும் தொலைபேசி இலக்கங்களைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**வைத்தியர் டபிள்யூ.எம்.ஐ.கே. வன்னிநாயக்க,**
**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம்,**
**கச்சேரி கட்டிடத்தொகுதி, கொழும்பு வீதி, கம்பஹா.**
**தொலைபேசி:** 0332222873, 0332222874
**தொலைநகல்:** 0332230992

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம்

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

**சிறு ஏற்றுமதி பயிர்த் தோட்ட மேம்பாட்டு பிரிவு**

LSC

**வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**பெல்வத்த மற்றும் சீனி தொழிற்சாலைகளுக்கு நீர்பாசன சேவையினை வழங்கல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்துவதற்கான தேசிய போட்டிமுறையிலான விலைமனுக்கோரல்**

PR - 7794 - உயர் அடர்த்தியிலான நீர்ப்பம்பி மற்றும் நீர்ப்பாசன கருவிகள்
PR - 8667 - சோலார் பம்ப் நீர்ப்பாசன அமைப்பினை வழங்கல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்தல்
PR - 8484 - 10Ha க்கு சொட்டு நீர்ப்பாசன அமைப்பினை வழங்கல் மற்றும் செயற்படுத்தல்

**விலைமனுக்கோரலுக்கான காலஎல்லை நீடிப்பு அறிவித்தல்**

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் **2023.09.13** ஆம் திகதி வெளியான **தினமின, டெயிலி நியூஸ், தினகரன்** தேசிய பத்திரிகையில் வெளியான விளம்பரம் தொடர்பானது, மனுதாரர்களின் கோரிக்கைகள் மற்றும் பூர்வாங்க முடிவுகளின் அடிப்படையில் மேற்குறிப்பிடப்பட்ட விலைமனு முடிவடையும் திகதி **2023.10.10** ஆம் திகதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது மேலும் மனுக் கூட்டம் **2023.09.26** ஆம் திகதி நடைபெற்றது என்றும் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

**2023.09.13** ஆம் திகதி வெளியான பத்திரிகை விளம்பரத்தில் ஏனைய விபரங்களில் டிவ்வித மாற்றமும் இடம்பெற வில்லை.

தலைவர் - திணைக்கள பெறுகைக் குழு,
வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்,
இல-27, மெல்போர்ன் ஒழுங்கை,
கொழும்பு 04.

## கேள்வி கோரல் அறிவித்தல்

### பெல்மடுல்ல பிரதேச சபை

**2024ம் ஆண்டிற்கு சபைக்கு சொந்தமான பொதுச் சந்தை இல. 14 மீன் கடையை குத்தகைக்கு விடுவதற்கான கேள்வி கோரல்**

பெல்மடுல்ல பிரதேச சபைக்குச் சொந்தமான பொதுச் சந்தை மீன் கடையை 2024.01.01 முதல் 2024.12.31 வரை குத்தகைக்கு விடுவதற்காக பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 2023.10.03 மு.ப 10.00 முதல் 2023.10.24 பி.ப 1.00 வரை என்னால் ஏற்கப்படும்.

02. 2023.10.03 மு.ப 10.00 முதல் 2023.10.24 நண்பகல் 12.00 வரை வாரத்தின் வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் பெல்மடுல்ல பிரதேச சபை தலைமையகத்தில் பொதுச் சந்தை மீன் கடைக்கான கேள்விப் படிவங்கள் விநியோகிக்கப்படும்.

- கேள்விப் படிவங்கள் இரு பிரதிகளுடன் விநியோகிக்கப்படுவதுடன், அக்கேள்வி படிவங்களை பூர்த்தி செய்து இரு உறைகளில் இட்டு இடதுப் பக்க மேல் மூலையில் "முதலாம் பிரதி" மற்றும் "இரண்டாம் பிரதி" என்று வேறுவேறாகக் குறிப்பிட்டு அவ்உறைகள் இரண்டையும் வேறு உறையில் இட்டு இடதுப் பக்க மூலையில் கேள்வியின் பெயரை குறிப்பிட்டு **"செயலாளர், பெல்மடுல்ல பிரதேச சபை, நில்ஹேன, பெல்மடுல்ல"** என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் 2023.10.24 பி.ப 1.00 இற்கு முன்பு கிடைக்குமாறு அனுப்புதல் வேண்டும்.
- கேள்விகளை கையோடு ஒப்படைக்க விரும்புபவர்கள் அப்பிரதிகள் இரண்டையும் மேற்படி விதத்தில் தயாரித்து தலைமையகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

03. **கேள்விகள் திறத்தல்**

2023.10.24 பி.ப 1.00 இற்கு கேள்விப் பெட்டி சீல் இடப்படுவதுடன் குறித்த நேரத்திற்கு பின்னர் சமர்ப்பிக்கப்படும் அல்லது பூர்த்தியற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். 2023.10.24 பி.ப 2.00 இற்கு பெல்மடுல்ல பிரதேச சபையின் தலைமையகத்தில் கேள்விச் சபையின் முன்னிலையில் கேள்வி திறக்கப்படும். மேற்படி நேரத்திற்கு கேள்விகள் சமர்ப்பிப்போர் அல்லது அவரால் கடிதம் மூலம் அதிகாரம் ஒப்படைக்கப்பட்ட அவரது பிரதிநிதியொருவர் சமுகமளிக்கலாம். மேலும் ஒரு கேள்வி அல்லது சகல கேள்விகளையும் நிராகரிக்கும் அதிகாரம் பெல்மடுல்ல பிரதேச சபைக்கு உரியது.

04. மேலதிக தகவல்களை அலுவலக நேரங்களில் மு.ப 9.00 முதல் பி.ப 3.30 வரை 045-2274375 என்ற தொலைபேசி இலக்கத்தை அழைத்து பெற்றுக்கொள்ளலாம்.

**அட்டவணை இல.01**

| தொடர் இல | இடம் | வியாபாரத்தின் தன்மை | படிவக் கட்டணம் | கேள்விப் பிணைத் தொகை | ஒப்பந்தப் பிணைத் தொகை | வருடாந்த குறைந்தபட்ச கேள்வி |
|---|---|---|---|---|---|---|
| 01 | பெல்மடுல்ல பொதுச் சந்தை | மீன் கடை | ரூ.3,000.00 | ரூ.100,000.00 | ஆறுமாத வாடகைக்கு சமனான தொகைக்கு | ரூ.300,000.00 |

**ஆர்.கே. கபில ஜகத் குணதிலக்க,**
**பெல்மடுல்ல பிரதேச சபையின் செயலாளர் மற்றும்**
**பெல்மடுல்ல பிரதேச சபையின்**
**செயற்பாடுகளை அமுல்படுத்தும் அதிகாரி,**
**பிரதேச சபை,**
**பெல்மடுல்ல.**

**TRINCOMALEEE CAMPUS OF THE EASTERN UNIVERSITY, SRI LANKA**

REGISTRATION OF SUPPLIERS AND CONTRACTORS FOR THE YEAR 2024

Application are invited from Government Establishment, Cooperative Societies , Manufactures Reputed Suppliers, Local Agent, Dealers and Contractors who to register themselves with the Trincomalee Campus of the Eastern University, Sri Lanka as supplies and contractors for the under mention items/works/service of the **Trincomalee Campus of the Eastern University, Sri Lanka, Konesapuri, Nilaveli, Trincomalee for the year 2024.**

| No | Main Categories | No | Main Categories |
|---|---|---|---|
| 01 | Stationeries and Office Consumable | 14 | Building Materials |
| 02 | Office Equipment | 15 | Kitchen Utensils/ Equipment and Furniture |
| 03 | Books and Periodicals | 16 | Uniform Materials |
| 04 | Office Furniture (Wooden/Steel/Plastic) | 17 | Sports Goods |
| 05 | Hostel Furniture/ Residential Furniture (Wooden/Steel/Plastic) | 18 | Pharmaceuticals and Drugs |
| 06 | Laboratory Equipment and Teaching Equipment | 19 | Fancy Good & Cosmetic Items |
| 07 | Electrical Goods and Appliances | 20 | Procurement of Service - Repairs to Office, Laboratory Teaching Equipment and Other Equipment |
| 08 | Laboratory Chemical and Glassware | 21 | Printing |
| 09 | Supply of Refreshment and Foods | 22 | Repair to Motor Vehicles |
| 10 | Supply of Fuel and Gas | 23 | Other Service |
| 11 | Motor Spare Parts | 24 | Procurement of Works |
| 12 | Hardware and Plumbing Items | 25 | Booking of Air Travels |
| 13 | Janitorial Items/ Essential Items | | |

Please visit www.tc.esn.ac.lk for more information and terms and condition.


Application form could be downloaded from the above web site.

Duly filled application form with Original Bank draft or original Bank deposit slip should be sent to Assistant Bursar, Trincomalee Campus of the Eastern University, Sri Lanka, Konesapuri, Nilaveli, Trincomalee **on or before 03.11.2023** by registered post mention **"Registration of Suppliers and Contractors 2024"** on the top left hand corner of the envelop.

**Rector**
**Trincomalee Campus of the Eastern University, Sri Lanka.**
**Tel:026-222 3893.**


* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz it's what you want Classified
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | Piyumi - 011 2 429 383 | Gayani - 011 2 429 342/ 343
077 7 270 067 E-mail - classified@lakehouse.lk
Green Light for Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
Lake House Branch
Acc. No. 000000377

# சிறு விளம்பரம்



## மோட்டார் வாகனங்கள்

118



**ஜீப்புகள், பிக்கப்புகள்** விற்பனைக்கு

250-4217 TOYOTA CAB 1997, அதி யுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 071454295 8. 062171

57-5689 ISUZU JFR54HT OPEN BODY கெப் வாகனம் 1996 பச்சை அதி யுயர் விலைக்கு. CBC பினான்ஸ் லிமிட்டட், 187, கட்டுகஸ்தொட்ட வீதி, கண்டி. தொலை பேசி 0812081033. 062228

119




**பஸ்கள், லொறிகள்** விற்பனைக்கு

LC-9318 TATA ACE 2006, LORRY அதி யுயர் விலைக்கு. வெலி பல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 07 1454295 8. 062173

WP-LJ-7316 TATA LP-2515 மோட்டார் லொறி 2011, மஞ்சள், பச்சை, நீலம். அதியுயர் விலைக்கு. CBC பினான்ஸ் லிமிட்டட், 187, கட்டுகஸ்தொட்ட வீதி, கண்டி. தொலை பேசி 0812081033. 062236

122



**மோட்டார் சைக்கிள், த்ரீவீலர்கள்** விற்பனைக்கு

AAO-3446 BAJAJ 2013, AAF-6892 BAJAJ 2012, THREEWHEEL அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 071121081 0, 062172

BGV-3187 HONDA DIO 2018, MOTOR CYCLE அதி யுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 071454295 8. 062170

QK-3319 BAJAJ 2007, AAT-2109 BAJAJ 2014, THREE-WHEEL அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 0705 9 9916 3. 062174



## காணி/தோட்டம்

616

**வீடு சொத்து**

**கொழும்பு மாவட்டம்** விற்பனைக்கு

கல்கிசை, பீரிஸ் வீதி, பெமிலி சுப்பருக்கு அருகாமையில் காலி வீதிக்கு 160 மீற்றர் தொலைவில் சிறிய வீட்டுடன் 11 பேர்ச் காணி உடன் விற்பனைக்கு. அதியுயர் விலைக்கு. பணம் அவசரப்படுகின்றது. 0703376509, 0713802006. 062226

## மீட்கப்படாத அடகுத் தங்க நகைகளின் ஏல விற்பனை

வ/ப யட்டியந்தொட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் யட்டியந்தோட்ட, கிதுல்கல, பெரன்னாவ, புணுகல, தெலிகம, கல்பாத்த, மத்தமகொட ஆகிய கிராமிய வங்கிக் கிளைகளில் 2022.03.31 வரை அடகு வைக்கப்பட்டு, ஏல விற்பனை தினம் வரை மீட்கப்படாத அடகுத் தங்க நகைகள் 2023 ஒக்டோபர் 28 மற்றும் 29ம் திகதிகளில் மு.ப 9.30 முதல் சங்க அலுவலக வளாகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

**பொது முகாமையாளர்,**
**வ/ப, யட்டியந்தொட்ட பலநோக்கு,**
**கூட்டுறவு சங்கம்,**
**யட்டியந்தொட்ட**

## சிங்கர் பினான்ஸ் (லங்கா) பீ.எல்.சி பகிரங்க ஏல விற்பனை

சிங்கர் பினான்ஸ் (லங்கா) பீ.எல்.சி மூலம் பெற்றுக்கொண்ட தங்கக் கடனில் ஈடு வைக்கப்பட்ட கால எல்லைக்குள் பணத்தை செலுத்தத் தவறியதால், அந்தத் தங்கக் கடன் வசதிக்காக பத்திரங்களாக அடமானம் வைக்கப்பட்ட தங்கப் பொருட்கள் கீழ் குறிப்பிடப்பட்ட திகதிகளில் மு.ப. 10.00 க்கு பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.

<u>திகதி மற்றும் ஏல விற்பனை இடம்</u>

திகதி : **11/10/2023**
இல.343, மாத்தளை வீதி, தம்புள்ளை.
இல.328, ரஜின சந்தி, தம்புத்தேகம.
இல.05, மைத்திறிபால சேனநாயக்க மாவத்தை, அநுராதபுரம்.
இல.80, யாழ்ப்பாணம் வீதி, மதவாச்சி.
இல.28, 30, இரண்டாம் குறுக்குத் தெரு, வவுனியா.
இல.86, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
A 9 வீதி, கரடிபோக்கு சந்திக்கு அருகில், கிளிநொச்சி.
இல.34, காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்.
இல.498, ஆர். ஏ. டி மெல் மாவத்தை, கொழும்பு 03.
இல.163C/1/1, கொழும்பு வீதி, நீர்கொழும்பு.
விக்டோரி கட்டிடம், சிலாபம் வீதி, வென்னப்புவ.
இல.179/1/1, ஹெட்டிபொல வீதி, குளியாப்பிட்டி.
இல.65, மாஹவ வீதி, நிக்கவரட்டி
இல.42, மிஹிந்து மாவத்தை, குருணாகல்
இல.140/B, கொழும்பு வீதி, குருணாகல்.
இல.311/J, ரன்வல சந்தி, கேகாலை.
இல.103/C, நீர்கொழும்பு வீதி, கிரியுள்ள.

திகதி : **12/10/2023**
இல.14, மங்கல வீதி, கம்பஹா.
இல.837E, தலங்கம வடக்கு, மாலபே.
இல.579, காலி வீதி, வெள்ளவத்தை.
இல.348, காலி வீதி, பாணந்துறை.
இல.362, கோட்டை வீதி, ராஜகிரிய.
இல.34, ஹொரன வீதி, பிலியந்தல.
இல.188, பிலியந்தல வீதி, மஹரகம.
இல.173, இரத்தினபுரி வீதி, ஹொரன.
இல.16, ஹைலெவல் வீதி, ஹோமாகம.
இல.546, காலி வீதி, தெற்கு களுத்துறை, களுத்துறை.
இல.29, ஸ்டேசன் வீதி, தெஹிவளை.
இல.30A, நாவல வீதி, நுகேகொட.
இல.106/1, துட்டுகெமுனு வீதி, கொஹுவளை.

திகதி : **13/10/2023**
இல.64, மாகொல வீதி, கிரிபத்கொடை.
இல.493, நீர்கொழும்பு வீதி, வத்தளை.
இல.120, நீர்கொழும்பு வீதி, ஜாஎல
இல.143 J, கண்டி வீதி, கடவத்த.
இல.310/2A, ஜோர்ஜ் ஆர். டி சில்வா மாவத்தை, கொழும்பு 13.
இல.49, சைமன்ட்ஸ் வீதி, மருதானை, கொழும்பு 10.
இல.115/1, புதிய நகர வீதி, எம்பிலிபிட்டிய.
முத்துகுமாரண கட்டிடம், கீழ் வீதி, திஸ்ஸமகாராம.
இல.46/1/1, கொழும்பு வீதி, கலுவெல்ல, காலி.
இல.01, அநகாரிக்க தர்மபால மாவத்தை, மாத்தறை.
இல.103, டி.எஸ் சேனநாயக்க மாவத்தை, அம்பாறை.
இல.131, நுவரெலிய வீதி, கம்பளை.
இல.271/1, 1ஆவது மாடி, கட்டுகஸ்தொட்ட வீதி, கண்டி.
இல.186. டி.எஸ். சேனநாயக்க மாவத்தை, கண்டி.
இல.18/2, பதியதலாவ வீதி, மஹியங்கனை.
இல.80, கண்டி வீதி, நுவரெலியா.

எந்த ஒரு முன் அறிவித்தலும் இன்றி ஏல விற்பனையை இரத்துச் செய்வது அல்லது ஒத்திவைக்கும் உரிமை சிங்கர் பினான்ஸ் (லங்கா) நிறுவனத்தின் வசமானதாகும்.

தங்கக் கடன் முகாமையாளர்
**SINGER FINANCE**
இல. 498, ஆர்.ஏ.டி மேல் மாவத்தை, கொழும்பு 03.

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு
போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகார சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு

| Contract Name |
|---|
| Construction of Single Cell Box (4m x 2m) Marine Drive Bridge, Kattankudy |
| Construction of Meerakeny Main road Bridge at Eravur |

தேசிய போட்டி கேள்வி முறைமையின் கீழ் மேற்படி வேலைக்காக விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் RDA மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் இணையதளம் www.rda.gov.lk இனை 2023.10.03 முதல் 2023.10.10 வரை பார்வையிடுமாறு ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

## விலைமனுக்கோரல்

### தூய்மைப்படுத்தல் மற்றும் சுத்தப்படுத்தல் சேவை வழங்குதல்

தேசிய போக்குவரத்து ஆணைக்குழு சார்பாக, திணைக்களத்தின் கொள்முதல் குழுவின் தலைவரினால் இல. 241, பூங்கா வீதி, கொழும்பு 05 இல் அமைந்துள்ள தேசிய போக்குவரத்து ஆணைக்குழு மற்றும் வவுனியா பேருந்து நிலையத்தினை பராமரிப்பு மற்றும் சுத்தப்படுத்தல் சேவையினை வழங்குவதற்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.

அனைத்து மனுதாரர்களும் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களினால் பதிவு செய்யப்பட்டிருப்பதுடன், பின்வருனவற்றில் சிறந்த அனுபவத்தினை கொண்டிருத்தல் வேண்டும்.

i. தேவையான வியாபார பதிவு
**நிபுணத்துவம் :** தூய்மைபடுத்தல் சேவையினை வழகுதல்

ii. **தேவைப்படும் அனுபம் :** குறைந்தபட்சம் கடந்த 05 வருடங்களில் 03 புகழ்பெற்ற நிறுவனங்களில் தூய்மைப்படுத்தல் மற்றும் சுத்தப்படுத்தல் சேவை வழங்கியமைக்கான அனுபவத்தினை கொண்டிருத்தல் வேண்டும்.

இதற்காக ஆர்வம் காட்டும் தகுதியான மனுதாரர்கள் மேலதிக தகவல்களை **இல-241, பூங்கா வீதி, கொழும்பு 05 தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, உதவி பணிப்பாளர் (கொள்முதல்)** அவர்களிடம் பெற்றுக்கொள்ளவதுடன், வாரத்தில் வேலை நாட்களில் **காலை 09.00** மணி முதல் **மாலை 15.00** மணி நேரம் வரை மனு ஆவணங்களை பரிசீலனை செய்ய முடியும். **(011-2503969)**

இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் **2023.10.03** ஆம் திகதியிலிருந்து **2023.10.23** ஆம் திகதி வரை **மு.ப.10.00** மணியிலிருந்து **பி.ப.15.00** மணி வரையான காலப்பகுதியினுள் மீளச்செலுத்தப்படாத **ரூ.2,500/-** கட்டணத்தை செலுத்தி தேசிய போக்குவரத்து ஆணைக்குழு சார்பாக, திணைக்களத்தின் **கொள்முதல் குழுவின் தலைவரினால் இல.241, கொழும்பு 05, பூங்கா வீதியில்** விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

சமர்ப்பிக்கப்பட்ட மனுக்களின் செல்லுபடியாகும் காலம் **77 நாட்கள்** வரையாகும்.

**2023.10.24 ஆம் திகதி 14.00** முன்னர் **கொள்முதல் பிரிவில்** வைக்கப்பட்டுள்ள மனுப்பெட்டியில் இடுதல் வேண்டும். காலம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் மனுதாரர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

தலைவர்,
தேசிய போக்குவரத்து ஆணைக்குழு,
241, பார்க் வீதி,
கொழும்பு 05.
**www.ntc.gov.lk**

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

### மருத்துவ உபகரணங்களின் பெறுகை

### தேசிய கண் வைத்தியசாலை கொழும்பு-10

1. பின்வரும் மருத்துவ உபகரணங்களின் பெறுகைக்காக தகுதியுள்ள வழங்குநர்களிடமிருந்து பிராந்திய பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

| *Item No.* | *Item* | *Quantity* | *Non-refundable Fee* |
|---|---|---|---|
| 01. | Cytospine | 01 | 5,000.00 |
| 02. | Tissue Processor | 01 | 5,000.00 |
| 03. | Automated Slide Steiner | 01 | 5,000.00 |

2. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை கொழும்பு-10, தேசிய கண் வைத்தியசாலையிலிருந்து பெற்று அலுவலக நேரங்களில் கீழே முகவரியிடப்பட்டுள்ள நிதிக் கிளையில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
3. 2023.10.03 ஆம் திகதியிலிருந்து 2023.10.23 ஆம் திகதியன்று வரையும் திங்கட்கிழமைகளிலிருந்து வெள்ளிக்கிழமைகள் வரையும் அடங்கலாக பிரசித்த விடுமுறைகள் நீங்கலாக, மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணத்தை ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், கீழே வழங்கப்பட்டுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணத்தின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
4. அனைத்து விலைமனுக்களும் ஒரு மூலப்பிரதி மற்றும் ஒரு நகல்பிரதியொன்றுடன் உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு சாதாரண தபாலுறைகளில் அடக்கப்பட்டு 2023 ஒக்ரோபர் 24 ஆம் திகதியன்று விலைமனுக்களை மூடும் நேரமாகிய மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது கொழும்பு-10, தேசிய கண் வைத்தியசாலை கணக்காளரின் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **"Procurement of Lab Equipment on 24.10.2023 at 10.00 am."** என குறிப்பிடப்படல் வேண்டும்.
5. அதன் பின்னர் விலைமனுக்கள் பகிரங்கமாகவும் திறத்தலில் பங்கு பெறும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையிலும் முறையாக திறக்கப்படும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**தேசிய கண் வைத்தியசாலை,**
**கொழும்பு-10.**

**தொலைபேசி: 011-2693911/ 011-2693915**

## எல் பீ பினான்ஸ் பி.எல்.சி பகிரங்க ஏலவிற்பனை

எல் பீ பினான்ஸ் பி.எல்.சி நிறுவனத்தில் வைத்து தங்கக் கடன் பெற்று, உரிய காலத்தினுள் மீட்கப்படாத தங்க நகைகள் பின்வரும் இடங்களில் கீழ்க்காணும் திகதிகளில் காலை 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| ஏலவிற்பனைத் | திகதி | முகவரி |
|---|---|---|
| 01/06/13/20 | நவம்பர் 2023 | இல. 224, காலி வீதி, வெள்ளவத்தை. |
| 01/06/13/20 | நவம்பர் 2023 | இல. 124, காலி வீதி, தெகிவளை. |
| 01/06/13/20 | நவம்பர் 2023 | இல. 676, காலி வீதி, கொழும்பு 03. |
| 01/06/13/20 | நவம்பர் 2023 | இல. 269, பிரதான வீதி, அத்திடிய. |
| 01/06/13/20 | நவம்பர் 2023 | இல. 84 A, காலி வீதி, தெகிவளை. |
| 01/06/13/20 | நவம்பர் 2023 | இல. 51A, W.A. சில்வாமாவத்தை, கொழும்பு 06. |
| 01/06/13/20 | நவம்பர் 2023 | இல. 334, பிரதான வீதி, களுத்துறை தெற்கு. |
| 01/06/13/20 | நவம்பர் 2023 | இல. 04, பாணந்துறை வீதி, பண்டாரகம. |
| 01/06/13/20 | நவம்பர் 2023 | இல. 508, காலி வீதி, பாணந்துறை. |
| 01/06/13/20 | நவம்பர் 2023 | இல. 18, கெசல்வத்த, பாணந்துறை. |
| 01/06/13/20 | நவம்பர் 2023 | இல. 175/A, காலி வீதி, பேருவளை. |
| 01/06/13/20 | நவம்பர் 2023 | இல. 358/D, மதுக்கம வீதி, தர்கா நகரம். |
| 01/06/13/20 | நவம்பர் 2023 | இல. 534, காலி வீதி, வாட்டுவ. |
| 01/06/13/20 | நவம்பர் 2023 | இல. 358, காலி வீதி, அளுத்கம. |
| 01/06/13/20 | நவம்பர் 2023 | இல. 25, யட்டியந்தோட்ட வீதி, அவிசாவளை. |
| 01/06/13/20 | நவம்பர் 2023 | இல. 141/A, கொலன்னாவ வீதி, கொலன்னாவ. |
| 01/06/13/20 | நவம்பர் 2023 | இல. 24/A, பிரதான வீதி, கன்வெல்ல. |
| 01/06/13/20 | நவம்பர் 2023 | இல. 25A, பிரதான வீதி, ஹெலியகொட. |
| 01/06/13/20 | நவம்பர் 2023 | இல. 755/1, பன்னிப்பிட்டியவீதி, பத்தரமுல்ல. |
| 01/06/13/20 | நவம்பர் 2023 | இல. 434, E.W.பெரேரா மாவத்தை, கோட்டை வீதி, பிட்டகோட்டை. |
| 01/06/13/20 | நவம்பர் 2023 | இல. 92, ஸ்டான்லி திலகரத்ன மாவத்தை, நுகேகொட. |
| 01/06/13/20 | நவம்பர் 2023 | இல. 595, உயர்மட்ட வீதி, கங்கொடவில, நுகேகொட. |
| 01/06/13/20 | நவம்பர் 2023 | இல. 103, பாணந்துறை வீதி, ஹொரண. |
| 01/06/13/20 | நவம்பர் 2023 | இல. 68, ஹொரண வீதி, பிலியந்தல. |
| 01/06/13/20 | நவம்பர் 2023 | இல. 28, தெகிவளை வீதி, பொரலஸ்கமுவ. |
| 01/06/13/20 | நவம்பர் 2023 | இல. 66, காலி வீதி, கல்கிசை. |
| 01/06/13/20 | நவம்பர் 2023 | இல. 129, பழைய காலி வீதி, மொரட்டுவ. |
| 01/06/13/20 | நவம்பர் 2023 | இல. 227, டி சொய்சா வீதி, மொறட்டுமுல்லை, மொறட்டுவ. |
| 01/06/13/20 | நவம்பர் 2023 | இல. 91, உயர்மட்ட வீதி, கிருலப்பனை, கொழும்பு 06. |
| 01/06/13/20 | நவம்பர் 2023 | இல. 11, கல்தேமுல்ல வீதி, மொறட்டுவ. |
| 01/06/13/20 | நவம்பர் 2023 | இல. 19, தனயம் பிவிசம் மாவத்தை, பலாங்கொட. |
| 01/06/13/20 | நவம்பர் 2023 | இல. 167, பிரதான வீதி, பண்டாரவல. |
| 01/06/13/20 | நவம்பர் 2023 | இல. 26, வங்கி வீதி, பதுளை. |
| 01/06/13/20 | நவம்பர் 2023 | இல. 89, கீழ் தெரு, பதுளை. |
| 01/06/13/20 | நவம்பர் 2023 | இல. 14, பிரதான வீதி, எல்பிட்டிய. |
| 01/06/13/20 | நவம்பர் 2023 | இல. 87. பிரதான வீதி, பிட்டிகல. |
| 01/06/13/20 | நவம்பர் 2023 | இல. 48, இரத்தினபுர வீதி, பதுரலிய. |
| 01/06/13/20 | நவம்பர் 2023 | இல. 96, அகலவத்தை வீதி, மத்துகம. |
| 01/06/13/20 | நவம்பர் 2023 | இல. 49, சேனநாயக்க மாவத்தை, இரத்தினபுரி. |
| 01/06/13/20 | நவம்பர் 2023 | இல. 34, பிரதான வீதி, திஸ்ஸமஹராம |
| 01/06/13/20 | நவம்பர் 2023 | இல. 21, புதிய நகர வீதி, எம்பிலிப்பிட்டிய. |
| 01/06/13/20 | நவம்பர் 2023 | இல. 138 D/1, ஹம்பாந்தோட்ட வீதி, அம்பலாந்தோட்ட. |
| 02/07/14/21 | நவம்பர் 2023 | இல. 150, பிரதான வீதி, காலி. |
| 02/07/14/21 | நவம்பர் 2023 | இல. 66, திஸ்ஸ வீதி, தங்கல்லே. |
| 02/07/14/21 | நவம்பர் 2023 | இல. 2, H.V. கட்டிடம், டெல்லாவ வீதி, நெலுவ. |
| 02/07/14/21 | நவம்பர் 2023 | இல. 282, அநாகரிக தர்மபால மாவத்தை, மாத்தறை. |
| 02/07/14/21 | நவம்பர் 2023 | இல. 96/2, காலி வீதி, அம்பலாங்கொடை. |
| 02/07/14/21 | நவம்பர் 2023 | இல. 598 E, ஹிரிம்புரா வீதி, கராபிட்டிய. |
| 02/07/14/21 | நவம்பர் 2023 | இல. 149, பிரதான வீதி, தெனியாய. |
| 02/07/14/21 | நவம்பர் 2023 | இல. 13, ஸ்டேஷன் ரோடு, மாத்தறை. |
| 02/07/14/21 | நவம்பர் 2023 | இல. 83, தெனியாய வீதி, அக்குரஸ்ஸ. |
| 02/07/14/21 | நவம்பர் 2023 | இல. 722, விஹார சந்தி, வரகொட வீதி, களனி. |
| 02/07/14/21 | நவம்பர் 2023 | இல. 175, கண்டி வீதி, கிரிபத்கொட. |
| 02/07/14/21 | நவம்பர் 2023 | இல. 482, அவிசாவளை வீதி, கடுவெல்ல. |
| 02/07/14/21 | நவம்பர் 2023 | இல. 136/12H, கண்டி வீதி, கடவத்த. |
| 02/07/14/21 | நவம்பர் 2023 | இல. 350/16, கொழும்பு வீதி, தெல்கொட. |
| 02/07/14/21 | நவம்பர் 2023 | இல. 44, மாகொல வீதி, கிரிபத்கொட. |
| 02/07/14/21 | நவம்பர் 2023 | இல: 365, உயர்மட்ட வீதி, கொட்டாவ. |
| 02/07/14/21 | நவம்பர் 2023 | இல. 419, கோட்டை வீதி, ராஜகிரிய. |
| 02/07/14/21 | நவம்பர் 2023 | இல. 835/2A, தலங்கம, யர்த், மாலபே. |
| 02/07/14/21 | நவம்பர் 2023 | இல. 124/A, துட்டககெமுனு வீதி, கொகுவெல்ல. |
| 02/07/14/21 | நவம்பர் 2023 | இல. 69, தெகிவளை வீதி, மகரகம. |
| 02/07/14/21 | நவம்பர் 2023 | இல. 227/A, உயர்மட்ட வீதி, வத்தேகெதர, மகரகம. |
| 02/07/14/21 | நவம்பர் 2023 | இல. 76, உயர்மட்ட வீதி, ஹோமாகம. |
| 02/07/14/21 | நவம்பர் 2023 | இல. 50/12, கொடகம வீதி, அதுருகிரிய. |
| 02/07/14/21 | நவம்பர் 2023 | இல. 145, மலாய் வீதி, கொழும்பு 02. |
| 02/07/14/21 | நவம்பர் 2023 | இல. 54, D.S.சேனநாயக்க மாவத்தை, பொரல்லை. |
| 02/07/14/21 | நவம்பர் 2023 | இல. 239, கிருள வீதி, நாரஹேன்பிட்டிய |
| 02/07/14/21 | நவம்பர் 2023 | இல. 282, நாகலகம் வீதி, கொழும்பு 14. |
| 02/07/14/21 | நவம்பர் 2023 | இல. 20, தர்மபால மாவத்தை, கொழும்பு 03. |
| 02/07/14/21 | நவம்பர் 2023 | இல. 165, தர்மபால மாவத்தை, கொழும்பு 07. |
| 02/07/14/21 | நவம்பர் 2023 | இல. 52/17, கொத்தடுவ புதிய நகரம், கொத்தடுவ. |
| 02/07/14/21 | நவம்பர் 2023 | இல. 556, 558, மருதானை வீதி, கொழும்பு 10. |
| 02/07/14/21 | நவம்பர் 2023 | இல. 21, சென்.ஜோசப் வீதி, கிராண்ட்பாஸ். |
| 02/07/14/21 | நவம்பர் 2023 | இல. 551, தெமட்டகொட வீதி, கொழும்பு 09. |
| 02/07/14/21 | நவம்பர் 2023 | இல. 275/75, பேராசிரியர் ஸ்டான்லி விஜயசுந்தர மாவத்தை, கொழும்பு 07. |
| 02/07/14/21 | நவம்பர் 2023 | இல. 197, மன்ஸ் வீதி, கொழும்பு10. |
| 02/07/14/21 | நவம்பர் 2023 | இல. 65/A, ஸ்ரீ சதர்ம மாவத்தை, மாளிகாவத்தை, கொழும்பு 10. |
| 02/07/14/21 | நவம்பர் 2023 | இல. 245, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10. |
| 02/07/14/21 | நவம்பர் 2023 | இல. 197, செட்டியார் தெரு, கொழும்பு 11. |
| 02/07/14/21 | நவம்பர் 2023 | இல. 149, KB கிறிஸ்டி பெரேரா மாவத்தை, கொழும்பு13. |
| 02/07/14/21 | நவம்பர் 2023 | இல. 371/1, டாம் வீதி, கொழும்பு 12. |
| 02/07/14/21 | நவம்பர் 2023 | இல. 1024, மருதானை வீதி, கொழும்பு10. |
| 03/08/15/22 | நவம்பர் 2023 | இல. 26, கண்டி வீதி, மதவாச்சிய. |
| 03/08/15/22 | நவம்பர் 2023 | இல. 137, பிரதான வீதி, அனுராதபுரம். |
| 03/08/15/22 | நவம்பர் 2023 | இல. 514/A, புதிய நகரம், அனுராதபுரம் . |
| 03/08/15/22 | நவம்பர் 2023 | இல. 15, தலாவ வீதி, கெக்கிராவ. |
| 03/08/15/22 | நவம்பர் 2023 | இல. 256, புதிய நகரம், தம்புத்தேகம. |
| 03/08/15/22 | நவம்பர் 2023 | இல. 219, புத்தளம் வீதி, நொச்சியகம. |
| 03/08/15/22 | நவம்பர் 2023 | இல. 03, சென்லூசியாஸ் வீதி, கொட்டஹேனா. |
| 03/08/15/22 | நவம்பர் 2023 | இல. 81, மோதர வீதி, கொழும்பு 15. |
| 03/08/15/22 | நவம்பர் 2023 | இல. 18, எலகந்த, கந்தல, வத்தல. |
| 03/08/15/22 | நவம்பர் 2023 | இல. 3/729, பண்ணை வீதி, கொழும்பு 15. |
| 03/08/15/22 | நவம்பர் 2023 | இல. 47, கிராண்ட்பாஸ் வீதி, கொழும்பு 14. |
| 03/08/15/22 | நவம்பர் 2023 | இல. 530, அளுத் மாவத்தை வீதி, கொழும்பு15. |
| 03/08/15/22 | நவம்பர் 2023 | இல. 107, சென்.ஜோசப் வீதி, நீர்கொழும்பு. |
| 03/08/15/22 | நவம்பர் 2023 | இல. 110, சிலாபம் வீதி, கொச்சிக்கடை. |
| 03/08/15/22 | நவம்பர் 2023 | இல. 356, பிரதான வீதி, நீர்கொழும்பு. |
| 03/08/15/22 | நவம்பர் 2023 | இல. 134, பிரதான வீதி, வென்னப்புவ. |
| 03/08/15/22 | நவம்பர் 2023 | இல. 40 A, கொழும்பு வீதி, சிலாபம். |
| 03/08/15/22 | நவம்பர் 2023 | இல. 106 C, குருநாகல வீதி, புத்தளம். |
| 03/08/15/22 | நவம்பர் 2023 | இல. 75 A, சிலாபம் வீதி, மாரவில. |
| 03/08/15/22 | நவம்பர் 2023 | இல. 84, பிரதான வீதி, கல்பிட்டிய. |
| 03/08/15/22 | நவம்பர் 2023 | இல. 17, ஸ்டேஷன் வீதி, கந்தலை சந்தி, வத்தலை. |
| 03/08/15/22 | நவம்பர் 2023 | இல. 661/A, தெவத்த வீதி, ராகம. |
| 03/08/15/22 | நவம்பர் 2023 | இல. 39, கொழும்பு வீதி, கந்தானை. |
| 03/08/15/22 | நவம்பர் 2023 | இல. 229/1, கடவத்த வீதி, கனேமுல்ல. |
| 03/08/15/22 | நவம்பர் 2023 | இல. 6/1/1, பழைய நீர்கொழும்பு வீதி, யா-எல. |
| 03/08/15/22 | நவம்பர் 2023 | இல. 434, பேஸ்லைன் வீதி, அவரிவத்த, கட்டுநாயக்க. |
| 03/08/15/22 | நவம்பர் 2023 | பிரதான வீதி, மெதிரிகிரிய. |
| 03/08/15/22 | நவம்பர் 2023 | ராஜரட்டகட்டிடம், பிரதானவீதி, கதுருவெல்ல, பொலன்னறுவை. |
| 03/08/15/22 | நவம்பர் 2023 | இல. 114, பிரதானவீதி, கந்தல |
| 03/08/15/22 | நவம்பர் 2023 | இல. 594/3, கண்டி வீதி, நிட்டம்புவ. |
| 03/08/15/22 | நவம்பர் 2023 | இல. 61/2, கண்டி வீதி, திஹாரிய. |
| 03/08/15/22 | நவம்பர் 2023 | இல. 19, பிரதான வீதி, கேகாலை. |
| 03/08/15/22 | நவம்பர் 2023 | இல. 230, கண்டி வீதி, மாவனெல்ல. |
| 03/08/15/22 | நவம்பர் 2023 | இல. 81, கண்டி வீதி, வரக்காப்பொல. |
| 03/08/15/22 | நவம்பர் 2023 | இல. 57, வெயங்கொட வீதி, மினுவாங்கொடை. |
| 03/08/15/22 | நவம்பர் 2023 | இல. 1B, பௌத்தலோக மாவத்தை, கம்பஹா. |
| 03/08/15/22 | நவம்பர் 2023 | இல. 69, கிருல்ல வீதி, திவுலப்பிட்டிய. |
| 04/09/16/23 | நவம்பர் 2023 | இல. 3, நுவரெலியா வீதி, வெலிமட. |
| 04/09/16/23 | நவம்பர் 2023 | இல. 71, ராணி எலிசபெத் மாவத்தை, நுவரெலியா. |
| 04/09/16/23 | நவம்பர் 2023 | இல. 473, நுவரெலியா வீதி, புசல்லாவ. |
| 04/09/16/23 | நவம்பர் 2023 | இல. 22, நுவரெலியா வீதி, கம்பொலை. |
| 04/09/16/23 | நவம்பர் 2023 | இல. 52, டன்பரா வீதி, ஹட்டன். |
| 04/09/16/23 | நவம்பர் 2023 | இல. 73, கொத்மலை வீதி, நாவலப்பிட்டிய. |
| 04/09/16/23 | நவம்பர் 2023 | இல. 175, பிரதான வீதி, மஸ்கெலிய. |
| 04/09/16/23 | நவம்பர் 2023 | இல. 118A, கொழும்பு வீதி, குருநாகல். |
| 04/09/16/23 | நவம்பர் 2023 | இல. 12, பிரதான வீதி, குளியாப்பிட்டிய. |
| 04/09/16/23 | நவம்பர் 2023 | இல. 103A, கொழும்பு வீதி, குருநாகல். |
| 04/09/16/23 | நவம்பர் 2023 | இல. 21, தம்புள்ளை வீதி, குருநாகல். |
| 04/09/16/23 | நவம்பர் 2023 | இல. 35, சரஸ்வி கட்டிடம், பிரதான வீதி, நாரம்மல. |
| 04/09/16/23 | நவம்பர் 2023 | இல. 24, சிலாபம் வீதி, ஆனமடுவ. |
| 04/09/16/23 | நவம்பர் 2023 | இல. 115, கொடுகொடெல்ல வீதி, கண்டி. |
| 04/09/16/23 | நவம்பர் 2023 | இல. 298, கொழும்புவீதி, பிலிமத்தலாவ. |
| 04/09/16/23 | நவம்பர் 2023 | இல. 13A, கண்டி வீதி, கெலியோயா. |
| 04/09/16/23 | நவம்பர் 2023 | இல. 66, நாவலப்பிட்டிய வீதி, கம்பளை. |
| 04/09/16/23 | நவம்பர் 2023 | இல. 44/1, புதிய பஸ் நிலைய வீதி, மொனராகலை. |
| 04/09/16/23 | நவம்பர் 2023 | இல. 153, மடவல வீதி, கடுகஸ்தோட்ட. |
| 04/09/16/23 | நவம்பர் 2023 | இல. 251, பிரதான வீதி, மாத்தளை. |
| 04/09/16/23 | நவம்பர் 2023 | இல. 226, டி.எஸ். சேனநாயக்க வீதி, கண்டி. |
| 04/09/16/23 | நவம்பர் 2023 | இல. 38, குருநாகல் சந்தி, தம்புள்ளை. |
| 04/09/16/23 | நவம்பர் 2023 | இல. 31, குருநாகல் வீதி, கலேவெல. |
| 04/09/16/23 | நவம்பர் 2023 | இல. 14, புதிய நகரம், திகன. |
| 04/09/16/23 | நவம்பர் 2023 | இல. 56,57, எட்வின் விக்கிரமரத்ன வணிக வளாகம், புதிய நகரம், மஹியங்கனை. |
| 04/09/16/23 | நவம்பர் 2023 | இல. 10/2, வங்கி எதிரில், புதிய நகரம், தெஹியத்தகண்டி. |
| 10/17/24/27 | நவம்பர் 2023 | இல. 171, யாழ்ப்பாண வீதி, மானிப்பாய். |
| 10/17/24/27 | நவம்பர் 2023 | இல. 35, காங்கேசன்துறை, வல்வெட்டித்துறை. |
| 10/17/24/27 | நவம்பர் 2023 | இல. 440, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம். |
| 10/17/24/27 | நவம்பர் 2023 | இல. 3,5 வல்லை வீதி, சங்கானை. |
| 10/17/24/27 | நவம்பர் 2023 | இல. 10, பருத்தித்துறை வீதி, நெல்லியடி. |
| 10/17/24/27 | நவம்பர் 2023 | இல. 406, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம. |
| 10/17/24/27 | நவம்பர் 2023 | இல. 126, 128, பிரதானவீதி, பருத்தித்துறை. |
| 10/17/24/27 | நவம்பர் 2023 | இல. 69, பிரதானவீதி, அச்சுவேலி |
| 10/17/24/27 | நவம்பர் 2023 | இல. 55, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம். |
| 10/17/24/27 | நவம்பர் 2023 | இல. 136, கண்டி வீதி, சாவகச்சேரி. |
| 10/17/24/27 | நவம்பர் 2023 | இல. 6, பருத்தித்துறை வீதி, கோப்பாய். |
| 10/17/24/27 | நவம்பர் 2023 | இல. 266, தெல்லிப்பளை வீதி, வட்டு தென் மேற்கு, வட்டுக்கோட்டை. |
| | | கண்டி வீதி, கொடிகாமம். |
| 10/17/24/27 | நவம்பர் 2023 | இல. 575, கே.கே.எஸ் வீதி, தெல்லிப்பளை தெற்கு, தெல்லிப்பளை. |
| 10/17/24/27 | நவம்பர் 2023 | இல. 95, பலாலி வீதி, திருநெல்வேலி. |
| 10/17/24/27 | நவம்பர் 2023 | இல. 111, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். |
| 10/17/24/27 | நவம்பர் 2023 | இல. 187, பிரதான வீதி, மன்னார். |
| 10/17/24/27 | நவம்பர் 2023 | இல. 497, கண்டி வீதி, கிளிநொச்சி. |
| 10/17/24/27 | நவம்பர் 2023 | இல. 01, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு. |
| 10/17/24/27 | நவம்பர் 2023 | பிரதான வீதி, மல்லாவி. |
| 10/17/24/27 | நவம்பர் 2023 | PW வீதி, முல்லைத்தீவு. |
| 10/17/24/27 | நவம்பர் 2023 | இல. 32B, 2ம் குறுக்கு வீதி, வவுனியா. |
| 10/17/24/27 | நவம்பர் 2023 | இல. 12, வட்டாரஇல. 06, பிரதானவீதி, பேசாலை, மன்னார். |
| 10/17/24/27 | நவம்பர் 2023 | பிரதான வீதி, மருதங்கேணி. |
| 10/17/24/27 | நவம்பர் 2023 | MPCS கட்டிடம், பிரதான வீதி, சாய்ந்தமருது - 09. |
| 10/17/24/27 | நவம்பர் 2023 | பிரதான வீதி, அட்டாளைச்சேனை. |
| 10/17/24/27 | நவம்பர் 2023 | இல. CC/44, பிரதான வீதி, மத்திய முகாம் 03, அம்பாறை. |
| 10/17/24/27 | நவம்பர் 2023 | இல. 25, ஹிர்ஜா சந்திப்பு, கல்முனைவீதி, சம்மாந்துறை. |
| 10/17/24/27 | நவம்பர் 2023 | பிரதான வீதி, திருக்கோவில் 01. |
| 10/17/24/27 | நவம்பர் 2023 | இல. 04, கடிகார கோபுரம் எதிரே, அம்பாறை. |
| 10/17/24/27 | நவம்பர் 2023 | இல. 28, சாகம வீதி, அக்கரைப்பற்று - 08. |
| 10/17/24/27 | நவம்பர் 2023 | பிரதான வீதி, பொத்துவில். |
| 10/17/24/27 | நவம்பர் 2023 | பிரதான வீதி, வவுனதீவு. |
| 10/17/24/27 | நவம்பர் 2023 | பாடசாலைஎதிரே, வைத்தியசாலைவீதி, களுவாஞ்சிக்குடி. |
| 10/17/24/27 | நவம்பர் 2023 | இல.71 A, பிரதான வீதி, ஆரையம்பதி. |
| 10/17/24/27 | நவம்பர் 2023 | பிரதான வீதி, பிரிவு 10, கொக்கட்டிச்சோலை. |
| 10/17/24/27 | நவம்பர் 2023 | பிரதான வீதி, மட்டக்களப்பு வீதி, கல்முனை. |
| 10/17/24/27 | நவம்பர் 2023 | இல. 275, மத்திய வீதி, திருகோணமலை. |
| 10/17/24/27 | நவம்பர் 2023 | "சந்தை எதிர் வளாகம்", பிரதான வீதி, செங்கலடி. |
| 10/17/24/27 | நவம்பர் 2023 | சந்தை எதிரே, பிரதான வீதி, வாழைச்சேனை. |
| 10/17/24/27 | நவம்பர் 2023 | இல. 175, திருகோணமலை வீதி, மட்டகளப்பு. |
| 10/17/24/27 | நவம்பர் 2023 | இல. 50/2, பிரதான வீதி, கிண்ணியா. |
| 10/17/24/27 | நவம்பர் 2023 | திருகோணமலை வீதி, கண்டலடி, வாகரை. |
| 10/17/24/27 | நவம்பர் 2023 | பிரதான வீதி, கிரன். |
| 10/17/24/27 | நவம்பர் 2023 | இல. E 20/3/3, திருகோணமலை வீதி, சேருநுவர. |
| 10/17/24/27 | நவம்பர் 2023 | இல. 151, 153, புன்னக்குடா வீதி, ஏறாவூர் 03, ஏறாவூர். |
| 10/17/24/27 | நவம்பர் 2023 | இல. 252B, 252/1, கண்டி வீதி, திருகோணமலை. |

எந்தவொரு முன்னறிவித்தலுமின்றி ஏலத்தை நிறுத்தவோ, பின்தள்ளிப் போடவோ எல்பீ பினான்ஸ் பிஎல்சி நிறுவனத்துக்கு உரிமம் உள்ளது.

**LB FINANCE**
உதவி பொது முகாமையாளர் - தங்கக் கடன் பிரிவு
275Æ75, பேராசிரியர் ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.

# பெறுகை அறிவித்தல்

## போதனா வைத்தியசாலை - அநுராதபுரம்

அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் பின்வரும் கட்டிட வேலைகளைச் செய்வதற்காக முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் 2023-10-03ஆம் திகதி முதல் 2023-10-27ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

| செயற்றிட்ட இலக்கம் | செயற்றிட்டம் | மீளளிக்கப் படாத கேள்விக் கட்டணம் | விலைமனுப் பிணை முறி | பொறியியல் மதிப்பீடு (ரூபா மில்லியன்) | CIDA மற்றும் NCPC பதிவு |
|---|---|---|---|---|---|
| THA/AA/ NTS/2023/12 | SUPPLY AND FIXING OF FIXED GLASS WINDOWS FOR TWO CLASS ROOMS AT NTS | 1,500.00 | 9,000.00 | 0.90 | C9 or C8 |
| THA/AA/ NTS/2023/17 | FIXING FRONT SIDE AREA VALLEY GUTTER, RIDGE PLATE FIXING AND RENOVATION WORK OF ADMIN AND HOSTEL BUILDING OF NTS | 1,500.00 | 9,000.00 | 0.92 | C9 or C8 |
| THA/AA/ NTS/2023/18 | EXTENSION OF GROUND FLOOR WASH ROOM AND COMMODE FIXING IN 1ST & 2ND FLOOR TUTOR'S WASHROOMS AT NTS | 1,500.00 | 9,000.00 | 0.85 | C9 or C8 |
| THA/AA/ DQ/2023/19 | CONSTRUCTION OF MAN HOLES AND INSTALLATION OF SEPTIC TANK & SOAKAGE PIT IN DIRECTOR QUARTERS | 2,000.00 | 12,000.00 | 1.28 | C9 or C8 |
| THA/AA/MM04-01/2023/20 | CONCRETING ARROUND THE SEPTIC TANK AND SUPPLY AND INSTALLATION OF SEPTIC TANK IN MM 04-01 QUARTERS | 2,000.00 | 11,000.00 | 1.12 | C9 or C8 |
| THA/AA/ WD39/2023/21 | PATIENTS WASH ROOM PAINTING AND DOOR REPAIRING OF WARD NO 39 | 2,000.00 | 18,000.00 | 1.82 | C9 or C8 |
| THA/AA/ WD20/2023/11 | IMPROVEMENT OF PATIENTS TOILETS IN WARD NO 20 | 3,500.00 | 53,000.00 | 5.28 | C7, C8or C9 |

01. சமர்ப்பிக்கப்படும் விலைமனுப் பிணை 2023-10-03ஆம் திகதி முதல் 2023-10-27ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும். அவ்வாறே விலைமனு ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரியாகவிருத்தல் கட்டாயமாகும்.

02. அநுராதபுரம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளருக்கு வேண்டுகோள் கடிதம் ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

03. 4/2016(II) அரச நிதிச் சுற்றுநிருபத்தின் 3.2 இன் பிரகாரம் வடமத்திய மாகாணத்தில் வதியும் ஒப்பந்தக்காரர்களுக்கிடையில் சித்திகரமான விலைமனுதாரர்களுக்கு 05% முன்னுரிமை வழங்கப்படும்.

04. 5 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட விலைமனுக்களைச் சமர்ப்பிக்கையில் பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொண்டமைக்கான ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாவணங்கள் சமர்ப்பிக்கப்படாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

05. கட்டிட திருத்த வேலைகளுக்கான மேலதிக விபரங்களை 025-2222261-111 எனும் தொலைபேசி இலக்கத்தைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

06. தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் தலைமை அலுவலகத்தில் 2023-10-26ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். இந்த கேள்விக்குரித்தான ஆவணங்களை அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

07. பெறுகை நிபந்தனைகளுக்கமைவாக தயாரிக்கப்பட்ட விலைமனுக்களை 2023-10-27ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் பெறுகைக் குழு, அநுராதபுரம் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் கணக்காளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விலைக்கோரலின் பெயர் மற்றும் திறக்கப்படும் திகதி என்பன குறிப்பிடப்படல் வேண்டும்.

08. 2023-10-27ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளல் நிறைவடைந்த உடனடுத்து விலைமனுக்கள் திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் இந்நிகழ்வில் கலந்துகொள்ளலாம். இந்த பெறுகை தொடர்பில் அநுராதபுரம் போதனா வைத்தியசாலை பிராந்திய பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**போதனா வைத்தியசாலை,**
**அநுராதபுரம்.**

www.adz.lk
it's what you want

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## சுகாதார அமைச்சு

## போதனா வைத்தியசாலை - பதுளை

பதுளை போதனா வைத்தியசாலை பிராந்திய பெறுகைக் குழுவின் தலைவரினால் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வழங்கல்களை பெற்றுக்கொள்வதற்காக தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்த விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| வரிசை இலக்கம் | விலைமனு இலக்கம் | வேலை விபரம் | குறைந்தபட்ச ICTAD தகைமை | மீளளிக்கப்படாத விலைமனு பதிவு கட்டணம் | மீளளிக்கப்படும் விலைமனு பிணை (ரூபா) |
|---|---|---|---|---|---|
| | Construction | | | | |
| 01 | TH/AC/NCB/2023/04 | Renovation of Ministry circuit bungalow at Rathwaththa Mawatha, Badulla | C6 and C5 | 3,500.00 | 239,367.00 |
| 02 | TH/AC/NCB/2023/05 | Construction of Doctor's Room and waiting area for Surgical clinic | C8 and C7 | 1,000.00 | 39,606.00 |
| 03 | TH/AC/NCB/2023/06 | Extension of Theatre "A" at Teaching Hospital Badulla | C6 and C5 | 3,500.00 | 163,318.00 |
| 04 | TH/AC/NCB/2023/07 | Expansion of Administration Building at Teaching Hospital - Badulla | C6 and C5 | 3,500.00 | 153,667.00 |
| 05 | TH/AC/NCB/2023/08 | Extension & Completion of Generator Building First floor in to Medical staff on call room | C6 and C5 | 3,500.00 | 240,641.00 |
| 06 | TH/AC/NCB/2023/09 | Development of front area of the OPD to use in Emergency with Ambulance excess | C7 and C6 | 1,000.00 | 90,863.00 |
| 07 | TH/AC/NCB/2023/10 | Extension of PBU at Teaching Hospital Badulla | C6 and C5 | 3,500.00 | 203,212.00 |
| | Medical Equipment | | Qty | | |
| 01 | TH/FC/23/2023 | Supply Installation Commissioning and Maintenance of 01 no of Dialysis Machine (Pediatric) | 01 | 1,450.00 | 64,000.00 |

02. தேசிய போட்டிரீதியான விலைமனு முறை (NCB) மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.

03. இது தொடர்பில் மேலதிக விபரங்களை வாரத்தின் வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் கணக்காளரை அழைத்து (நீடிப்பு 1103) அல்லது கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வைத்தியசாலை இணையதளத்தில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

04. தகுதி பெற்ற விலைமனுதாரர்களுக்கு ஒரு விலைமனுவுக்கு மீளளிக்கப்படாத மேல் குறிப்பிடப்பட்ட விலைமனு ஆவணக் கட்டணத்தை வாரத்தின் வேலை நாட்களில் முற்பகல் 09.00 தொடக்கம் பிற்பகல் 03.00 வரை சனிக்கிழமைகளில் முற்பகல் 09.00 தொடக்கம் நண்பகல் 12.00 வரையும் வைத்தியசாலையில் சிறாப்பர் பிரிவில் செலுத்திய பின் 2023.10.03 ஆம் திகதி தொடக்கம் 2023.10.21 ஆம் திகதி வரை தேவையான விலைனு ஆவணத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

05. அனைத்து Construction இற்கான விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு (Pre Bid Meeting) 2023.10.13 ஆம் திகதி மு.ப. 10.30க்கு தலைமை அலுவலகத்தில் இடம்பெறும்.

06. விலைமனு ஆவணத்தை பெறுவதற்கு, விண்ணப்ப கடிதம் ஒன்றுடன் நிறுவன பதிவு சான்றிதழ் அல்லது வர்த்தகப் பதிவு சான்றிதழின் பிரதி ஒன்றை அவசியம் சமர்ப்பித்தல் வேண்டும்.

07. ஐந்து மில்லியன் ரூபாவுக்கு மேல் அனைத்து தொழில்துறைக்கும் 1987 இன் 03 ஆம் இலக்கம் கொண்ட பொது ஒப்பந்த உடன்படிக்கை சட்டத்தின் கீழ் பதிவு செய்தல் வேண்டும் என்பதோடு, விலைமனுவுடன் அந்த பதிவுச் சான்றிதழ் அல்லது அதனை உறுதி செய்ய முடியுமான ஆவணங்களை சமர்ப்பித்தல் வேண்டும். அதனை சமர்ப்பிக்காத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

08. பூர்த்தி செய்யப்பட்ட முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் 2023.10.23ஆம் திகதி மு.ப. 10.30க்கு முன்னர் பதுளை போதனா வைத்தியசாலைக்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது கைகளால் கொண்டுவந்து விலைக்கேட்புப் பெட்டிக்கு இட முடியும். தாமதித்துக் கிடைக்கின்ற விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். அன்றைய தினத்திலேயே மு.ப. 10.30க்கு பணிப்பாளர் அலுவலகத்தில் விலைமனுக்கள் திறக்கப்படுவதோடு, அந்த சந்தர்ப்பத்திற்கு விலைமனுதாரருக்கு அல்லது அனுமதி பெற்ற பிரதிநிதி ஒருவருக்கு பங்கேற்க முடியும்.

09. விலைமனு தொடர்பில் இறுதி முடிவு எடுக்கும் உரிமை பதுளை போதனா வைத்தியசாலை பிராந்திய பெறுகைக் குழு வசமானது.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**போதனா வைத்தியசாலை, பதுளை.**
**தொலைபேசி இலக்கம்:- 055-2222261**
**தொலைநகல்:- 055-2231205**
**மின்னஞ்சல்:- info@badullapgh.org**
**இணையதளம்:- - www.badullapgh.org**

# இலங்கை வங்கி

**1968 ஆம் ஆண்டு 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிகட்டளைச் சட்டம் 21 ஆம் பிரிவின் (397 ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்.**

2022.12.27இல் நடைபெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கிப் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது :-

1. பிரசித்த நொத்தாரிசு டீ.என் குமாரசிங்க அத்தாட்சிப்படுத்திய 2017.09.26ஆம் திகதியிட்ட 437 ஆம் இலக்க ஈட்டுமுறி, 2018.08.15ஆம் திகதியிட்ட 700ஆம் இலக்க ஈட்டு முறி என்பவற்றின் பேரில் பெற்றுக் கொண்ட முதலாவதுதவணைக் கடன் மீது 2022.11.04 வரையான வட்டியும் முதலுமாக 385,087,059.30 ரூபாயும் (முந்நூற்று எண்பத்தைந்து மில்லியன் எண்பத்தேழாயிரத்து ஐம்பத்தொன்பது ரூபாய் முப்பது சதம்) அத்துடன் 260,943,000.00 ரூபாய் (இருநூற்றறுபது மில்லியன் தொள்ளாயிரத்து நாற்பத்து மூவாயிரம் ரூபாய்) மீது ஆண்டுக்கு இருபத்து எட்டுத்தசம் நான்கு ஆறு (28.46%) என்ற வீதத்தில் 2022.11.05 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரையான மேலதிக வட்டியும் முதலாவது BOC SME விசேட IIகடன் மீது 2022.11.04 வரையான வட்டியும் முதலுமாக 35,139,688.50 ரூபாயும் (முப்பத்தைந்து மில்லியன் நூற்றுமுப்பத்தொன்பதாயிரத்து அறுநூற்று எண்பத்தெட்டு ரூபாய் ஐம்பது சதம்) அத்துடன் 23,838,332.00 ரூபாய் (இருபத்து மூன்றுமில்லியன் எண்ணூற்று முப்பத்தெட்டாயிரத்து முந்நூற்று முப்பத்திரண்டு ரூபாய்) மீது ஆண்டுக்கு பதினேழுதசம் இரண்டு இரண்டு (17.22%) என்ற வீதத்தில் 2022.11.05 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரையான மேலதிக வட்டியும் இரண்டாவது BOC SME விசேட IIகடன் மீது 2022.11.04 வரையான வட்டியும் முதலுமாக 29,339,574.04 ரூபாயும் (இருபத்தொன்பது மில்லியன் முந்நூற்று முப்பத் தொன்பதாயிரத்து ஐந்நூற்று எழுபத்து நான்கு ரூபாய் நான்கு சதம்) அத்துடன் 19,999,996.00 ரூபாய் (பத்தொன்பது மில்லியன் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்பதாயிரத்து தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றாறு ரூபாய்) மீது ஆண்டுக்கு பதினேழுதசம் இரண்டு இரண்டு (17.22%) என்ற வீதத்தில் 2022.11.05 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரையான மேலதிக வட்டியும் இரண்டாவது தவணைக் கடன் மீது 2022.11.04 வரையான வட்டியும் முதலுமாக 51,204,461.12 ரூபாயும் (ஐம்பத்தொருமில்லியன் இருநூற்று நான்காயிரத்து நாநூற்று அறுபத்தொரு ரூபாய் பன்னிரண்டு சதம்) அத்துடன் 31,166,610.00 ரூபாய் (முப்பத்தொரு மில்லியன் நூற்று அறுபத்தாறாயிரத்து அறுநூற்றுப் பத்துரூபாய்) மீது ஆண்டுக்கு பதினெட்டுத் தசம் ஏழு ஐந்து (18.75%) என்ற வீதத்தில் 2022.11.05 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரையான மேலதிக வட்டியும் வெரலப்பார, போகத்தரமுல்ல, வாத்துவ என்ற முகவரியிலுள்ள வரையறுக்கப்பட்ட ஈ.எம் ஹொட்டேல்ஸ் (தனியார்) நிறுவனத்தாரிடமிருந்து (முன்னாட் பணிப்பாளர்கள் வெரலப்பார ,போகத்தரமுல்ல, வாத்துவ என்ற முகவரியைச் சேர்ந்த திரு.அன்சிமோவ் எல்ஷாத், இல. 58/A, ஆசிரிநிவாச, அன்ஹெட்டிகம என்ற முகவரியைச் சேர்ந்த திரு. அன்ஹெட்டிகம கமரால்லகே கிரேஷான் ஷாம்லி வீரவர்தன, இந்நாட் பணிப்பாளர்கள் - வெரலப்பார, போகத்தரமுல்ல, வாத்துவஎன்ற முகவரியைச் சேர்ந்த திரு. அன்சிமோவ் எல்ஷாத், இல. 28, வலிகெட்டிய, பமுனுகம என்ற முகவரியைச் சேர்ந்த திரு. கண்டமுல்ல ஆரச்சிகே ஜோசப் டக்ளஸ் பீரிஸ்) வங்கிக்கு வருமதியாக உள்ளது.

2. மேற்குறிப்பிட்ட 2017.09.26ஆம் திகதியிட்ட 437ஆம் இலக்க ஈட்டு முறி, 2018.08.15 ஆம் திகதியிட்ட 700 ஆம் இலக்க ஈட்டு முறி என்பவற்றின் பேரில் பெறப்பட்ட முதலாவது தவணைக் கடன் மீது வருமதியாகவுள்ள 385,087,059.30 ரூபாயையும் (முந்நூற்று எண்பத்தைந்து மில்லியன் எண்பத்தேழாயிரத்து ஐம்பத்தொன்பது ரூபாய் எண்பது சதம்) முதலாவது BOC SME விசேட IIகடன் மீதுவருமதியாகவுள்ள 35,139,688.50 ரூபாயையும் (முப்பத்தைந்து மில்லியன் நூற்றுமுப்பத் தொன்பதாயிரத்து அறுநூற்று எண்பத்தெட்டு ரூபாய் ஐம்பது சதம்) இரண்டாவது BOC SME விசேட IIகடன் மீது வருமதியாகவுள்ள 29,339,574.04 ரூபாயையும் (இருபத்தொன்பது மில்லியன் முந்நூற்று முப்பத்தொன்பதாயிரத்து ஐந்நூற்று எழுபத்து நான்கு ரூபாய் நான்கு சதம்) இரண்டாவது தவணைக் கடன் மீது வருமதியாகவுள்ள 51,204,461.12ரூபாயையும் (ஐம்பத்தொரு மில்லியன் இருநூற்று நான்காயிரத்து நாநூற்று அறுபத்தொரு ரூபாய் பன்னிரண்டு சதம்) அத்துடன் 2022.11.05 தொடக்கம் விற்பனைத் திகதி வரையான மேற்குறிப்பிட்ட வட்டியையும் இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 26ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 19ஆம் பிரிவு (397ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய இங்கு கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த ஆதனத்தைப் பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3, விஹாரமாவத்த, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த M/S T & H ஒக்ஷன்ஸ் ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திரு. முதுகமுவேஹேவாவசம் துசித் கருணாரத்னவுக்கும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 21ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி, மொரட்டுவ அதிமேற்தரக்கிளையின் சிரேஷ்ட முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணை**

1. காணி பற்றிய விவரம்

a) மாவட்டம் : களுத்துறை
b) பிரதேச செயலகம் : களுத்துறை
c) கிராமசேவையாளர்பிரிவு : போகொத்தரமுல்ல மேற்கு
d) கிராமம் அல்லது நகரம் : போகத்தரமுல்ல
e) வீதி :
f) வரிமதிப்பீட்டு இலக்கம் :
g) நிலஅளவைப்பட இலக்கம் : 530015
h) தொகுதி இலக்கம் : 01
i) காணித்துண்டு இலக்கம் : 0249
j) பரப்பளவு : 0.3254ஹெக்டயர்
k) அறுதியளிக்கப்பட்ட பரப்பளவு : 0.3254 ஹெக்டயர்
l) கூட்டாட்சி(Condominium) ஆதனமெனில் கூறுகளின் எண்ணிக்கை :

**முன் பதிவுத் தொடர்பு:**

a) பதிவுசெய்த இடம் : களுத்துறை
b) உரித்துச் சான்றிதழ் இல. : 00080002244
c) உரித்தின் வகை : முதலாவது வகை

**இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக்கட்டளைப்படி.**

**பெயர் : திருமதி.ஐ.பி.கே.என்.பெரேரா**
**பதவி : சிரேஷ்ட முகாமையாளர்**

**இலங்கை வங்கி**
**மொரட்டுவ அதிமேற்தரக் கிளை**

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங்.
இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.
உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.
முதல் 15 சொற்களுக்கு 600/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 25 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65

தினகரன் வாரமஞ்சரி
சிறு விளம்பரங்கள்
சிறந்த பெறுபேறுகளுக்காக - விளம்பரம் செய்திடுவீர்
முதல் 15 சொற்களுக்கு 330/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 20 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
011 2 429 342 / 011 2 429 343
classified@lakehouse.lk

## கேள்வி அறிவித்தல்

# பாணந்துறை பிரதேச சபை வாத்துவ

### 2024ம் ஆண்டிற்காக இறைச்சிக் கடை மற்றும் சொத்துக்களின் விளைச்சலை குத்தகைக்கு விடல்

பாணந்துறை பிரதேச சபைக்குச் சொந்தமான கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ள சொத்துக்களின் உரிமையை 2024.01.01 முதல் 2024.12.31 வரை குத்தகைக்கு விடுவதற்காக பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 2023.10.25 மு.ப 10.00 வரை என்னால் ஏற்கப்படும். அன்று மு.ப 10.15 இற்கு கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்.

- அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறு குறித்த படிவக் கட்டணங்களை மற்றும் கேள்விப் பிணைத் தொகையைச் செலுத்தி 2023.10.24 பி.ப 3.00 வரை பாணந்துறை பிரதேச சபை தலைமையகத்தில் கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
- பாணந்துறை பிரதேச செயலக அதிகார பிரதேசத்திற்குச் சொந்தமான குடியிருப்பாளர்களிடம் இருந்து மட்டும் விலை மனுக்கள் கோரப்படும்.
- எதிர்காலத்தில் அரசினால் மேற்கொள்ளப்படும் கொள்கை அடிப்படையிலான தீர்மானத்தின் பிரகாரம் குறித்த தொகைக்கு மேலதிகமாக குத்தகை தொகையும் சேர்க்கப்படலாம்.
- கேள்விப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளும் போது தமது தேசிய அடையாள அட்டையை சமர்ப்பிக்க வேண்டும்.

**அட்டவணை**

| தொடர் இல | சொத்துக்கள் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புத் தொகை | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் (ரூ) | வருடாந்த கேள்வி குறைந்தபட்ச கேள்வி (ரூ) |
|---|---|---|---|---|
| **வாத்துவ உப அலுவலகம்** | | | | |
| 01 | மடவிலகொட மயான பூமி காணியின் சொத்துக்களின் விளைச்சல் | 87.15 | 300/= | 4357.50 |
| **தந்திரிமுல்ல உப அலுவலகம்** | | | | |
| 01 | அம்பலத்துவ மாட்டிறைச்சிக் கடை | 74,970/= | 3500/= | 3,748,500,00/= |
| **கெசல்வத்த உப அலுவலகம்** | | | | |
| 01 | ஹேனமுல்ல பொதுச்சந்தை இல.33 மாட்டிறைச்சிக் கடை | 113,610/= | 3,500/= | 5,680,500/= |
| 02 | ஹேனமுல்ல பொதுச்சந்தை இல.34 ஆட்டிறைச்சி / கோழியிறைச்சிக் கடை | 7,350/= | 3,000/= | 367,500/= |

கேள்வி விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க வேண்டிய விதம் மறற்றும் கேள்வி நிபந்தனைகள் பற்றிய மேலதிக விபரங்கள் கேள்விப் படிவங்கள் வழங்கப்படும் போது வழங்கப்படும்

**(038-2294567 / 038-2284767)**

**செயலாளர் மற்றும் அதிகார செயற்பாடுகளை**
**அமுல்படுத்தும் அதிகாரி**
**பாணந்துறை பிரதேச சபை**
**வாத்துவ**

## அஞ்சல் திணைக்களம்

### விலைமனுக்களுக்கான அழைத்தல்

### தகவல் தொழில்நுட்ப உபகரணங்களை வழங்கல், ஒப்படைத்தல், நிறுவுதல் மற்றும் பராமரித்தல்

1. பின்வரும் வகுதிகள் மற்றும் எண்ணிக்கையில் தகவல் தொழில்நுட்ப உபகரணங்களை வழங்கல், ஒப்படைத்தல், நிறுவுதல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றிற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து அஞ்சல் திணைக்களத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

| Lot No. | Category | Quantity |
|---|---|---|
| 01. | Branded Desktop Computers | 150 |
| 02. | UPS Machines | 150 |
| 03. | Laptops | 33 |
| 04. | Dot Matrix Printers LQ 310 | 115 |
| 05. | Dot Matrix Printers LQ 2090 | 10 |
| 06. | Laser Printers | 25 |

2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் நடத்தப்படும்.
3. தகுதித்தன்மை தகவுத்திறன்:
   (அ) செல்லுபடியாகும் தன்மையிலுள்ள வியாபார பதிவின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி.
   (ஆ) கடந்த மூன்று (03) வருட காலப்பகுதியில் வருடாந்த ஆகக் குறைந்த சராசரி நிதிப்புரள்வானது தகவல் உபகரணங்களுக்காக 5 மில்லியன் இலங்கை ரூபாவிற்கு நிகராக அல்லது மேற்பட்டதாகவிருந்திருத்தல் வேண்டும்.
   (இ) விலைமனுதாரர் தகவல் தொழில்நுட்ப உபகரணங்களில் ஆகக் குறைந்தது 1 வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   (ஈ) கடந்த 10 வருட காலப்பகுதியில் எந்தவொரு நிறுவனத்தினாலும் விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவிருந்திருத்தல் வேண்டும்.
4. 2023 ஒக்டோபர் 19 ஆம் திகதியன்று பி.ப. 2 மணி வரையும் அஞ்சல் மாஅதிபருக்கு மீளளிக்கப்படாத கட்டணமாக 1500 இ.ரூபாவை விலைமனுக்கோரல் ஆவணங்களுக்காக செலுத்திய பின்னர், கீழேயுள்ள முகவரிக்கு விலைமனுதாரரினாலேயே அல்லது விலைமனுதாரரின் பிரதிநிதிகளினால் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
5. 2023 ஒக்ரோபர் 20 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். மூடும் நேரத்தின் பின்னர் உடனடியாகவே கீழேயுள்ள முகவரியில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
6. இது தொடர்பான விலைமனு முன்னோடிக் கூட்டமானது 2023 ஒக்டோபர் 17 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு கொழும்பு-10, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை, 310 ஆம் இலக்கத்திலுள்ள அஞ்சல் திணைக்கள தலைமையலுவலுகம், அஞ்சல் மா அதிபரின் மாநாட்டு அறையில் நடைபெறும்.
7. விலைமனுக்கள் அவைகளை மூடும் திகதியிலிருந்து 91 நாட்காட்டி நாட்கள் வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
8. 2024 பெப்ரவரி 15 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருப்பதும் அஞ்சல் திணைக்கள அஞ்சல் மா அதிபரின் பெயரில் வழங்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் வங்கியொன்றினால் பின்வரும் பெறுமதிகளுக்காக வழங்கப்பட்ட விலைமனுப்பிணையொன்றுடன் (நிபந்தனையற்றது) அனைத்து விலைமனுக்களும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| Lot No. | Category | Bid Security Value (LKR) |
|---|---|---|
| 01. | Branded Desktop Computers | 375,000.00 |
| 02. | UPS | 22,500.00 |
| 03. | Laptops | 132,000.00 |
| 04. | Dot Matrix Printers LQ 310 | 135,000.00 |
| 05. | Dot Matrix Printers LQ 2090 | 27,000.00 |
| 06. | Laser Printers | 32,000.00 |

9. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை பெறுகைக்கான கணக்காளரிடமிருந்து 011-5746194 மற்றும் 011-4927249 ஆகிய தொலைபேசி இலக்கங்களினூடாக வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் பெற்று கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
10. விலைமனு ஆவணங்களுக்கான விண்ணப்பத்தில் வரையறுக்கப்பட்டவாறு விலைமனுதாரர் ஒரு தொகுதிக்கு அல்லது பல எண்ணிக்கையான தொகுதிகளுக்கு விலைமனுக்களை சமர்ப்பிக்கலாம்.

    **கணக்காளர் (பெறுகை),**
    **அஞ்சல் தலைமையலுவலகம், இல.: 310, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை,**
    **கொழும்பு-10.**

11. எந்தவொரு காரணத்தையும் முன்வைக்காமல் எந்தவொரு அல்லது அனைத்து விலைமனுக்களையும் நிராகரிப்பதற்குமான உரிமையையும் விலைமனுவின் எந்தவொரு பகுதியையும் ஏற்றுக் கொள்வதற்குமான உரிமையை அஞ்சல் திணைக்கள அஞ்சல் மாஅதிபர் கொண்டுள்ளார்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**அஞ்சல் திணைக்களம்,**
**இல. 310, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை,**
**கொழும்பு-10.**

**02.10.2023**

## நுவரெலியா மாநகர சபை

# வழங்குநர்களை பதிவு செய்தல் – 2024

2024ஆம் வருடத்தில் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வழங்கல்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக நுவரெலியா மாநகர சபையில் பதிவு செய்து கொள்வதற்கு உத்தேசிக்கும் ஒப்பந்தக்காரர்கள்/ உற்பத்தியாளர்கள்/ வழங்குநர்கள், முகவர்கள், அரசாங்க நிறுவனங்கள் மற்றும் எந்தவொரு நபர்களிடமிருந்தும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. விண்ணப்பங்களை 2023-12-31ஆம் திகதிக்கு முன்னர் ''மாநகர ஆணையாளர் மாநகர சபை நுவரெலியா'' என்ற முகவரிக்கு தபாலில் அனுப்பலாம். அல்லது நேரில் கொண்டு வந்து மாநகர சபையின் வழங்கல் பிரிவிற்கு ஒப்படைப்பதன் மூலம் பதிவு செய்து கொள்ளலாம் என்பதுடன் விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் '2024ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்' என குறிப்பிடுதல் வேண்டும். (இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிக்கமைவாக விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்தல் வேண்டும்)
02. பதிவுக் கட்டணமாக 1725.00 ரூபா (அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வெட் வரிகளுடன்) மீளளிக்கப்படாத கட்டணத்தை மாநகர சபை காசாளருக்குச் செலுத்துவதன் பேரில், மாநகர ஆணையாளர் நுவரெலியா என்ற பெயருக்கு எழுதப்பட்ட காசோலை, காசுக் கட்டளை மூலம் அல்லது மக்கள் வங்கியில் மாநகர சபையின் 134-1002-400-17-534 சேகரிப்புக் கணக்கிலக்கத்திற்கு வரவு வைத்துப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
03. நுவரெலியா மாநகர சபையினால் ஒப்புதல் அளிக்கப்பட்டதன் பின்னர் நுவரெலியா மாநகர சபையின் வழங்குநராக பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களுக்கு அது தொடர்பாக எழுத்து மூலம் அறிவிக்கப்படும்.
04. வழங்கப்படுகின்ற பொருட்கள் மற்றும் சேவைகள் உரிய தரத்துக்கு மற்றும் மாதிரிகளுக்கு அமைய இருத்தல் வேண்டும். மேலும் உடன்படிக்கையின் பிரகாரம் வழங்கல் மற்றும் சேவைகளை மேற்கொள்ளாத மற்றும் மூன்று முறை விலைகோரலுக்கு பதிலளிக்காதிருக்கின்ற வழங்குநர்களின் பெயர்கள் பதிவேட்டிலிருந்து நீக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
05. மாநகர சபையினால் மேற்கொள்ளப்படும் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**வழங்குநராகப் பதிவு செய்து கொள்வதற்கான நிபந்தனைகள்**

- பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களுக்குப் புறம்பாக தேவையான வேளைகளில் ஏனைய விலைக்கோரல்களின் மூலம் விலைகளைக் கோரி பொருட்களைக் கொள்வனவு செய்யும் அதிகாரம் இந்தச் சபைக்கு / மாநகர சபை ஆணையாளருக்கு உண்டு.
- தேவைப்படும் வேளைகளில் மாதிரிகளை (சாம்பல்) சமர்ப்பிக்காத மற்றும் கட்டளையின் பிரகாரம் உரிய வேளையில், தரமான, உயர்ந்த குணவியல்புகளைக் கொண்ட பொருட்களை வழங்காத வழங்குநர்களின் பதிவு எவ்வித முன்னறிவித்தலுமின்றி இரத்துச் செய்யப்படலாம்.
- பொருட்கள் வழங்கப்படும் நாள் முதல் ஆகக்குறைந்தது 01 மாத நாட்காட்டி நாட்கள் கடன் வசதி வழங்குநரால் வழங்கப்படுதல் வேண்டும்.

**விடய இலக்கம் 01**
**அலுவலக உபகரணங்கள் வழங்குதல்**

01. அலுவலக தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் வழங்கல் (மரம், இரும்பு மற்றும் பிளாஸ்திக்)
02. கணனி மற்றும் கணனி அச்சுப் பொறி, புகைப்படப் பிரதி இயந்திரம் தட்டச்சு ரோனியோ இயந்திரம், தொலைநகல் இயந்திரம் ஸ்கேனர் இயந்திரம்
03. நேரப் பதிவு இயந்திரம் விரல் ரேகை அடையாள இயந்திரம் வழங்குதல்
04. கெமரா, புரொஜெக்டர் மற்றும் வீடியோ உபகரணங்கள் (தொலைக்காட்சி, சீ.டீ/டீ.வீ.டீ. பிளேயர் சீ.டீ/டீ.வீ.டீ ரெக்கோடர் போன்றன வழங்குதல்)

**விடய இலக்கம் 02**
**அலுவலக பாவனைப் பொருட்கள் வழங்குதல்**

05. காகிதாதிகள், கணனி அச்சிடல் பொருட்கள் மற்றும் கணனி பாவனைப் பொருட்கள் என்பன வழங்குதல்
06. அலுவலக அச்சு வேலைகள் படங்கள் சட்டமிடல் மற்றும் விளம்பரப்பலகை வரைதல்
07. இறப்பர் முத்திரைகள், திகதி முத்திரைகள், பெயர் பலகை, பதக்கங்கள் மற்றும் விருதுகள், சின்னம், நினைவுப்படிகம் மற்றும் எழுத்தாக்கங்கள் வழங்குதல்
08. தைக்கப்பட்ட ஆடைகள், சீருடைக்கான சீருடைத்துணி, அலுவலக மேசைத்துணி மற்றும் திரைச்சீலைகள் வழங்குதல்
09. நூல் நிலையப் புத்தகங்கள் மற்றும் கிரந்தங்கள் வழங்கல்
10. தைக்கப்பட்ட விளையாட்டு உடைகள் வழங்குதல்
11. விளையாட்டுப் பொருட்கள் / மற்றும் விளையாட்டு உபகரணங்களை வழங்குதல்

**விடய இலக்கம் 03**
**அலுவலக பாவனைப் பொருள் சேவைகளை வழங்குதல்**

12. கணனி மற்றும் புகைப்படப்பிரதி இயந்திர திருத்தவேலைகள் மற்றும் சேவை செய்தல்
13. கணனி மென்பொருள் அபிவிருத்தி, நிறுவுதல் மற்றும் ஆலோசனை சேவைகள் வழங்குதல்
14. பாதுகாப்பு சேவை வழங்குதல்
15. வாடகை அடிப்படையில் போக்குவரத்து சேவை மற்றும் நிலப் பாவனை வாகனங்கள் (Land Vehicle) வழங்குதல்
16. அலுவலக உபகரண திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்பு சேவைகள்
17. துப்புரவேற்பாட்டுச் சேவைகளை வழங்குதல்
18. உள்ளக தொலைபேசி சேவை திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்பு வேலைகள் / தொடர்பு சேவைகள்
19. பயிற்சி பெற்ற, பயிற்சி பெறாத மனிதவலு வழங்குதல் (மேசன், தச்சர், தொழிலாளர் போன்றன)
20. வீடியோ பதிவு செய்தல் மற்றும் புகைப்படம் அச்சிடல்
21. ஒலிபெருக்கி முறைமைகளை வாடகைக்கு வழங்குதல்
22. மின்சார உபகரணங்கள் மற்றும் மின் பிறப்பாக்கி இயந்திர திருத்தவேலைகள்
23. உருக்கியொட்டும் வேலைகள்
24. மின்சார தொழில்நுட்ப சேவை
25. வாகனங்களை வாடகைக்கு வழங்குதல் (டிராக்டர் / பயணிகள் வாகனம் / டிப்பர் / கொம்பக்டர் / மரம் வெட்டும் இயந்திரம் போன்றன)
26. இயந்திரம் மற்றும் உபகரணங்களை வாடகைக்கு வழங்குதல்

**விடய இலக்கம் - 04**
**உற்சவ வேளைகளுக்காக பொருட்கள் வழங்குதல்**

27. சமைத்த உணவுப் பொதிகள் / சிற்றுண்டி பொதிகள், பான வகைகள் குடிநீர் மற்றும் உணவுபான சேவைகள் வழங்குதல்
28. மேற்கவிகைகள் / மேடைகள் / கதிரைகள் / மேசைகள் / உணவுத் தட்டுகள் / கண்ணாடிக் குவளைகள் போன்றன

**விடய இலக்கம் - 05**
**துப்புரவேற்பாட்டு உபகரணங்கள் மற்றும் மருந்து வகைகள் வழங்குதல்**

29. மேல்நாட்டு மருந்து வகைகள் வழங்குதல்
30. ஆயுர்வேத மருந்து வகை (உலர்ந்த மருந்து, உற்பத்தி செய்யப்பட்ட மருந்து, பச்சை மூலிகைகள், எண்ணெய் வகை வழங்குதல்)
31. மருத்துவ உபகரணங்கள் வழங்குதல்
32. துப்புரவேற்பாட்டுப் பொருட்கள் மற்றும் சலவை செய்பவை (சவர்க்கார வகை, துப்புரவேற்பாட்டுத் திரவ வகைகள், சுத்தம் செய்யும் திரவ வகைகள், சலவை தூள் வகைகள், நறுமண வகைகள், பிலீச்சின் தூள் (குளோரின்) மற்றும் சோடா வழங்குதல்

**விடய இலக்கம் - 06**
**விவசாயம் மற்றும் பூங்கா அலங்காரப் பொருட்கள் வழங்குதல்**

33. விவசாய நடுகைப் பொருட்கள் (கன்று வகை மற்றும் விதை வகை)
34. விவசாய இரசாயன பொருட்கள் வழங்குதல் (மருந்துகள், இரசாயன உரம், களைநாசினிகள், கிருமிநாசினி போன்றன)
35. செயற்கை இரசாயன பூக்களினால் செய்யப்பட்ட அலங்காரப் பொருட்கள்
36. புற்றரை மற்றும் தரை அலங்காரப் பொருட்கள்
37. கொம்போஸ்ட் உரம், சாணி உரம், இரசாயன உரம் மற்றும் கிருமிநாசினிப் பொருட்கள்

**விடய இலக்கம் - 07**
**கைத்தொழிலுக்கான உபகரணங்கள் வழங்குதல்**

38. நீர்க்குழாய் வேலைகளுக்கான உபகரணங்கள் (பி.வி.சி. துணையுறுப்புக்கள், HDPE நீர்க் குழாய் மற்றும் துணைப்பாகங்கள், ஜீ.ஐ, டீ.ஐ/ காஸ்ட் அயன் மற்றும் பித்தளை குழாய் துணைப்பாகங்கள்)
39. வீதி விளக்குகளுக்குத் தேவையான உபகரணங்கள் (டியுப் லயிட், சோக் (மின்சார வயர்கள் சகிதம்), மேர்க்கியூரி பல்ப், சோடியம் பல்ப், ஆர்ம் சகிதம் அடி 4 – 40W டியூப் லைட் சோக் சகிதம், அடி 2 – 20W டியூப் லைட் சோக் சகிதம், மின்சார சோக் 40W வயர் சகிதம் போன்ற துணையுறுப்புக்கள்)
40. இலகு பொறியியலாளர் இயந்திரம் மற்றும் உபகரணங்கள் வழங்குதல்
41. அரிந்த மரங்கள் வழங்கல் (மர வகைகளைக் குறிப்பிடுதல் வேண்டும்)
42. பாதுகாப்பு உடைகள், தலைக்கவசம் மற்றும் பாதணிகள்
43. பிணைச்சல் இரும்புத்தகடுகள் வழங்குதல்
44. அலுமினியம் இரும்பு சார்ந்த உற்பத்திகள் வழங்குதல்
45. ஹியூம் குழாய்கள் / கொங்கிறீட் தூண்கள் / எல்லைக் கற்கள் / சீமெந்து புளொக் கல் / இன்டர்லொக் / ரொட் கர்ப்ஸ் / கொங்கிறீட் சார்ந்த உற்பத்திகள் மற்றும் கொங்கிறீட் கலவைகள்

**விடய இலக்கம் - 08**
**கட்டிடப் பொருட்கள் வழங்குதல்**

46. கட்டிட உபகரணங்கள், நிர்மாணப் பொருட்கள் மற்றும் கட்டிடப் பொருத்தும் உபகரணங்கள் வழங்குதல்
47. நிறப்பூச்சு வகைகள் வார்னிசு மற்றும் பூசுவதற்குத் தேவையான உபகரணங்கள் வழங்குதல்
48. மின்சார இணைப்பு உபகரணங்கள் வழங்குதல்
49. சீலர், வுட் பினிஷ், தினர் வகைகள் வழங்குதல்
50. நிர்மாணத்துக்காக தேவையான இரும்பு, உருக்கு மற்றும் அலுமினியம்
51. சீமெந்து
52. செங்கல்

**விடய இலக்கம் 09**
**வீதி அபிவிருத்தி மற்றும் திருத்தவேலைகளுக்குத் தேவையான பொருட்கள் வழங்குதல்**

53. கருங்கல், ஏ.பீ.சி, மெடல் மற்றும் மணல் வழங்குதல்
54. தார் மற்றும் திரவத்தார் (சீ.ஆர்.எஸ். மற்றும் சீ.எஸ்.எஸ்.) வழங்குதல்
55. வீதிக் குறியீடு பூச்சு வழங்குதல்

**விடய இலக்கம் 10**
**கண்காட்சிகளை நடாத்துவதற்கான பொருட்களை வாடகைக்கு வழங்குதல்**

56. கண்காட்சி கூடங்கள் மற்றும் மேடைகள்
57. மின்சார அலங்கார வேலைகள்
58. கதிரை மேசை மற்றும் உற்சவப் பொருட்கள்

**விடய இலக்கம் 11**
**குப்பை போக்குவரத்து உபகரணங்கள் வழங்குதல்**

59. குப்பை போக்குவரத்து டிராக்டர் மற்றும் டிரேலர் வழங்குதல்
60. குப்பை போக்குவரத்து கைவண்டிகள் வழங்குதல்
61. குப்பை சேகரிப்பதற்காக பிளாஸ்திக் பொருட்கள் வழங்குதல்
62. குப்பைகளை சேகரித்தல் மற்றும் போக்குவரத்து சேவை அடங்கலான துப்புரவேற்பாட்டு சேவை மற்றும் திருத்தவேலைகள்

**விடய இலக்கம் 12**
**போக்குவரத்து பிரிவுக்குத் தேவையான உபகரணங்கள் வழங்குதல்**

63. டயர், டியூப் மற்றும் பட்டறிகள் வழங்குதல்
64. வாகன உதிரிப்பாகங்கள் (வேன், மோட்டார் சைக்கிள், டிராக்டர், கல் உருளைகள் உட்பட அனைத்து வாகனங்களுக்கான உதிரிப்பாகங்கள்)
65. தீயணைப்பு உபகரணங்கள் வழங்குதல் (பொருத்துதல் உட்பட)
66. வாகனத் திருத்தவேலைகளைச் செய்தல்
67. வாகனங்களை சேர்விஸ் செய்தல்

**விடய இலக்கம் 13**
**நிர்மாண ஒப்பந்தக்காரர்கள் மற்றும் பயிற்சி பெற்ற/பயிற்சி பெறாத தொழிலாளர் சேவைகளை வழங்குதல்**

- (ஒப்பந்தக்காரர்கள், நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் (CIDA) பதிவு அடிப்படையாகக் கொள்ளப்படும்)

மேலதிக விபரங்கள் மற்றும் விளக்கங்களை மாநகர கணக்காளர்/ மாநகர பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**எஸ்.பி.கே. போதிமான்ன,**
**மாநகர ஆணையாளர் (பதில்),**
**மாநகர சபை, நுவரெலியா.**
**தொலைபேசி இல. (052-2222183)**

### 2024ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவம்

1. விண்ணப்பதாரரின் / நிறுவனத்தின் பெயர்:...............................
2. விண்ணப்பதாரரின் / நிறுவனத்தின் முகவரி: ............................
3. தொலைபேசி இலக்கம் நிலையானது.............கையடக்கம் ......
4. மின்னஞ்சல் முகவரி: ..........................................................
5. பதிவு செய்வதற்கு உத்தேசிக்கும் விடய இலக்கம்: ................

| தொ. இல. | விடய இலக்கம் | தொடர் இலக்கத்துடன் மற்றும் பொருள்/சேவை |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |
| 6. | | |
| 7. | | |
| 8. | | |
| 9. | | |
| 10. | | |

6. வழங்க இயலுமான வேறு பொருட்கள் மற்றும் சேவைகள் உள்ளதாயின் அது தொடர்பான விபரங்கள்:
   ..........................................................................................
7. வியாபாரப் பதிவு இலக்கம் மற்றும் திகதி:...............................
8. வெட் (VAT) வரி இலக்கம்:..........................................
   (சான்றுபடுத்தப்பட்ட பிரதியொன்றை இணைத்தல் வேண்டும்)
9. பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் இலக்கம் மற்றும் திகதி: ........

(பற்றுச்சீட்டின் பிரதியொன்றை இணைத்தல் வேண்டும்)

வழங்குநர்களைப் பதிவு செய்து கொள்வதற்கான நிபந்தனைகள் மற்றும் விதிகளின் கீழ் குறித்த பொருள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு கட்டுப்படுகிறேன் என உறுதி கூறுகிறேன்.

கையொப்பம்: ..........................................................................
பெயர்: ..................................................................................
இறப்பர் முத்திரை:....................................................................

Best way to fulfil your Future Dreams
SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service
E-mail your advertisements to,
classified@lakehouse.lk
Piyumi- 0112 429 383   0112 429 347 | Gayani - 0112 429 343 / 342

## ஆசிய விளையாட்டுப் போட்டி:

# இலங்கையின் பதக்க எதிர்பார்ப்புடைய இரு மெய்வல்லுனர் போட்டிகள் இன்று

**சீனாவிலிருந்து நிரோஷான் பிரியங்கர**

ஆசிய விளையாட்டு போட்டியின் இலங்கையின் இரு பதக்க எதிர்பார்ப்பான பெண்களுக்கான 800 மீற்றர் மற்றும் ஆண்களுக்கான 400 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டிகள் இன்று (03) சீனாவின் ஹான்சோ நகரின் ஒலிம்பிக் விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இலங்கை நேரப்படி காலை 6.50க்கு ஆரம்பமாகும் 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் கயந்திகா அபேரத்ன மற்றும் தருஷி கருணாரத்ன போட்டியிடவுள்ளதோடு கயந்திகா ஆரம்ப சுற்றின் இரண்டாவது போட்டியிலும் தருஷி மூன்றாவது போட்டியிலும் பங்கேற்கவுள்ளனர்.

அதற்கு முன்னர் நதீஷா லேகம்கே பெண்களுக்கான ஈட்டி எறிதல் போட்டியில் இலங்கை நேரப்படி 5.40க்கு போட்டியிடவுள்ளார். ஆண்கள் அஞ்சலோட்ட அணி காலை 7.20க்கு ஆரம்பமாகும் ஆரம்ப சுற்றின் இரண்டாவது போட்டியில் பங்கேற்பதோடு இலங்கை அஞ்சலோட்ட அணியில் அருண தர்ஷன, காலிங்க குமார, ராஜித்த ராஜகருணா, பசிந்து கொடிகார மற்றும் தினுக தேஷான் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.



இதேவேளை இலங்கையின் பதக்க எதிர்பார்ப்பொன்று நேற்று முன்தினம் (01) பறிபோனது. பெண்களுக்கான 1500 மீற்றர் ஓட்டப் போட்டியின் இறுதிப் போட்டியில் பங்கேற்ற கயந்திகா ரத்னாயக்க நான்காவது இடத்தை பெற்றார். எனினும் அவர் 4:18.77 நிமிடங்களில் போட்டியை நிறைவு செய்து இந்த போட்டி நிகழ்ச்சியில் இலங்கை வீராங்கனை ஒருவரின் சிறந்த காலத்தை பதிவு செய்தார்.

இதற்கு முன்னர் 1998இல் பாங்கொக்கில் நடந்த ஆசிய விளையாட்டுப் போட்டியில் கோஷனி சமரகோன் 4:35.00 நிமிடங்களில் போட்டியை நிறைவு செய்ததே சிறந்ததாக இருந்தது.

இம்முறை ஆசிய விளையாட்டு போட்டியின் பெட்மின்டன் போட்டியில் பங்கேற்றிருக்கும் ஒரே வீரரான விரேன் நெத்தசிங்க நேற்று ஆடவர் ஒற்றையர் பிரிவில் 64 பேர் சுற்றில் பங்கேற்று பூட்டானின் அனிஷ் குருங்கை 2–0 என தோற்கடித்தார். அவர் இன்று 32 பேர் சுற்றில் விளையாடவுள்ளார்.

ஸ்குவஷ் ஆடவர் ஒற்றையர் பிரிவின் 16 வீரர்கள் சுற்றுக்கு தகுதி பெற்ற ரவிந்து லக்சிறி மலேசியாவின் எடீன் இட்ரக்கி உடன் போட்டியிட்டதோடு அதில் அவர் தோல்வியை சந்தித்தார். இதில் கலப்பு இரட்டையர் பிரிவின் பி குழுவில் போட்டியிடும் இலங்கை அணி நேற்று பிலிப்பைன்ஸுக்கு எதிரான போட்டியில் 2–1 என தோல்வியை சந்தித்தது. இலங்கை அணி இன்று சீனாவை எதிர்கொள்ளவுள்ளது.

இதேவேளை அம்பெறிதல் கம்பௌண்ட் ஆடவர் ஒற்றையர் பிரிவின் 32 பேர் சுற்றில் போட்டியிட்ட சஞ்ஜீவ வசந்த குமார மொகோலிய வீரரை தோற்கடித்து 16 பேர் சுற்றுக்கு தகுதி பெற்றார். என்றாலும் 16 பேர் சுற்றில் சீன தைபே வீரரை எதிர்த்தாடிய சஞ்ஜீவ தோல்வியை சந்தித்தார்.

அம்பெறிதல் போட்டியின் பெண்கள் பிரிவில் போட்டியிட்ட அனுராதா கருணாரத்ன ஐக்கிய அரபு இராச்சிய வீராங்கனைக்கு எதிராக 135–127 என வெற்றியீட்டியபோதும் 16 பேர் சுற்றில் இந்திய வீராங்கனையிடம் தோல்வியை சந்தித்தார்.

நேற்று ரிகர்வ் ஆடவர் பிரிவின் இறுதி 32 பேர் போட்டியில் பங்கேற்ற சஜீவ் டி சில்வா கசகஸ்தான் வீரரிடம் தோல்வி அடைந்தார். இதன்படி இம்முறை ஆசிய விளையாட்டுப் போட்டியில் அம்பெறிதலில் இலங்கையின் பங்கேற்பு பதக்கம் எதுவும் இன்றி முடிவுக்கு வந்தது.

இதேவேளை இலங்கையின் பதக்க எதிர்பார்ப்பான ஆசிய விளையாட்டுப் போட்டியின் ஆடவர் கிரிக்கெட் ஆட்டத்தின் காலிறுதி போட்டி இன்று (03) ஆரம்பமாகவுள்ளது. ஆரம்ப சுற்றில் போட்டியிட்ட நேபாளம், ஹொங்கொங் மற்றும் மலேசியா இந்த சுற்றுக்கு தகுதி பெற்றதோடு ஐ.சி.சி தரப்படுத்தலில் முன்னணியில் இருக்கும் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, பங்களாதேஷ் மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகள் காலிறுதி சுற்று தொடக்கம் போட்டியிடவுள்ளன.

இன்று முதல் காலிறுதிப் போட்டியில் இந்தியா மற்றும் நேபாள அணிகள் மோதவிருப்பதோடு இரண்டாவது போட்டி பாகிஸ்தான் மற்றும் ஹொங்கொங் அணிகளுக்கு இடையில் இடம்பெறவுள்ளது. இலங்கை தனது காலிறுதிப் போட்டியில் நாளை (4) ஆப்கானிஸ்தான் அணியை எதிர்கொள்ளவுள்ளது.

## மட்டு கடற்கரை கால்பந்து



**முள்ளிப்பொத்தானை குறூப் நிருபர்**

சர்வதேச சுற்றுலா தினத்தினை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்ட செயலகம் நடாத்திய கடற்கரை கால்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் பெண்கள் பிரிவில் பன்சேனை இளைஞர் விளையாட்டுக் கழகமும் ஆண்கள் பிரிவில் ஸ்ரீ முருகன் விளையாட்டுக் கழகமும் வெற்றியீட்டின. கல்லடி கடற்கரையில் கடந்த வெள்ளிக்கிழமை (29) நடைபெற்ற இந்தப் போட்டியில் 24 ஆண்கள் அணியும் 4 பெண்கள் அணியும் பங்கேற்றன. இதில் பெண்கள் பிரிவில் தன்னாமுனை புனித ஜோசப் விளையாட்டுக் கழகம், அம்பலாந்துறை கதிரவன் விளையாட்டுக் கழகம் முறையே இரண்டு மற்றும் மூன்றாம் இடங்களை பிடித்தன. ஆண்கள் பிரிவின் 2ஆம் இடத்தை இக்னேசச் அணியும் 3ஆம் இடத்தை லைட்ஹவுஸ் விளையட்டுக் கழகமும் வென்றன.



மெர்கன்டைல் ஏ பிரிவு நொக் அவுட் ஹொக்கி போட்டியில் சம்பியனான கொமர்ஷல் வங்கி அணியை படத்தில் காணலாம். எச்.என்.பி அணிக்கு எதிராக அண்மையில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் கொமர்ஷல் வங்கி அணி 3–1 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

## வை.எம்.எம்.ஏ. ஏறாவூர் வெற்றி

**ஒலுவில் கிழக்கு தினகரன், ஏறாவூர் சுழற்சி நிருபர்கள்**



அகில இலங்கை வை.எம்.எம். பேரவையின் டொக்டர் ஏ.எம்.ஏ. அஸீஸ் ஞாபகார்த்த கால்பந்தாட்ட வெற்றிக் கிண்ணத்தை வை.எம்.எம்.ஏ. ஏறாவூர் அணி முதல் தடவையாக தனதாக்கிக் கொண்டது.

அகில இலங்கை வை.எம்.எம். பேரவையின் திருகோணமலை மாவட்டப் பணிப்பாளர் எம்.எம். முக்தார், திருகோணமலை மாவட்ட வை.எம்.எம்.ஏ. கிளைகள் மற்றும் பேரவை இணைந்து தேசிய ரீதியில் வை.எம்.எம்.ஏ.கள் கலந்து கொண்ட கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி திருகோணமலை ஏகாம்பரம் விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் (01) நடைபெற்றது.

இதில் வை.எம்.எம்.ஏ. வம்மானைக்கு எதிராக 2–1 என்ற கோல் கணக்கில் வை.எம்.எம்.ஏ. ஏறாவூர் அணி வெற்றி பெற்றது. மூன்றாமிடத்தை வை.எம்.எம்.ஏ. புத்தளம் அணி கைப்பற்றியது.

# ஆப்கான் அணிக்கு எதிராக இலங்கை அணி இன்று இறுதி பயிற்சிப் போட்டியில் களத்தில்



உலகக் கிண்ணத்திற்கு முன்னதாக இலங்கை அணி தனது கடைசி பயிற்சிப் போட்டியில் இன்று (03) ஆப்கானிஸ்தானுக்கு எதிராக மோதவுள்ளது.

பங்களாதேஷுக்கு எதிரான முதல் பயிற்சிப் போட்டி நடைபெற்ற அதே, குவஹாத்தி பார்சபரா கிரிக்கெட் அரங்கில் பகலிரவு ஆட்டமாக இன்றைய போட்டி நடைபெறும். முதல் பயிற்சிப் போட்டியில் இலங்கையின் துடுப்பாட்ட வீரர்கள் மற்றும் பந்துவீச்சாளர்கள் சோபிக்கத் தவறிய நிலையில் பங்களாதேஷுக்கு எதிரான அந்த ஆட்டத்தில் இலங்கை 7 விக்கெட்டுகளால் தோல்வியை சந்தித்தது.

இதனால் இன்றைய போட்டியில் உலகக் கிண்ணத்தை எதிர்கொள்வதற்கு இலங்கை வீரர்கள் தனது திறமையை உறுதி செய்வது கட்டாயமாக உள்ளது. குறிப்பாக தொடர்ந்து துடுப்பாட்டத்தில் சோபிக்கத் தவறிய தசுன் ஷானக்க முதல் பயிற்சிப் போட்டியில் 3 ஓட்டங்களையே பெற்றார். இதனால் அவர் இன்றைய தினம் ஓட்டங்களை பெறுவது உலகக் கிண்ணத்தில் ஆட உதவியாக அமையும்.

முதல் பயிற்சிப் போட்டியின்போதும் 34 ஓட்டங்களை பெற்ற நிலையில் தோள்பட்டை காயத்தால் வெளியேறிய குசல் ஜனித் பெரேராவுக்கு இன்றைய தினம் ஓய்வு அளிக்கப்பட வாய்ப்பு உள்ளது.

பங்களாதேஷுக்கு எதிரான முதல் பயிற்சிப் போட்டியில் இலங்கை அணி சார்பில் ஆரம்ப வீரர் பத்தும் நிசங்க (68) மற்றும் தனஞ்சய டி சில்வா (55) ஆகியோர் மாத்திரமே அரைச்சதம் பெற்றதோடு இலங்கை அணி 49.1 ஓவர்களில் 263 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது.

இலங்கை பந்துவீச்சில் நெருக்கடி கொடுக்காத நிலையில் பங்களாதேஷ் அணி 42 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை இலகுவாக எட்டியது. எதிர்வரும் ஒக்டோபர் 05 ஆம் திகதி இந்தியாவில் ஆரம்பமாகவும் ஒருநாள் உலகக் கிண்ணப் போட்டியில் இலங்கை அணி தனது முதல் ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணியை எதிர்கொள்கிறது. இந்தப் போட்டி ஒக்டோபர் 07 ஆம் திகதி டெல்லியில் நடைபெறும்.

## சர்வதேச செய்திகள்

## தேவாலய மேற்கூரை இடிந்து 10 பேர் பலி



மெக்சிகோவில் தேவாலயம் ஒன்றில் கூரை இடிந்து விழுந்ததில் பத்துப் பேர் கொல்லப்பட்டு மேலும் 20 பேர் இடிபாட்டில் சிக்கியுள்ளனர்.

சியுடாட் மெட்ரியோ நகரில் உள்ள சான்டா க்ரூஸ் தேவாலயத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (01) இடம்பெற்ற இந்த விபத்துக் காரணமாக 49 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தேவாலயத்திற்குள் சுமார் 100 பேர் ஆராதனையில் ஈடுபட்டிருந்த போதே கூரை இடிந்து விழுந்திருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதில் இடிபாடுகளில் சிக்கியவர்களில் சிறுவர்களும் இருந்ததாகவும் அவர்களை காப்பற்றுவதற்கு மீட்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கப்பட்டிருந்ததாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## நீதிமன்றில் அஜராகிறார் டிரம்ப்



தன் மீதான வழக்கு விசாரணைக்காக நியூயோர்க் நீதிமன்றத்தில் ஆஜராக இருப்பதாக முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

“என்னுடைய நற்பெயருக்கு ஏற்பட்டிருக்கும் சோதனையை எதிர்த்துப் போராட நான் நீதிமன்றம் செல்கிறேன்” என்று அவர் தமது ‘ட்ரூத் சோசியல்’ பக்கத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (01) பதிவிட்டுள்ளார்.

சொத்துகளின் மதிப்பை மோசடியாக உயர்த்தியதாக அவர் மீது தொடரப்பட்டுள்ள வழக்கு போலியானது என்று டிரம்ப் விமர்சித்துள்ளார்.

மேலும், அந்த வழக்கைத் தொடர்ந்ததற்காக நியூயோர்க் மாநிலத் தலைமைச் சட்ட அதிகாரி லெட்டிசியா ஜேம்ஸ் மற்றும் அந்த வழக்கின் நீதிபதியையும் தமது பதிவில் அவர் கடுமையாக விமர்சித்துள்ளார்.

டிரம்ப்பும் அவரது குடும்ப வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளவர்களும் தொழிலின் தேவைகளுக்கு ஏற்ற வகையில் சொத்துகளின் மதிப்பை மோசடியான முறையில் உயர்த்தியது கண்டறியப்பட்டதாக நியூயோர்க் மாநில நீதிபதி ஆர்தர் எங்கோரோன் கடந்த வாரம் தெரிவித்திருந்தார்.

ஆனால், மோசடியில் ஈடுபடவில்லை என்று டிரம்ப்பும் வழக்கில் சம்பந்தப்பட்ட மற்றவர்களும் வாதிட்டனர்.

2022 செப்டம்பரில் இருந்தே டிரம்ப் மீது தலைமைச் சட்ட அதிகாரி ஜேம்ஸ் வழக்குத் தொடுத்து வருகிறார்.

டிரம்ப், அவரது இரு மகன்கள், டிரம்ப் நிறுவனம் மற்றும் சிலர், சொத்துகளை மதிப்பிட்ட விதத்தில் மோசடியை அரங்கேற்றியதாக அவர் குற்றம்சாட்டி இருந்தார்.

## கொவிட் தடுப்பூசியை உருவாக்க உதவிய இரு விஞ்ஞானிகளுக்கு நோபல் அறிவிப்பு



கொவிட் தொற்றுநோய்க்கான எம்.ஆர்.என்.ஏ தடுப்பூசிகளை கண்டுபிடிக்க வழிவகுத்த தொழில்நுட்பத்தை உருவாக்கிய இரண்டு விஞ்ஞானிகளுக்கு மருத்துவத்திற்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

டொக்டர் கேட்டலின் கரிகோ மற்றும் டொக்டர் ட்ரூ வேஸ்மேன் ஆகியோர் இதைப் பகிர்ந்துகொள்கின்றனர்.

இந்தத் தொழில்நுட்பம் பெருந்தொற்றுப் பேரிடருக்கு முன் சோதனை கட்டத்திலேயே இருந்தது. ஆனால், தற்போது அது உலகம் முழுவதும் பல கோடி உயிர்களைக் காப்பாற்றி வருகிறது.

கொவிட் தொற்றுநோய்க்காக உருவாக்கப்பட்ட இந்த எம்.ஆர்.என்.ஏ தொழில்நுட்பம் தற்போது புற்றுநோய் உட்படப் பல்வேறு நோய்களுக்கும் பலன் தருமா என்பது குறித்த ஆய்வுகள் நடந்து வருகின்றன.

வைரஸ், பக்டீரியா போன்ற அச்சுறுத்தல்களை அடையாளம் கண்டு எதிர்செயலாற்ற நம் உடலில் உள்ள நோய் எதிர்ப்பு மண்டலத்தைத் தயார்படுத்தும் வேலையை தடுப்பூசிகள் செய்கின்றன.

கொவிட் பேரிடரின்போது உருவாக்கப்பட்ட, மொடர்னா, பைசர் ஆகிய இரண்டு தடுப்பூசிகளும் எம்.ஆர்.என்.ஏ தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டவையாகும்.

## ட்ரக் கவிழ்ந்ததில் பத்து கியூப குடியேறிகள் பலி



தெற்கு மெக்சிகோ மாநிலமான சியாபாஸில் சரக்கு வண்டி ஒன்று கவிழ்ந்ததில் அதற்குள் ஒளிந்து வந்த 10 கியூப நாட்டு குடியேறிகள் உயிரிழந்துள்ளனர்.

குவாந்தமாலா எல்லைக்கு அருகில் நெடுஞ்சாலை ஒன்றில் இந்த விபத்து இடம்பெற்றதாக உள்ளூர் பாதுகாப்பு அதிகாரிகளை மேற்கோள் காட்டி ஏ.எப்.பி செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. இதில் மேலும் 17 பேர் காயமடைந்திருப்பதோடு உயிரிழந்தவர்களில் குழந்தை ஒன்றும் இருப்பதாக கூறப்படுகிறது.

பலரையும் ஏற்றிச் செல்வதற்கு பொருத்தமற்ற அந்த டிரக் வண்டியின் ஓட்டுநர் சம்பவ இடத்தில் இருந்து தப்பிச் சென்றுள்ளார். அமெரிக்காவை அடைய முயற்சிக்கும் குடியேறிகள் பயன்படுத்தும் பசிபிக் கடற்கரையை ஒட்டிய நெடுஞ்சாலையில் கடந்த ஞாயிறன்று (01) இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

## உக்ரைனுக்கு தொடர்ந்தும் ஆதரவளிக்க பைடன் உறுதி



அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் உக்ரைனுக்குத் தொடர்ந்து ஆதரவு வழங்க உறுதியளித்துள்ளார்.

அமெரிக்க அரசாங்கத்தின் முடக்கத்தைத் தவிர்க்கும் தற்காலிக உடன்பாட்டில் உக்ரைனுக்கான ஆறு பில்லியன் டொலர் கூடுதல் உதவி சேர்த்துக் கொள்ளப்படவில்லை. அதை ஒட்டி ஜனாதிபதி பைடன் பேசினார். குடியரசுக் கட்சியின் தீவிரப் போக்குடைய உறுப்பினர்கள் சிலர் உக்ரைனுக்குக் கூடுதல் இராணுவ உதவி வழங்குவதை எதிர்க்கின்றனர்.

போர் குறித்த பைடனின் அணுகுமுறையையும் அவர்கள் ஏற்கவில்லை. ஆனால், அமெரிக்காவிடமிருந்து உக்ரைனுக்குத் தொடர்ந்து ஆதரவு கிடைக்கும் என்று பைடன் குறிப்பிட்டார்.

எந்தச் சூழலிலும் உக்ரைனுக்கான உதவி தடைப்படுவதை அனுமதிக்கப் போவதில்லை என்றார் அவர்.

உக்ரைனுக்கு இதுவரை அமெரிக்கா 46 பில்லியன் டொலர் இராணுவ உதவியை வழங்கியுள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஒக்டோபர் மாதம் 3ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.